பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 13 செவ்வாய்க்கிழமை (26.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 061

# இருவரில் ஆறாவது ஜனாதிபதி யார்?
# நாளை விடிந்த பின் இறுதி முடிவு



## தலையெழுத்து இன்று தீர்மானிக்கப்படும்



கொழும்பு, ஜனவரி 26

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதிப் பதவியில் தொடர்ந்து நீடிப்பாரா அல்லது எதிரணியின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா அடுத்த ஜனாதிபதியாவாரா என்பதைத் தீர்மானிக்கும் வாக்களிப்பு இன்று நடைபெறுகின்றது.

நாட்டினதும் இந்த இரு தலைவர்களினதும் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் இத்தேர்தலின் முடிவு பெரும்பாலும் நாளை விடியும்போது தெளிவாகி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல்வன்முறைகள் மற்றும் வாக்கு மோசடிகள் இடம்பெறலாம் என்ற எச்சரிக்கைகளுக்கு மத்தியில் இலங்கை மக்கள் தமது ஆறாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக இன்று வாக்களிக்கின்றனர்.

ஆயுத மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபின்னர், இடம்பெறுகின்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 11 ஆயிரத்து 98 வாக்களிப்பு நிலையங்களில் ஒரு கோடி 40 லட்சத்து எட்டாயிரத்து ஐந்நூறு வாக்காளர்கள் தமது வாக்குரிமையைச் செலுத்தத் தகுதி பெற்றுள்ளனர். தலைநகர் கொழும்பில் ஆயிரத்து 17 வாக்களிப்பு நிலையங்களில் 15 லட்சத்து 21 ஆயிரத்து 854வாக்காளர்களும், கம்பஹாவில் 942 நிலையங்களில் (23ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டை கட்டாயமல்ல; எட்டுவகை ஆவணங்களில் ஒன்று போதுமானது

கொழும்பு, ஜன. 26

வாக்காளர் அட்டை இல்லாவிடினும், வாக்காளர் பதிவேட்டில் பெயர்ப்பதிவு உள்ளவர்கள் தங்களின் அடையாளத்தை உரிய முறையில் நிரூபித்து வாக்களிக்க முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாகத் தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-ஏதேனும் காரணங்களுக்காக ஒரு வாக்காளர் தமது வாக்காளர் அட்டையைத் தொலைத்திருந்தால் அல்லது அது அவருக்குக் கிடைக்காமல் போயிருந்தால் கூட அவர் தமது வாக்குரிமையைப் பிரயோகிக்க முடியும். (24ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் 1,000 ரூபாவுக்கு அடையாள அட்டை கொள்வனவு

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு, ஜன. 26

வவுனியா இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களில் வதியும் வாக்காளர்களிடம் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபா பணம் கொடுத்து அடையாள அட்டைகள் வாங்கப்படுகின்றன என அரசின் மீது ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது.

அத்துடன், தேர்தல் துஷ்பிரயோகங்களை மேற்கொள்ளவென வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு தெற்கிலிருந்து பெருந்தொகை சிங்கள மக்கள் அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் (24ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் வீட்டைச் சோதனையிடுமாறு உத்தரவு பிறப்பிக்க நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு, ஜன. 26

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டைச் சோதனையிடுவதற்கான 'வாரண்ட்' உத்தரவு ஒன்றை விடுக்குமாறு கோரி குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்தைக் கொழும்பு நீதிவான் சந்தனி மீகொட நேற்று நிராகரித்துவிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இழிவுபடுத்தும் சுவரொட்டிகளும், ஆயுதங்களும் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன எனத் தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது எனக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## படைத்தரப்பிலிருந்து தப்பிய 20 பேர் நேற்று மடக்கிப் பிடிப்பு

கொழும்பு, ஜன. 16

கொக்கரெல்ல பிரதேசத்தில் இராணுவத்தில் இருந்து சட்டவிரோதமாகத் தப்பிச்சென்ற விஷேட அதிரடிப்படை யினர் உட்பட 20 பேர் இராணுவ பொலிஸாரினால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் (24ஆம் பக்கம் பார்க்க)

## பிரதான வேட்பாளர்கள் இருவரும் பிரசாரத்துக்கு தலா 100 கோடி ரூபா!

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களும் தலா 100 கோடி ரூபாவை தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக செலவிட்டுள்ளனர் என நான்கு முன்னணி தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல், பவ்ரல், சீ.எம்.வி.ஈ. மற்றும் கபே ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

தேர்தல் பிரசாரப் பணிகள் முடிவடைந்த கடந்த 23ஆம் திகதி வரையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பும் தலா சுமார் 100 கோடி ரூபா நிதியில் பிரசாரப் பணிகளை (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத்தூதரகம்?

கொழும்பு, ஜன. 26

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் ஒன்றை அமைப்பதற்குப் புதுடில்லி நடவடிக்கை எடுத்துவருகிறது என்று நம்பகமாக அறியப்படுகின்றது.

யுத்தம் முடிவுற்ற நிலையில் வடக்கு அபிவிருத்திக்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## நாளை விடுமுறை தினம் அரசுத் தரப்பில் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு இன்று முடிவடைந்ததும் நாளை (27 ஆம் திகதி புதன்கிழமை) பொது மற்றும் வங்கிகளின் விடுமுறை தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாகப் பொது, நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது எனத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்று இடம்பெறுகின்ற தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் உத்தியோகத்தர்களுக்குப் போதிய விடுப்பை வழங்கவேண்டுமென தொழில் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேர்தல்கள் சட்டத்தின்படி இந்த விடுப்பு வழங்கப்படவேண்டும் என அமைச்சு கேட்டுள்ளது. (சி)

## யாழ்.மாவட்டத் தேர்தல் முன்னாயத்த ஏற்பாடுகள் நேற்றுப் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜன.26

இன்று நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலுக்காக யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் முன்னாயத்த நடவடிக்கைகள் அனைத்தும் நேற்று நிறைவடைந்தன.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இருந்து 529வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப்பெட்டிகள் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களின் அத்தியட்சகர்களினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. சர்வதேச தேர்தல் கண்காணிப்பு குழுவின் பிரதிநிதிகள் இவற்றை கண்காணித்ததன் பின்னர் பொலிஸாரின் பாதுகாப்புடன் உரிய நிலையங்களுக்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியான தேர்தலுக்கு ஜனாதிபதி மஹிந்த அழைப்பு

கொழும்பு, ஜன. 26

வன்முறைகளற்ற அமைதியான தேர்தலொன்றிற்கு அழைப்பு விடுத்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதனை உறுதி செய்வதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயார் எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனவரி 26 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன.

கடந்த மே மாதம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்புக்கான சகல ஏற்பாடுகளும் நாடளாவிய ரீதியில் நேற்றுப் பூர்த்தி

கொழும்பு, ஜன. 26

இன்று நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பிற்கான நடவடிக்கைகள் அனைத்தும் வெற்றிகரமாகப் பூர்த்தியாகியுள்ளன எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வாக்குப் பெட்டிகள் மற்றும் ஆவணங்களுடன் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களும் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என செயலகம் குறிப்பிட்டுள்ளது.

22 மாவட்ட செயலகங்களிலிருந்து நேற்றுக் காலை 8 மணி முதல் உத்தியோகத்தர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர் என மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகங்கள் தெரிவித்துள்ளன. (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் சர்வதேசத்தின் அழுத்தம் அவர் மீது தொடரும்!

## ஆய்வாளர்கள் ஆரூடம்

கொழும்பு,ஜன. 26

இன்றைய தேர்தல் மூலம் இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் யுத்தக் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யுமாறும்,மேற்கு நாடுகளுடன் உறவுகளைச் சரிசெய்யுமாறும் உடனடி அழுத்தங்களுக்கு உள்ளாவார் என ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி ஏ.எவ். பி. செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஏ.எவ்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளைக் கடந்த மே மாதம் தோற்கடித்ததன் மூலம் மஹிந்த ராஜ பக்ஷவும், பொன்சேகாவும் தங்களது இராணுவத் திறமைகளை நிரூபித்தனர்.

எனினும், தாங்கள் உறுதியளித்துள்ள சிறந்த எதிர்காலத்தை வழங்குவதற்கு இருவரும் சிறந்த இராஜதந்திரிகள் என்பதை நிரூபிக்கவேண்டும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்,மோசமான யுத்தக்குற்றக் குற்றச்சாட்டுகளுக்கு வழிவகுத்துள்ளதுடன் இருவரையும் விடாது பின்தொடர்கின்றது. மேலும் மேற்குலகில் உள்ள இலங்கையின் சகாக்களுடனான உறவுகளையும் அது பாதித்துள்ளது.

யுத்தம், ஊடக சுதந்திரம் போன்றவற்றை ராஜபக்ஷ கையாண்ட விதத்தையும் இடம்பெயர்ந்த மக்களை முகாம்களில் அடைத்து வைத்துள்ளமையையும் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை கண்டித்துள்ளன.

### வெளிநாட்டுக் கொள்கை மாறிவிட்டது

1948 வரை போர்த்துக்கீசர்கள், ஒல்லாந்தர்கள் மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கீழ் இருந்த இலங்கை தற்போது ஜப்பான், இந்தியா, சீனா, மியன்மார் மற்றும் ஈரான் போன்ற நாடுகளுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்கிறார் பிரிட்டனின் சத்தாம் ஹவுஸ் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த இலங்கை நிபுணர் சாரு லதா ஹொக்.

மேற்கின் ஆதரவை எதிர்பார்ப்பதற்குப் பதில் அது தற்போது ஆசியா குறித்தே கவனம் செலுத்துகின்றது.

ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகளைச் சார்ந்தவர்களே இலங்கையில் முக்கிய முதலீட்டாளர்கள் என அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

மேற்கு நாடுகளுடன் - குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் - நெருக்கமான உறவுகளை இலங்கை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினால் மனித உரிமைகள் மற்றும் கடந்த கால யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும்படியான வேண்டுகோள்களை அது எதிர் கொள்ளும் என்கிறார் அவர்.

### பிரதான ஏற்றுமதிகள் பாதிப்புறும் அபாயம்

எனினும், இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களுக்கான பிரதான சந்தையாக மேற்குலக நாடுகளே காணப்படுகின்றன.

இதன் காரணமாக இலங்கையின் வர்த்தக சமூகம், மேற்படி பாதிக்கப்பட்டுள்ள உறவுகளைச் சரிசெய்யுமாறு வலியுறுத்துகின்றது.

உறவுகளைச் சீர்குலைப்பதை விடுத்து, நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார் இலங்கை வர்த்தகப் பிரமுகர் ஒருவர்.

இலங்கை வரிகளற்ற விதத்தில் ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உதவும் 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்துவதாகக் கடந்த மாதம் அறிவித்தது.

இலங்கை குறித்து ஒருவருட காலம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னரே இந்த முடிவை அது எடுத்துள்ளது.

'எமது ஆடைகளை மேற்குலக நாடுகளே அதிகளவு கொள்வனவு செய்கின்றன. யுத்தம் தற்போது முடிந்துவிட்டதால் அதி தீவிர வெளிநாட்டுக் கொள்கையைக் குறைத்து யதார்த்த பூர்வமான அணுகுமுறை அவசியம்' - என இலங்கையின்வர்த்தக செய்தியாளர் ஒருவர் தெரிவிக் கிறார்.

தேர்தலில் எவர் வென்றாலும் அவர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்திற்குப் புத்துணர்வு கொடுப்பதற்கு முயலவேண்டியிருக்கும்.

### யுத்தக்குற்ற விசாரணையை எதிர்நோக்க நேரிடும்

யுத்தக் குற்ற விசாரணை குறித்த அச்சுறுத்தலையும் வெற்றி பெற்றவர் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

ஐ.நாவும், மேற்குலகமும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் ஏதாவதொரு வகை விசாரணைக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பதற்கான வாய்ப்பு கள் உள்ளன.

இலங்கையில் தற்போது காணப்படும் அமைதியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வதே இரு சிங்கள தேசிய வாதிகளுக்கும் கடும் சவாலாக அமையப் போகின்றது.

மீண்டும் ஆயுதப் போராட்டம் தலை தூக்குவதைத் தவிர்ப்பதற்கு வடபகுதியைச் சேர்ந்த தமிழர்களை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக ஒன்றிணைக்க வேண்டும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

சிங்களவர்கள் அதிகாரம் செலுத்தும் அரசியல் கட்சிகள் ஜனநாயக மற்றும் அனைவரையும் அரவணைக்கும் தேசமொன்றை நோக்கிய வலுவான முயற்சிகளை மேற்கொள்ளாவிட்டால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான வெற்றி பலவீனமானதாகவே மாறும் என்கின்றனர் ஆய்வாளர்கள் - என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# புங்குடுதீவுவில் மீளக்குடியமர்ந்தோருக்கு வீட்டுத் திட்டம்

புங்குடுதீவுப் பகுதியில் இடம் பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு வீட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஜேர்மன் நாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் சேவாலங்காவின் வீட்டுத்திட்டத்தில் 230 அரை நிரந்திர வீடுகளும் 230 மலசல கூடங்களும் மற்றும் 300 பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்திட்டமும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் பழுதடைந்த கிணறுகள், 70 வீடுகள், 70 மலசல கூடங்கள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளதாகவும் சேவாலங்கா நிறுவன திட்ட முகாமையாளர் க.சபேசன் தெரிவித்துள்ளார். (ஒ-16-188)

# வடக்கு பொலிஸ்மா அதிபரை இடமாற்றும் உத்தரவை ரத்துச் செய்ய தேர்தல் ஆணையாளர் பணிப்பு

கொழும்பு, ஜன. 26

வடக்கிற்குப் பொறுப்பான டி.ஐ.ஜி. (பிரதிப் பொலிஸ் மா அதிபர்) நிமால் லிவ்ஹேயின் சர்ச்சைக்குரிய இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் இது குறித்து பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார் எனத் தமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக இந்த இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இதனை உடனடியாக நிறுத்துமாறும் கோரியும் 'பவ்ரல்' அமைப்பு தேர்தல் ஆணையாளருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தது.

இத்தகைய இடமாற்றங்கள் தேர்தல் சட்டங்களுக்கு எதிரானவை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள 'பவ்ரல்', நீதியான - சுதந்திரமான - தேர்தலை நடத்துவதில் இது பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

தேர்தலுக்கு இரண்டு நாள்கள் இருக்கையில், வடக்கிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லிவ்ஹேயை அங்கிருந்து தூக்கும் உத்தரவைப் பொலிஸ் மா அதிபர் விடுத்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (அ-சி)

# அரசாங்கத்தை விமர்சித்த ஊடகத்தின் செய்தியாளரை ஞாயிறு முதல் காணவில்லை

கொழும்பு, ஜன. 26

அரசைக் கடுமையாக விமர்சித்து வந்த 'லங்கா ஈ நியூஸ்' செய்தி இணையத்தளத்தின் ஊடகவியலாளர் பிரதீப் எக்னேலுகொட நேற்று முன்தினம் இரவு முதல் காணாமல் போயுள்ளார் என அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்குப் புறப்பட்டு சென்றவர் இரவு 8.30 மணிக்கு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு கொஸ்வத்தை வீதியூடாக பஸ்ஸில் பயணித்திருக்கிறார். அந்தச்சமயம் நண்பர் ஒருவருடன் இறுதியாக அவர் தொலைபேசியில் உரையாடியிருக்கிறார் என அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

எனினும், இரவு 9 மணியிலிருந்து தொடர்ச்சியாக அவரதுதொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்ட போதிலும், அவரது தொலைபேசி செயலிழந்த நிலையிலிருந்தது எனப் பிரதீப் என்னேலுகொடவின் மனைவி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

'லங்கா ஈ நியூஸ்' நிறுவனம் ஏற்கனவே இரு தடவைகள் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரின் தேடுதலுக்கு உள்ளானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாக்கு மோசடி தொடர்பான விடயங்களை கையாள்வதற்கு செயலகத்தில் தனிப்பிரிவு

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்கு மோசடிகளில் ஈடுபடுவதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசேட பிரிவொன்றை தேர்தல்கள் செய லகம் அமைத்துள்ளது.

இந்தப் பிரிவு ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் இன்று காலை 7 மணி முதல் 4 மணி வரை சேவையில் ஈடுபடவுள்ளது.

தேர்தலில் இடம்பெறும் வாக்கு மோசடிகள் குறித்து 2877629, 2877630, 2877631 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பிரிவு முறைப்பாடுகள் குறித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் எனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுவரை தேர்தல் சட்ட மீறல் சம்பவங்கள் 780 ஆகக் காணப்பட்டன என 'பவ்ரல்' அமைப்பின் ஊடக இணைப்பதிகாரி டி.எம்.திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

இவற்றுள் 350 சம்பவங்கள் பாரதூரமானவை எனவும், 430 சம்பவங்கள் வழமையானவை எனவும் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து கொலைச் சம்பவங்களும், 6 கொலை முயற்சிகளும், 32 பலத்த காயங்களும் மற்றும் 42 காயங்களும் ஏற்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

94 தாக்குதல் சம்பவங்களும், 16 தீவைப்புகளும், 108 அச்சுறுத்தல் சம்ப வங்களும் மற்றும் அரச உடைமைகளைத் துஷ்பிரயோகப்படுத்தியமை தொடர்பில் 42 சம்பவங்களும் பதிவாகியுள்ளன என் 'பவ்ரல்' அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

சுடர் ஒளி
THE SUDAROLI
(ஜன. 24 - 30)
இப்போது விற்பனையில்

ஜனநாயகத் தேர்தல் நடக்குமா?
படையினருக்கு வந்த சோதனை
புதிய ஜனாதிபதி யார்?
ஜனாதிபதித் தேர்தலும் தமிழர் தரப்பும்
உயிர் வலிக்கும் கணங்கள்.....
வேலுப்பிள்ளையின் இறுதி நாள்கள் (தொடர் கட்டுரை)
மன்மோகன் அரசைப் பிடித்த கடைசிச் சாபமும் நீங்கியது
* மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்
உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கை இன்னும் சீரில்லை

## ஆசிரியர்கள், மாணவர்கள் நாளாந்தம் அவதி

கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் அங்கு கற்றல் நடவடிக்கைகளை மீள ஒழுங்கமைப்பதில் அதிபர், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சில பாடசாலைக் கட்டடங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. தளபாடங்களும் காணாமல் போய்விட்டன. இதனால் மர நிழல்களின் கீழே பாய்களில் அமர்ந்தவாறு மாணவர்கள் கல்வி பயிலவேண்டியுள்ளது.

மாணவர்களில் பலர் தொலை தூரங்களில் இருந்து கால் நடையாகவே வந்து செல்கின்றனர்.

பாடசாலைகளின் சுற்று வேலிகள் அழிவடைந்துள்ளதால் மாலை நேரங்களில் பாடசாலைகள் கால் நடைகளின் பட்டிகளாக மாறிவிடுகின்றன. இதனால் காலையில் அவற்றின் கழிவுகளை அகற்றிய பின்னரே பாடசாலை அலுவல்களை ஆரம்பிக்கவேண்டியுள்ளது.பாடசாலைகளில் சில அவற்றிற்குரிய கல்வி வலயங்களில் இருந்து பல மைல் தூரத்தில் அமைந்திருப்பதாலும் போக்குவரத்து சேவை சீர்குலைந் துள்ளதாலும் தமது குறைபாடுகளை உட னுக்குடன் தெரிவிப்பதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று அதிபர்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சி டிப்போவில் இருந்து சில பிரதேசங்களுக்கு இதுவரை பஸ் சேவை கள் ஆரம்பிக்கப் படவில்லை. இதனால் ஆசிரியர்கள் பிரதான வீதிகளில் இருந்து நீண்ட தூரம் நடந்தே செல்கின்றனர். என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-400)

# நீதிபதிக்கு பிரிவுபசாரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக கடந்த ஆறரை ஆண்டுகளாகப் பணியாற்றி, மல்லாகம் மாவட்ட நீதிபதியாக இட மாற்றலாகிச் சென்ற க.அரியநாயகத்துக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நலன் புரிச் சங்கத்தினால் பிரிவுபசாரமளிக்கப்பட்டது.

மாவட்ட நீதிபதி க.அரியநாயகமும் பாரியாரும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் பாண்ட் வாத்திய சகிதம் வதிரி முருகையன் கோயிலில் இருந்து நீதிமன்றம் வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

நீதிபதியின் சேவைகளை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் உ.விமலதாஸ், மொழிபெயர்ப்பாளர் ந.திருக்குமார் மற்றும் அன்ரன் ஜேகதாஸ், எஸ். விவேகானந்தன், திருமதி ஆர்.நாகேஸ் வரன் ஆகியோர் அவரின் சேவையை நயப்புடன் எடுத்துரைத்தனர். (1-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அமைதி வாக்களிப்பு சாத்தியமா?

இலங்கையின் ஆறாவது ஜனாதிபதியை - நிறைவேற்று அதிகாரத் தலைவரை - தெரிவு செய்வதற்கான தேர்தலின் உச்சத் திருவிழா இன்று அரங்கேறுகின்றது.

இன்று காலை முதல் நடக்கப்போகின்ற வாக்களிப்பும் அதன் பின்னர் முன்னிரவு முதல் இடம்பெறப் போகின்ற வாக்கெண்ணிக்கைக் கணக்கெடுப்பும் இத் தேர்தலின் முடிவையும் போக்கையும் தீர்மானிக்கப் போகின்ற முக்கிய - மூல - பிரதான - விவகாரங்கள்.

இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத மாதிரியான கடுமையான போட்டியுடன் இடம்பெறும் தேர்தல் இதுதான். அதிகாரத்தில் இருப்பவருக்கும், அதிகாரத்துக்கு வரத் துடிப்பவருக்கும் இடையிலான இந்தக் கடும் பகைமிக்க யுத்தம் வன்மம் மிக்கதாக - குரூரம் கொண்டதாக - விரோத வெறுப்புடையதாக - பகையுணர்வு மிஞ்சியதாக - கட்டவிழ்வதால் தேர்தல் வன்முறைகளும் உச்சத்தைத் தொட்டுநிற்கின்றன.

தேர்தலை நடத்தும் உயர் அதிகாரம் கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் உத்தரவுகளையே தரப்புகள் உதாசீனம் செய்து புறக்கணித்து, நிராகரித்துச் செயற்படும் நிலையில் -

எப்படியாவது வெற்றியீட்டியேயாக வேண்டும் என்ற இலக்கிற்காக எந்த வன்முறைப் பாதைகளையும் நாடவும் தயாரான எண்ணத்தில் பிரதான தரப்புகள் செயற்படுகையில் -

தேர்தல் விவகாரம் தொடர்பான பிரதான கட்டளைகள், உத்தரவுகள், தேர்தல் விதிகள், சட்ட ஒழுங்குகள் போன்றவற்றை எல்லாம் தூசென மதித்து தரப்புகள் அடாவடித்தனம் பண்ணுகையில் -

இன்றைய வாக்கெடுப்பும், அதைத் தொடர்ந்த வாக்கு எண்ணிக்கைக் கணக்கெடுப்பும் மட்டும் நீதி, நியாயமாக நடந்தேறும் என்று நம்புவது கடினம்.

இந்தத் தேர்தலில் இதுவரை வெளிப்பட்ட அராஜகப் போக்குகளுக்கு மகுடம் வைத்தால் போல வன்முறைகளும், குளறுபடிகளும், அச்சுறுத்தல்களும், அடாவடித் தனங்களும் இன்று அரங்கேறும் என்ற அச்சமே பலரின் மனதிலும் குடிகொண்டிருக்கின்றது.

அதற்குக் கட்டியம் கூறுவதுபோல நேற்றும், முன்தினமும் பரவலாக வன்முறைச் சம்பவங்களும், அச்சுறுத்தல்களும் இடம்பெற்றிருக்கின்றன. வடக்கில் - ஒரு குறிப்பிட்ட தரப்பின் தேர்தல் முகவர்கள் வெள்ளை வானில் வந்தோரால் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர் என்ற தகவல் அபாய மணியை எழுப்பி, எச்சரிக்கைச் சங்கை ஊத வைத்திருக்கின்றது.

தெற்கில் நேரடிப் போட்டி என்பது வெளிப்படையானது. இரு பிரதான தரப்புகளினதும் தேர்தல் முகவர்கள், ஆள்கள் கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டு - கச்சையை மடித்துக் கட்டிக்கொண்டு - அவதானிக்கும் நிலைமை அங்கு தொடர்கின்றது. அதனால் அந்தச் சூழலில் தேர்தல் குளறுபடிகள் செய்வது கஷ்டமாக இருக்கக் கூடும்.

ஆனால் வடக்கு, கிழக்கில் நிலைமை வேறு. அப்பிரதேசங்களைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் சிறுபான்மைத் தமிழ்ப்பேசும் மக்கள். அவர்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான கட்சிகள் இந்தத் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடவில்லை. தேர்தல் பிரசாரங்களில் அக்கட்சிகள் நேரடியாக - முழு வீச்சில் - பங்குபற்றியிருந்தாலும் கூட, வாக்களிப்போடு தொடர்புபட்ட நடவடிக்கைகளில் அக்கட்சிகள் நேரடியாகப் பங்குபற்றும் வாய்ப்புகள் சற்றுக் குறைவே. அதாவது, இக்கட்சிகளும், அவற்றின் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் போன்றவர்களும் இத்தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் ஒருவர் பக்கம் சாய்ந்து பிரசாரத்தில் ஈடுபட்டாலும், அந்த வேட்பாளர்கள் சார்பில் நேரடியாக வாக்குச் சாவடிகளில் தேர்தல் முகவர்களாகவோ, வாக்கு எண்ணிக்கையைக் கண்காணிக்கும் பணிக்கான முகவர்களாகவோ செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதனால் வடக்கு, கிழக்கில் வாக்குச் சாவடிகளிலும் வாக்குக் கணக்கெடுப்பு மையங்களிலும் சில தரப்புகளின் பிரதிநிதிகள் இல்லாத ஒரு வெற்றிடம் காணப்படக்கூடிய சூழல் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

தென்னிலங்கையில் கடும் போட்டிக்கு மத்தியில் இருதரப்புக் கண்காணிப்புத் தீவிரமாக இருப்பதால், அதைத் தவிர்த்து, வடக்கு - கிழக்கில் இவ்விவகாரத்தில் ஓட்டையோ, வெற்றிடமோ உள்ள பகுதிகளைப் பார்த்து, அதற்குள் புகுந்து விளையாட சம்பந்தப்பட்ட தரப்புகள் முயற்சிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

அவற்றையெல்லாம் தாண்டி, இந்தத் தேர்தல் நீதி, நியாயமாக நடைபெறுமா என்பதை இன்றும் நாளையும் இடம்பெறக் கூடிய விடயங்களே தீர்மானிக்கப் போகின்றன.

எது, எப்படியென்றாலும் - எந்த வழிவகையை நாடியேனும் - இன்றைய தேர்தல் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றப் போகின்றவர் அதன் பின்னர் மிக நெருக்கடியான - மிக மோசமான - எதிர்காலத்தை எதிர்கொள்ள வேண்டியவராக இருப்பார் என்பதும் நிஜம். நாட்டின் அரசியல் சூழலும், அதையொட்டி செலுத்தப்படும் சர்வதேச சமூகத்தின் தீவிரக் கண்காணிப்புப் போக்கும், இன்றைய தேர்தலின் மூலம் பதவிக்கு வருகின்றவருக்குக் கடும் முட்பாதை என்ற வழித் தடமே திறந்துள்ளது என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றன.

இத்தகைய குளறுபடிகள், நெருக்கடிகளை எதிர்கொண்டு மோதித் தேர்தலில் வெற்றிவாகை சூடப் போகின்றவர் அதன் பின்னர் எதிர்கொள்ளப்போகும் நெருக்கடிகள் இன்னும் மோசமானவையாக இருக்கப்போகின்றன. அதை அவர்கள் புரிந்து கொள்ளாமல் அதிகாரத்துக்காக இப்படி அடிபடுகின்றமையைப் பார்க்கும்போது அது குறித்து நகைப்பதைத் தவிர வேறு வழி நமக்கில்லை!

# வெளிநாடு சென்றுள்ள யாழ். வாசிகளின் வாக்குகள் குறித்து விசேட நடவடிக்கை

## திரும்பி வந்திருப்போர் கடவுச்சீட்டுடன் சென்று வாக்களிக்கலாம்

கொழும்பு, ஜன.26

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிநாடு சென்றவர்களின் வாக்குகளை எவரும் களவாட முடியாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் தம்மிடம் உறுதியளித்துள்ளார் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியுள்ளவை வருமாறு:-

யாழ் மாவட்டத்தில் உள்ள சுமார் 7,25,000 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் சுமார் 3,50,000 வாக்காளர்கள் நாட்டில் இல்லை. இவர்களது பெயர்கள் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையப் பிரதம அதிகாரிகளுக்கு அந்த விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக வெளிநாடு சென்றிருந்துவிட்டு சமீபத்தில் நாடு திரும்பியவர்கள் வாக்களிக்க வேண்டுமாயின் வாக்களிப்பு நிலையங்களுக்குத் தங்களது கடவுச்சீட்டைக் கொண்டு செல்லவேண்டும். இதன்மூலம் போலி அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி வெளிநாடு சென்றவர்களின் வாக்குகளை எவரும் களவாடாமல் தடுக்க முடியும் எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உறுதியளித்தார்.

திங்களன்று காலை தேர்தல் ஆணையாளரை எதிரணிக் கட்சித் தலைவர்கள் கருஜயசூரிய, அநுர குமார திஸாநாயக்க, ரவி கருணநாயக்க ஆகியோருடன் நானும் சேர்ந்து சந்தித்தேன்.

கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது சில வாக்களிப்பு நிலையங்களில் 99 வீத வாக்களிப்பு நடைபெற்றிருந்தது. இத்தகைய அதிஉயர் விகிதாசாரத்தில் ஒருபோதும் வாக்களிப்பு நடைபெறுவதில்லை. ஆனால் வாக்காளர் பதிவில் பெயர் இருந்தும், வெளிநாடு செல்கை மற்றும் பல்வேறு காரணங்கள் தொடர்பில் வாக்களிக்காதவர்களின் வாக்குகள் மோசடியாகக் களவாடப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் வாக்களிப்பு நிலைய அதிகாரிகளை மிரட்டி வாக்குப் பெட்டிகள் பலவந்தமாக நிரப்பப்பட்டன. இம்முறை அத்தகைய மிரட்டல் நடவடிக்கைகள் நடைபெறாவண்ணம் தேர்தல் அதிகாரிகளும், பாதுகாப்பு அதிகாரிகளும் எமது தேர்தல் முகவர்களும் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

வாக்காளர் பதிவில் பெயர்கள் இருந்தும் வெளிநாடு சென்றவர்களின் வாக்குகளை இம்முறை போலியான அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி களவாட முடியாது. இவ்விதமாக வெளிநாடு சென்றவர்களின் வாக்குகள் பயன்படுத்தப்படுமானால், இவை தொடர்பில் சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையப் பிரதம அதிகாரிகள் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விவரங்களின்படி வெளிநாடு சென்றுள்ளவர்களின் பெயர்களில் வாக்களிக்க வருபவர்களிடம் கடவுச் சீட்டைக் கோரி பரிசோதிக்க வேண்டும். அத்துடன் வாக்களிப்பு நிலையங்களில் இருக்கின்ற எமது எதிரணித் தேர்தல் முகவர்களும் இது தொடர்பில் அவதானமாக இருப்பார்கள். எனவே தென்னிலங்கையில் இருந்து நபர்களைக் கொண்டுசென்று போலி அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி யாழ். மாவட்டத்தில் வாக்குகளைக் கொள்ளையடிக்க முடியாது. மேலதிக வாக்குகள் மோசடியாக வழங்கப்பட்டால் அத்தகைய வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இரத்துச் செய்யப்பட்டு மீள் வாக்களிப்பு நடத்தப்படும் - என்று உள்ளது. (சி)

# செயலமர்வு ஒத்திவைப்பு

கெருடாவில், ஜன.26

வடமராட்சி கல்வி வலயத்தினரால் எதிர்வரும் 30 ஆம் திகதி நடத்தவிருந்த விஞ்ஞானபாட செயலமர்வு மறு அறிவித்தல் வரை பிற் போடப்பட்டுள்ளதாக வடமராட்சி வலய விஞ்ஞானபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ரோகினி கருணேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ- 16-253)

# தனியார் காணிகளில் அத்துமீறிப் புகுந்து விறகு வெட்டிச் செல்லும் இளைஞர்கள்

## வரணிப் பிரதேசத்தில் அடாவடித்தனம்

யாழ்ப்பாணம், ஜன.26

வரணிப்பிரதேசத்தில் விறகு வெட்டும் நபர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தனியார் காணிகளில் அத்துமீறிப் புகுந்து விறகுக்காக மரங்களைக் கண்டபடி வெட்டி எடுத்துச் செல்கின்றனர்.

வடமராட்சிப் பிரதேசங்களில் இருந்து குழுக்களாக வரும் இளைஞர்களே பயமுறுத்தும் பாணியில் இந்த அடாவடித்தன வேலைகளில் ஈடுபடுகின்றனர். கத்தி கோடரி போன்றவற்றைக் காட்டி பயமுறுத்திய சம்பவங்களும் அண்மையில் இடம்பெற்றுள்ளன.

இதே வேளை வரணிப்பிரதேசத்தின் எல்லைப்பிரதேசத்தில் உள்ள தாழ் சவர் நிலங்களில் வளரும் கண்டல் மரங்களும் வகைதொகையின்றி வெட்டப்பட்டு மாட்டு வண்டில்களில் கொண்டு செல்வதை தினமும் காணக்கூடியதாக உள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வாறான செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (ஒ-122)

# பிரேத பரிசோதனைக்காகச் சடலங்களை யாழ். ஆஸ்பத்திரிக்கே எடுத்துச் செல்லும் நிலை

## தென்மராட்சி மக்களுக்கு பணம், நேரம் வீண்விரயம்

யாழ்ப்பாணம், ஜன.26

தென்மராட்சிப் பிரதேசத்தில் திடீர் மரணம் அடைவோரின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக தொடர்ந்தும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கே எடுத்துச் செல்லும் நிலை தொடர்வதாக மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் தொடரும் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது நான்கு மருத்துவர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்கள் பிரேத பரிசோதனை செய்யக்கூடிய தகைமை உள்ளவர்கள் என்று கூறப்படுகின்றது.

சடலங்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதால் பெரும் பணவிரயமும் கால தாமதமும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலை வளாகத்தில் சேதமடைந்திருந்த சவச்சாலை புனரமைக்கப்பட்டு இரண்டு வருடங்களாக பயன்படுத்தாமல் காணப்படுகின்றது.

அனைத்து வசதிகளும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இருக்கும்போது சடலங்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதால் ஏற்படும் செலவுகளை அனைத்துக் குடும்பங்களாலும் தாங்கக்கூடிய நிலை இல்லாததாலும், திடீர் மரணங்களின் பிரதே பரிசோதனைகளை சாவகச்சேரியில் நடத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என்று பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஒ-50-207)

# தைப்பூசத் திருவிழா

வண்ணை,ஜன.26,

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை தைப்பூசத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது. காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் பூசை ஆரம்பமாகும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முருகப்பெருமான் தெய்வயானை வள்ளி சமேதராக எழுந்தருளி திருவீதியுலா வலம்வருவார். (ஒ-160)

# நாளை

| | |
|---|---|
| தை 14 | 27.01.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | துவாதசி |
| | மு.இ. 07.19 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் |
| | பி.ப. 5.56 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# தேர்தல் அசம்பாவிதங்களுக்கு அஞ்சி அவசரமாக ஊர் திரும்பும் மக்கள்

சண்டிலிப்பாய், ஜன.26

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து குடாநாட்டுக்கு வந்தவர்களும் குடாநாட்டில் இருந்து கொழும்புக்குச் சென்றவர்களும் அவசர அவசரமாகத் தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இன்று நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களில் எவர் வெற்றிபெற்றாலும் வன்முறைகள், அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்றும் அதனால் போக்குவரத்தில் தடங்கல் ஏற்படக் கூடும் என்றும் மக்கள் அஞ்சுவதாகத் தெரிகின்றது.

இவ்வாறான காரணங்களாலேயே பயணம் சென்றவர்கள் தங்கள் கருமங்கள் முழுமையாக நிறைவேற முன்னரே முண்டியடித்துக் கொண்டு சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர். குடாநாட்டுக்கு வந்திருந்த பெரும்பாலான மக்கள் நேற்றுக் காலையிலேயே கொழும்பு செல்வதற்கான ஆயத்தங்கள் செய்திருந்தனர். அதேபோல் கொழும்புக்குச் சென்றவர்களும் யாழ்ப்பாணம் வருவதற்கு அவசரம் காட்டினர்.(ஒ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் கிரிக்கெட்டில் சர்ச்சை: நடவடிக்கை எடுக்குமா ஐ.சி.சி.?

பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவரான முஸ்தபா கமாலிடம், அணியின் தலைவரான சாஹிப் அல் ஹசன் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டமையானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு பங்களாதேஷ் அணி சிறப்பாகச் செயற்பட்டது. மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் சிம்பாவேக்கு எதிராக அசத்தல் வெற்றிகளைப் பெற்றது.

இதற்கான பாராட்டு விழா சமீபத்தில் தாகாவில் நடைபெற்றது. அந்த விழாவின்போது இவர்கள் இருவரும் பேசிய விடயமே இந்தச்சர்ச்சைக்குக் காரணமாக அமைந்துள்ளது.

பங்களாதேஷ் அணியின் தலைவரை - சாஹிப் அல் ஹசனை அவமானப் படுத்திய முஸ்தபா கமால் மீது, ஐ.சி.சி. நடவடிக்கை எடுக்குமா எனக் கிரிக்கெட் வட்டாரங்களில் தற்போது கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

அணிகளின் நிர்வாகிகளுக்கென ஐ.சி.சி. தனியாக நடத்தை விதிமுறை ஒன்றை வகுத்துள்ளது. இதனை மீறும் நிர்வாகிகளிடம் விளக்கம் கேட்கப்படும். குற்றம் நிரூபிக்கப்பட்டால், சம்பந்தப்பட்டவர் ஐ.சி.சியின் கூட்டங்களில் பங்கேற்க அனுமதி மறுக்கப்படும்.

எனவே, முஸ்தபா கமால் மீது ஐ.சி.சி. நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப் பட்டது.

இந்நிலையில்,

'ஊடகங்களில்' வெளியான செய்திகள் தவறானவை என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''சாஹிப் மற்றும் முஸ்தபா சாதாரணமாக பேசிக் கொண்டிருக்கும் போது சம்பந்தப்பட்ட படம் எடுக்கப்பட்டது எனவும், இதை வைத்து ஊகமாக - தவறான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக முஸ்தபா கமால் மீது ஐ.சி.சி. நடவடிக்கை எடுக்கும் என்ற நிலையிலிருந்து, நடவடிக்கை எடுக்குமா? என்ற ஒரு படி கீழிறங்கிய் நிலையே காணப் படுகிறது.

சர்ச்சைக்குரிய இந்த விவகாரம் உண்மையாயின் இதுகுறித்து ஐ.சி.சி. எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப்போகிறது என்ற கேள்வி எழுப்பப்படும் இதேவேளை - இவ்வாறான செயற்பாடுகள் கிரிக்கெட்டிற்குக் கெட்ட பெயரையே உருவாக்கும் என்றும் கிரிக்கெட் வட்டாரங்களில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

## வீரர்கள் வெற்றிக்காக விளையாடவேண்டும்

''வீரர்கள் எப்போதும் வெற்றிக்காகவே விளையாட வேண்டும்''-பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவரான முஸ்தபா கமால் பங்களாதேஷ் வீரர்களைச் சாடியுள்ளார்.

கடந்த வருடம் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக பங்களாதேஷ் வீரர்களைக் கௌரவிக்கும் விழாவில் பேசிய போதே முஸ்தபா கமால் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

''பங்களாதேஷ் வீரர்களிடமிருந்து நூறு வீத திறமையை எதிர்பார்க்கிறேன். வெற்றி பெறுவதை ஒரு பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். ஒரு நாள் வென்று விட்டு, அடுத்த நாள் தோல்வியடைவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

''வீரர்கள் இன்னும் அதிக அர்ப்பணிப்பு உணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும். இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் தோல்வியடைந்தமையானது பெரும் ஏமாற்றமாக அமைந்தது. இப்போட்டியைக் குறைந்த பட்சம் சமனிலையிலாவது முடித்திருக்கலாம்'' எனக் கூறியிருந்தார்.

## எவரும் தோல்விக்காக விளையாடுவதில்லை

''வீரர்கள் எவரும் தோல்விக்காக விளையாடுவதில்லை''- என பங்களாதேஷ் அணியின் தலைவரான சாஹிப் கூறியுள்ளார்.

முஸ்தபா கமால் கூறிய கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் முகமாக உடனடியாகவே அந்த விழாவில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

''எந்த ஒரு கிரிக்கெட் வீரரும் தோல்விக்காக விளையாடுவதில்லை. நாங்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவே முயற்சிக்கிறோம்.

''தனி நபராக யாரும் வெற்றி பெற முடியாது. அனைவரும் பொறுப்பாகப் பேசி, எங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். அதைவிடுத்து தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை எம்மீது திணிக்கவேண்டாம். ''நாங்கள் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெற முடியாது. இதற்காக எங்களது நேர்மை பற்றிக் கேள்வி எழுப்பக் கூடாது'' - என்றார்.

# பகிரங்கமாக மிரட்டினார் முஸ்தபா கமால்; மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டார் சாஹிப்



பங்களாதேஷ் அணித் தலைவரான சாஹிப் அல் ஹசனின் எதிர்க் கருத்தால் ஆத்திரப்பட்ட, முஸ்தபா கமால் ''கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்'' என பகிரங்கமாகவே மிரட்டல் விடுத்திருந்தார். இதையடுத்து விழா முடிந்த பின்னர், தனது பேச்சுத் தொடர்பாக முஸ்தபா கமாலிடம் சாஹிப் அல் ஹசன் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுள்ளார். இது தொடர்பான புகைப்படங்களை பங்களாதேஷ் பத்திரிகையான 'கலேர் காந்தோ' வெளியிட - பங்களாதேஷ் கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் பர பரப்பு ஏற்பட்டுள்ளது.

இவர்களது இந்த முறு கலுக்கு காரணமாக,

சமீபத்தில் நடந்த உள்ளூர் போட்டி ஒன்றில் தாகா முகமதன் அணியிடம், அபகானி அணி தோல்வியடைந்து சம்பியன் பட்டத்தை இழந்துள்ளது. இதுதான் சாஹிப் மற்றும் கமால் ஆகியோருக்கிடையே மோதல் உருவாக முக்கிய காரணமாக அமைந்துள்ளது எனவும் கூறப்படுகிறது.

உள்ளூர் அபகானி அணியின் அணித்தலைவராக சாஹிப் அல் ஹசனும், இதன் தலைவராகக் கமாலும் செயற்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டோனி-ஷேவாக் மோதல்? இந்திய அணியில் பிளவு?



இந்திய அணியில்பிளவுஏற்பட்டுள்ளது என வும் அணித்தலைவர் டோனி - துணைத் தலைவர் ஷேவாக் ஆகியோருக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. இதனால், அணி வீரர்கள் இரு பிரிவாகச் செயல்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பங்களாதேஷ் சென்றுள்ள இந்திய அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டி சிட்டகாங்கில் நடந்தது.

இப்போட்டியில் முதுகு வலி காரணமாக அணித் தலைவர் டோனி விலகிக் கொண்டார். இதனால், அணித்தலைவர் பொறுப்பு, துணைத் தலைவராக இருந்த ஷேவாக்கிடம் சென்றது. முதல் போட்டியில் விளையாடும் அணிக்காக ஷேவாக், கம்[illegible] இஷாந்த் சர்மா, அமித் மிஸ்ரா உள்ளிட்ட டில்லி வீரர்கள் வாய்ப்புப் பெற்றனர்.

விக்கெட் காப்பாளராக டில்லி டேர்டெவில்ஸ் அணியின் தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் செயற்பட்டார். இந்தப் போட்டியில் இந்திய அணி 113 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் மிர்பூரில் நேற்றுமுன்தினம் இரண்டாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகியது.

இந்தப் போட்டிக்காக அணித்தலைவர் பொறுப்பை மீண்டும் டோனி பெற்றுக் கொண்டார். முதல் டெஸ்டில் சிறப்பாகச் செயற்பட்ட போதும், அணியிலிருந்து கடைசி நிமிடத்தில் அமித் மிஸ்ரா, தினேஷ் கார்த்திக் ஆகியோர் நீக்கப்பட்டனர். இவர்களுக்குப் பதிலாக பிரக்யன் ஓஜா, ஹர்பஜன் சிங் ஆகியோர் வாய்ப்புப் பெற்றனர்.

நேற்றுமுன்தினம் முதல்நாள் ஆட்ட நேர முடிவின்போது, 4 விக்கெட்டுகளை வீழ்த்திய இஷாந்த் சர்மா, முதல் டெஸ்டில் விளையாடுவதற்குத் தெரிவு செய்த ஷேவாக் கிற்கு நன்றி எனக் கூறினார். இதனால், இந்திய அணியில் ஷேவாக், டோனி ஆகியோரின் தலைமையின் கீழ் இரு குழுக்கள் உருவாகியுள்ளன எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

டில்லி வீரர்கள் ஷேவாக் தலைமையிலான குழுவிலும், யுவராஜ், ஹர்பஜன் உள்ளிட்ட சில வீரர்கள் டோனி தலைமையிலான குழுவிலும் இடம்பெற்றிருக்கின்றனர் எனவும் தகவல்கள் கூறுகின்றன.




# காலிறுதிக்குள் நுழைந்தார் வீனஸ்; தோற்று வெளியேறினார் கரோலின்

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வரும் டென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில், உலகின் 6ஆம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4ஆவது சுற்றில் இத்தாலியைச் சேர்ந்த 17ஆம் நிலை வீராங்கனையான பிரான்செஸ்காவை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.



இந்த ஆட்டத்தில் வீனஸ்வில்லியம்ஸ் 3-6, 6-2, 6-1 என்ற செற்கணக்கில்வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

இதே வேளை நடைபெற்ற இன்னொரு ஆட்டத்தில் சீனாவின் நா லீ, 6-4, 6-3 என்ற நேர் செற் கணக்கில் தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருப்பவரான கரோலினை (டென்மார்க்) அதிர்ச்சிகரமாகத் தோற்கடித்தார்.

இவர் காலிறுதியில் வீனஸ் வில்லியம்ஸுடன் மோதுகிறார். பெட்ரோவா (ரஷ்யா), ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்), ஜிசெலுங் (சீனா), மரினா கிரிலென்கோ (ரஷ்யா) ஆகியோரும் காலிறுதியாட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

# வலுவான நிலையில் இந்தியா

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி, நேற்று மாலைவரை 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 388 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக தனது முதல் இன்னிங்ஸை ஆடிய பங்களாதேஷ் அணியை, இந்திய அணி 233 ஓட்டங்களுக்குள் சுருட்டியது.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி முதல் நாள் ஆட்ட நேரமுடிவின்போது விக்கெட் இழப்பின்றி 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

களத்தில் கம்பீர் (26), ஷேவாக் (41) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

பின்னர் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணி, ஷேவாக் (56), கம்பீர் (68) ஆகியோரின் விக்கெட்டுகளை இழந்தது.

இவர்களுக்குப் பின்னர் வந்த டிராவிட்-சச்சின் ஜோடி சிறப்பாக ஆடி, விக்கெட் சரிவைக் கட்டுப்படுத்தியது.

சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த டிராவிட் 111 ஓட்டங்களைப் பெற்றவேளை, காயம் காரணமாக ஆட்டமிழக்காமலே ஆடுகளத்தை விட்டு வெளியேறினார். மறுமுனையில் நின்ற சச்சினும் சதம் கடந்து சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். சச்சினுடன் ஜோடி சேர்ந்த முரளி விஜய் (12) நேற்று மாலைவரை அதாவது ஆட்ட நேரம் முடிவதற்கு முன்னர் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். சச்சின் 127 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இந்திய அணி மொத்தமாக 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 388 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.

## கோட்லா மைதானத் தடையை எதிர்த்து இந்திய கிரிக்கெட் சபை மேன் முறையீடு

டில்லி, கோட்லா மைதானத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் ஓராண்டு காலத் தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்வதற்கு இந்தியக் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது எனத் தெரியவருகிறது.

விளையாடுவதற்குத் தகுதியற்ற மைதானம் எனக் கூறி, டில்லி பெரோஷா கோட்லா மைதானத்திற்கு ஓராண்டு காலத் தடையை அண்மையில் ஐ.சி.சி. விதித்தது.

இதனால் இந்த ஆண்டு முழுவதும் கோட்லா மைதானத்தில் சர்வதேச போட்டிகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இந்தத் தடையை எதிர்த்து இந்திய கிரிக்கெட் சபை மேன் முறையீடு செய்வதற்கு முடிவு செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘முன்னால் சென்றோரின் பின்னால் சென்றவரின் வழியினில்’ என்ற தலைப்பில் தி.வழுதி என்பவர் வரைந்த முதலாம், இரண்டாம் கட்டுரைகள் ‘புதினம்’ இணையத் தளத்தில் பிரசுரமாகிப் பரபரப்பை ஏற்படுத்தின. அந்த வரிசையில் அவர் வரைந்தது எனக் கூறப்படும் இந்த மூன்றாவது கட்டுரை, ‘புதினம்’ இணையத் தளம் நிறுத் தப்பட்டமையைத் தொடர்ந்து அதன் பேறாக இயங்கு கின்ற ‘புதினப் பலகை’ இணையத் தளத்தில் இப்போது பிரசுரமாகியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னர் இக்கட்டுரையைப் படிப்பதே பொருத்தமானது என்பதால் இது இங்கு பிரசுரமாகின்றது. தற்போது நடை பெறும் ஜனாதிபதித் தேர்தலில் இக்கட்டுரை நேரடியாகத் தாக்கம் எதனையும் செலுத்தாது என நம்புகிறோம். (ஆ-ர்)

# இலங்கை தொடர்பில் ஐ.நா.

# எமது நலன் பேணுவதற்கு

# முயல்வதே உசிதமானது!

உண்மை எப்போதும் இனிப்பானதாக இருந்துவிடாது, கசப்பானதாக இருப்பதெல்லாம் பொய்யாகவே இருந்துவிட வேண்டும் என்றும் இல்லை.

நடைமுறை யதார்த்தம் நாம் விரும்புகிற ஒன்றாக இருந்துவிடாத போதும் அதனைத் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளும் துணிவு வேண்டும். விரும்புகிற தகவல்களை மட்டுமே வடித்து உள்ளே எடுப்பதும், விரும்பாதவற்றைத் தடுத்து வெளியே தள்ளி மனதை மூடிக்கொள்வதும் அறிவைச் செப்பனிடுவதற்கு ஏற்ற வழிகள் அல்ல.

மூடப்பட்டுக் கிடக்கும் மனது, சிந்தனையையும் செயற்பாட்டையும் முடக்கிவிடும். ஒரு நல்ல மனதுக்கு அழகு - விருப்பு வெறுப்புக்களையும் உணர்ச்சிகளையும் ஓர் ஓரத்தில் வைத்துவிட்டு - ஒரு மூன்றாவது மனிதர் போல வெளியில் இருந்து - திறந்த அறிவுடன் விடயங்களை நோக்குவது. உண்மையும் நடைமுறை யதார்த்தமும் கசப்பானதாக - விரும்பத் தகாததாக இருந்துவிட்டால் கூட - அதனை ஏற்றுக்கொள்ளுவதுதான் முன்னேறுவதற்கு வழி. அப்போது தான் - எதிர்காலத்தையாவது இனிமை ஆக்குவதற்கு - நாம் விரும்புகின்ற ஒன்றாக அமைப்பதற்கு - இப்போது நாம் என்ன செய்யலாம் என்பது பற்றிச் சிந்திக்க முடியும், செயற்பட முடியும். இது - சாதாரண ஒரு தனி மனித வாழ்வுக்கும் பொருந்தும், உன்னதமான ஒரு தேசிய இனத்தின் வரலாற்றுக்கும் பொருந்தும்.

## தேர்தல் காலம்

இப்போது தேர்தல் காலம். இலங்கைத் தீவிற்கு வெளியிலே ஈழத் தமிழர்கள் தொடர்பான பல தேர்தல்கள் நடந்து வருகின்றன. இந்த தேர்தல்களில் எனக்கு எந்த அக்கறையும் கிடையாது, ஏனெனில் - பல காரணங்களிற்காக இந்தத் தேர்தல்கள் ஈழத் தமிழரின் வாழ்விற்கு எந்த நற்பயனையும் தரப்போவதில்லை என்பது என் கருத்து.

‘வட்டுக்கோட்டைத் தீர்மானம்’ மீதான மீள்வாக்கெடுப்புகள், நாடு தழுவிய ‘தமிழர் பேரவை’ என்ற அமைப்புக்கள் என்றவாறாக நடத்தப்படும் இவ்வகையான தேர்தல்கள் - தமிழரது சக்தியையும், வளத்தையும், நேரத்தையும், விடுதலை வேட்கையையும் விரயமாக்கும் செயல். நாங்களே எங்களுக்குள் - எங்களுக்கு வேண்டிய ஒரு முடிவை வரவைப்பதற்காக - நடத்தும் இந்தத் தேர்தல்களுக்கு அனைத்துலக மட்டத்தில் எந்த மதிப்பும் இருக்கப் போவதில்லை. யாரை இலக்காக வைத்து இந்தத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றனவோ, அவர்கள் இவற்றை ஒரு பொருட்டாகக் கருத்தில் எடுக்கப் போவதுமில்லை. நாம் உண்மையில் கவனம் செலுத்த வேண்டியது இலங்கையில் நடக்கவிருக்கும் தேர்தலில். சிறிலங்காவின் ‘இறையாண்மை’ மற்றும் ‘நில ஒருமைப்பாடு’ போன்றவற்றை நாம் ஏற்றுக்கொள்ளாத போதும் - அங்கு நடக்கின்ற தேர்தல்தான் அங்கு வாழும் மக்களின் வாழ்வில் தாக்கங்களை எற்படுத்தப்போகின்றது. அந்தத் தேர்தலில் தான் எனக்கும் அக்கறை.

## புலிகளின் தவறு எது?

சிறிலங்காவின் அரச அதிபர் தேர்தலைப் பற்றிய பேச்சுக்கள் வரும் போது - 2005 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தல் பற்றிய கதை அடிக்கடி அடிபடுகின்றது.

‘2005 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்தது விடுதலைப் புலிகள் செய்த பெரும் தவறு, அதுவே அவர்களது அழிவுக்கும் தமிழர் சந்தித்த பேரழிவுக்கும் வழி கோலியது’ - என்கிறார்கள் அறிஞர்கள்.

ராஜபக்ஷ குழுவினரை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற தமிழர்களின் கூட்டுணர்வுக்கும், பொன்சேகாவுக்குப் பின்னால் திரள தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுத்துள்ள ‘கூட்டு முடிவு’க்கும் அதுவும் ஒரு காரணம்.

ஆனால் - ராஜபக்ஷவை ஆட்சி அமைக்க வைத்தது விடுதலைப் புலிகள் எடுத்த சரியான முடிவுதான் என்பது என் கருத்து. ஆனால் - அவரை ஆட்சியில் அமர்த்துவதற்கு அவர்களிடம் இருந்த நோக்கமும், அதற்கான காரணங்களும், அவர் ஆட்சி அமைத்த பின்னான காலத்தை அவர்கள் கையாண்ட முறைகளும்தான் தவறானவை. மீண்டும் போர் வெடிப்பதற்கான புறச்சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பது அவர்களது நோக்கம். காரணம் - போர் நிறுத்த காலத்தில் திரட்டிய வளங்களின் அடிப்படையில் - சுய போர்ப் பலம் மீதான அதீத நம்பிக்கை அவர்களுக்கு வந்திருந்தது. அத்தோடு - எதிரியின் பலத்தையும் அவர்கள் குறைத்து மதிப்பிட்டிருந்தார்கள்.

இவற்றின் அடிப்படையில் - போரை வெடிக்க வைத்து சிறிலங்கா படைகளை அடித்துத் துரத்தி வெற்றி வாகை சூடலாம் என்பது அவர்களது நம்பிக்கை. இந்த நோக்கத்தையும், நம்பிக்கையையும் வைத்து - போர் முழக்கம் கொட்டிய ஒரு சிங்களக் கடும் போக்குவாதியைப் பிரபாகரன் அப்போது ஆட்சியில் அமர்த்தினார்.

அதே வேளையில் - அனைத்துலக சமூகத்தின் பிரதான ஆட்டக்காரர்கள் மத்தியில் தம்மைப் பற்றி இருக்கும் கருத்து என்ன என்பதை அறியவும், மீண்டும் போர் வெடித்தால் இந்த வல்லரசுகள் எல்லாம் சேர்ந்து என்ன செய்யும் என்ற விடயத்தைக் கணிக்கவும் அவர் தவறிவிட்டார்.

அதே சமயத்தில் - என்றைக்கோ நடந்த ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பரிகாரம் தேடி இந்தியாவைச் சமாளிக்க பாலா அண்ணை எடுத்த முயற்சிகளுக்கும் அவர் ஒத்துழைக்காமல் விட்டுவிட்டார். இவை எல்லாம் சேர்ந்துதான் - விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சுய-அழிவுக்கும் -, தமிழினத்தின் பேரழிவுக்கும் வழிவகுத்தனவே அல்லாமல், ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தமை அல்ல.

## அப்போதைய முடிவு சரியே!

உண்மையில் - ராஜபக்ஷவை ஆட்சியமைக்க விட்டது ஒரு சரியான முடிவு, மாறி வருகின்ற புவிசார் அரசியல் மற்றும் பிராந்தியப் பாதுகாப்புப் புறநிலையில் அது ஒரு மிகச் சரியான முடிவுதான். ஆனால் - ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த ஒரு மாத காலத்துக்கு உள்ளாகவே - சங்கத்தானை, கோண்டாவில், இருபாலை, பருத்தித்துறை என சிறிலங்கா படைகள் மீது தாக்குதல்களைத் தொடங்கி, பின்னர் - மாவிலாறில் சண்டையைத் தூண்டி, அதன் தொடர்ச்சியாக - யாழ்ப்பாணப் படையெடுப்பு ஒன்றை முயற்சித்தது தான் பிரபாகரன் செய்த தவறு.

2006 ஓகஸ்ட் 11 ஆம் திகதி நடந்த அந்த யாழ்ப்பாணப் படையெடுப்பின் நாசகாரத் தோல்வியில்தான் - விடுதலைப் புலிகள் இயக்கத்தினது அழிவின் கடைசிக் கட்டம் தொடங்கியது. மாற்றீடாக - பிரபாகரன் செய்திருக்க வேண்டியது என்னவென்றால் - பொறுமை காத்திருக்க வேண்டும்.

## தலைமைத்துவ வெற்றிடம்

1991 இற்குப் பின்பு - ராஜீவ் காந்தியின் 'ஆவி' தம்மைத் துரத்தித் திரிந்த சூழலில், 2001 ஆம் ஆண்டுக்குப் பின்பு - ‘பயங்கரவாத’ பட்டம் உரம் பெற்றிருந்த சூழலில் - ஒரு வேளை தாம் அழிக்கப்பட்டுவிட்டால் - பேரம் பேசும் வல்லமை பொருந்திய ஒரு தலைமையற்றுத் தமிழினம் நடுத்தெருவில் நிற்கும் என்பதை உணர்ந்திருக்க வேண்டும்.

இப்போது - விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அழிவால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள ஒரே இழப்பு - அந்த இயக்கம் எடுத்த முடிவுகளின் சரிகளுக்கும் தவறுகளுக்கும் அப்பால் - அது ஏற்படுத்திவிட்டுப் போயுள்ள தலைமைத்துவ வெற்றிடம் தான். ராஜபக்ஷ ஒரு தீவிரவாதி; மார்க்சிய ஜே.வி.பி.யுடன் கைகோர்த்து இருந்தார்; இந்திய எதிர்ப்பாளர்; மேற்குலகோடு முரண்பட்டார்; எல்லாவற்றுக்கும் மேலாக சீனாவிற்குக் கடை விரித்தார்; ஈரானைத் தோழனாக்கினார். ஒட்டுமொத்தத்தில் தமிழர்களுக்கு ஏற்றவிதமான ஓர் ஆட்சியாளராக அவர் அரியணை ஏறினார்.

இவற்றை எல்லாம் விதையாகப் போட்டு ஓர் உருப்படியான அரசியல் விளைவை அறுவடையாக்கத் தவறியது தான் பிரபாகரன் செய்த தவறு; ராஜபக்ஷவை ஆட்சியில் அமர்த்தியது அல்ல.

இப்போது மீண்டும் தேர்தல் காலம்: அதே ராஜபக்ஷவும் போட்டியிடுகின்றார்.

## இந்தியாவில் இருந்தே எதுவும் வரவேண்டும்

சிங்களவர்களுக்குத் தமிழர்களைத் தேவை; பக்கத்திலிருக்கின்ற இந்தியாவுக்கும் தமிழர்களைத் தேவை. சிங்களவர்களால் எமக்குக் கிடைக்கப்போவது எதுவுமில்லை; அதனால், அவர்களைப் பற்றி அக்கறைப்பட ஒன்றுமில்லை. பக்கத்திலிருக்கின்ற இந்தியாவைத் தான் நாம் கருத்தில் எடுக்க வேண்டும்; தீமையோ நல்லதோ எதுவாய் இருந்தாலும் அங்கிருந்துதான் இனி வர வேண்டும்.

இந்தியாவைக் கருத்தில் எடுப்பது என்பது, தனியாக இந்தியாவை மட்டும் கருத்தில் எடுத்தல் என்று அர்த்தம் அல்ல; அதன் பழைய பகையாளி சீனா, புதிய கூட்டாளி அமெரிக்கா, நிரந்தர எதிரி பாகிஸ்தான் என அதனோடு தொடர்பான எல்லோரையும் கருத்தில் எடுக்க வேண்டும்.

தேர்தலிலே பேய்க்கு வாக்களிப்பதா, பிசாசைத் தேர்ந்தெடுப்பதா, அல்லது வேறு ஒரு புண்ணியவானுக்கு வாக்களிப்பதா, அல்லது எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தேர்தல் நாளில் தமிழர்கள் எல்லோரும் வீட்டுக்குள் [illegible] என்ற எல்லாக் கேள்விகளுக்குமான விடை - அந்த இந்தியப் பூதத்தை நாம் எப்படிக் கையாளப் போகிறோம் என்பதில் தான் தங்கியுள்ளது. இப்போது இந்தியாதான் உலகம். சீனப் பூதத்திற்கு ஈடுகொடுக்க மேற்குலகம் ஒன்றாய் திரண்டு இந்தியாவுக்கு முண்டு கொடுப்பதால் - ஆகக் குறைந்தது அடுத்த 30 வருட காலத்திற்கு இந்தியாதான் உலகம். தமிழர்கள் செய்ய வேண்டியது என்னவெனில் - எமது நலன்களும் இந்தியாவின் நலன்களும் சந்திக்கும் ஒரு மூலோபாயத் திடலை உருவாக்கி அங்கே இந்த உலக ஆட்டக்காரர்களை மோத வைத்துவிட்டு ஓரத்தில் நிற்க வேண்டும். அதாவது, இந்திய நலன்கள் காக்கப்பட்டாலே மேற்குலகின் நலன்கள் காக்கப்படும் என்ற இன்றைய சூழலில் தமிழரது நலன்கள் உறுதிசெய்யப்பட்டால்தான் இந்தியாவின் நலன்கள் காக்கப்படும் என்ற சூழலை உருவாக்க வேண்டும்.

அது என்னவெனில், இந்தியாவுக்கும் மேற்கிற்கும் பிடிக்காத ஒருவரை ஆட்சியில் அமர்த்தி, தென்னாசியாவில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டுமெனில், அவர்கள் தமிழர்களைத் தேடி வந்து தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தும் ஒரு சூழலை உருவாக்குவதுதான்.

தமிழரது மனித உரிமைகள் பற்றியும், தமிழரது அரசியல் வேட்கைகள் பற்றியும் உலகப் பெரும் நாடுகள் எல்லாவற்றுக்குமே தெரியும். ஆனால், தமிழரைப் பற்றி அவர்கள் எவருக்கும் அக்கறையில்லை. தமது நலன்களைக் காக்கத் தமிழர் பிரச்சினையை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதில்தான் அவர்களது அக்கறை. அதனால், தமது நலன்களிற்காக அவர்கள் எங்களில் சார்ந்திருக்கும் சூழலை ஏற்படுத்துவதே எமது உரிமைகளைப் பெறுவதற்குமான வழி.

என்னைப் பொறுத்தவரையில், ஒரு நீண்ட கால நோக்கில் - ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவது தான் தமிழர்களுக்கு நல்லது. பொன்சேகாவுக்கு ஆதரவு அளிக்க தமிழர் கூட்டமைப்பு எடுத்த முடிவு ஒருவகையில் நல்லது. அது சிங்களவர்களை ராஜபக்ஷவுக்குப் பின்னாலே திரட்டி, அவரை வெல்ல வைக்கும்.

* * * *

## ஜனவரி 27 இன் பின் நிலைமை என்னவாகும்?

இந்து சமுத்திர மற்றும் தென்னாசியப் பிராந்தியம் தொடர்பான ஒரு உரையை மேற்குலகின் முக்கியமான பாதுகாப்புத்துறைக் கொள்கை வகுப்பாளர் ஒருவர் - ஒரு முதன்மை மேற்குலகத் தலைநகரில் நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

அவர் சொன்னார் - ‘‘சிறிலங்கா அளவுக்கு உலகில் வேறு எந்த ஒரு நாடும் எமது கவனத்தை இப்போது ஈர்த்திருக்கவில்லை.’’அவர் இந்த உரை நிகழ்த்திய போது தேர்தல் பற்றிய அறிவிப்பு இலங்கையில் வெளியாகி இருக்கவில்லை. அந்த அறிவிப்பு வெளியாகிய பின்னர் உலகின் கவனத்தை சிறிலங்கா மேலும் ஈர்த்துவிட்டது. 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் - தமிழ் தேசியப் பிரச்சினை, ஒரு அனைத்துலக விளையாட்டுக் களமாக முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு முதன்மையைப் பெற்றுவிட்டது.

பொன்சேகா வெல்வாரா, ராஜபக்ஷ வெல்வாரா என்பது எமக்கு ஒரு பொருட்டே அல்ல. ஜனவரி 27, 2010 அன்று இந்தியாவும், சீனாவும், அமெரிக்காவும் என்ன செய்யப் போகின்றன என்பதில்தான் எல்லாமே தங்கியுள்ளது. இந்த நாடுகளின் சுயநலன் சார்ந்த வேலைத் திட்டத்திற்குள் நாம் சிக்கிவிடக்கூடாது என்பது எமது விருப்பம் தான்; அனால், நாம் ஏற்கெனவே சிக்கியுள்ளோம். அதற்குள் சிக்காமல் எம்மால் எதுவும் செய்யவும் முடியாது. நாம் அதற்குள் சிக்கி உள்ளோம் என்ற விடயத்தை உதாசீனம் செய்துவிட்டும் நாம் அடுத்த கட்டத்திற்கு நகர முடியாது.

அதை விடவும் சூட்சுமமானது என்னவென்றால் - இந்த வல்லரசுகளின் தலையீடுதான் இப்போது எமது பலம். அதனை நாமே கெடுத்து எமது பலவீனமாகவும் ஆக்கிவிடக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

தமிழர்களுக்கு ஏதாவது ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் எனில் - அது இந்தப் பன்னாட்டுப் பரிமாணங்களூடாகத் தான் வர முடியும். இலங்கைத் தீவைச் சார்ந்து, அங்கே வாழும் மக்களைச் சார்ந்து, அவர்கள் அளிக்கும் வாக்குகளைச் சார்ந்து, ஆட்சியில் அவர்கள் அமர்த்தப் போகும் ஆளைச் சார்ந்தே இந்தப பன்னாட்டுப் பரிமாணங்கள் இருக்கப் போகின்றன.சில விடயங்ளை எப்போதும் நினைவில் வைத்திருங்கள்:


முதலாவது - மனித உரிமைகள் பற்றியும், மனிதார்ந்த பிரச்சினைகள் பற்றியும் இந்த உலகில் திடீரெனக் கதைகள் அடிபடுகின்றன என்றால் இந்தப் பெரிய வல்லரசுகளுக்கு அதனால் ஏதோ நன்மை இருக்கின்றது என்று அர்த்தம். மனித உரிமைகள் மறுக்கப்பட்ட, மனிதார்ந்த பிரச்சினைகளுக்குள் சிக்குண்டுள்ள மக்கள் மீது அவர்களுக்குத் திடீரென பாசம் முளைத்துவிட்டது என்பது அதன் அர்த்தம் அல்ல.

அடுத்தது- அனைத்துலக விவகாரங்களில் நடக்கின்ற எந்த நிகழ்வையுமே எப்போதும் தனித்த ஒரு சம்பவமாகத் தனிமைப்படுத்திப் பார்க்காதீர்கள். எல்லா நிகழ்வுகளுமே ஏதோ ஒரு வகையில் ஒன்றுக்கு ஒன்று தொடர்பானவை. பொன்சேகா மீதான அமெரிக்க அதிகாரிகளின்

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தியோப்பிய விமானம் கடலில் வீழ்ந்தது; 92 பயணிகளும் உயிரிழப்பு என அச்சம்!



பெய்ரூட், ஜன. 26

லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலிருந்து புறப்பட்ட எத்தியோப்பிய விமானம் மத்தியதரைக் கடல் பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 92 பயணிகள் மற்றும் ஊழியர்கள் உயிரிழந்திருக்கக்கூடுமென அஞ்சப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை காரணமாக இந்த விமானம் புறப்பட்ட ஐந்தாவது நிமிடத்தில் விபத்துக்குள்ளானது. இது ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவுக்குச் சொந்தமான எத்தியோப்பியன் எயார்லைன்ஸ் விமானமாகும். விமானம் லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலுள்ள ராபிக் ஹரிரி சர்வதேச விமான நிலையத்திலிருந்து எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவுக்குப் புறப்பட்டது.

இந்த போயிங் 737 - 800 ரக விமானத்தில் 83 பயணிகளும், 9 சிப்பந்திகளும் இருந்தனர். இந்த விமானம் பெய்ரூட்டிலிருந்து புறப்பட்ட 5 ஆவது நிமிடத்திலேயே விபத்துக்குள்ளாகி மத்தியதரைக் கடல் பகுதியில் விழுந்தது.

விமானம் புறப்படும்போது இடிமின்னலுடன் கூடிய கடும் மழை பெய்துகொண்டிருந்தது. இதையடுத்து, இந்த விமானம் ரேடர் கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் சென்றது எனக் கூறப்படுகிறது.

கடலில் விழுந்த விமானத்தில் பயணம் செய்த பயணிகள், ஊழியர்கள் ஆகியோர் உட்பட 92 பேரும் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த விமானம் விபத்துக்குள்ளானபோது விண்ணில் இராட்சத நெருப்புப் பந்து போல தோற்றம் அளித்தது என பெய்ரூட்வாசிகள் கூறியுள்ளனர்.

பிரிட்டன், கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள், எத்தியோப்பிய தொழிலாளர்கள் ஆகியோர் இதில் பயணம் செய்துள்ளனர். இந்த விபத்தை பற்றி தகவல் அறிந்ததும், லெபனான் உயர் அதிகாரிகளும், விமானத்தில் பயணம் செய்த பயணிகளின் உறவினர்களும் பெய்ரூட் விமான நிலையத்திற்கு விரைந்துள்ளனர்.

விபத்து நடைபெற்ற இடத்திற்கு மீட்புக் குழுவினர் விரைந்துள்ளனர். விபத்தில் உயிர் பிழைத்தவர்கள் யாரேனும் இருக்கின்றனரா எனும் தேடல் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இவ்விமானம் தீப்பிடித்த நிலையில் கடலில் விழுந்தது என நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இதில் இருந்த எவரும் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என அஞ்சப்படுகிறது.

# எல்லை மீறி மீன் பிடித்த 14 இந்தியர் பாக். சிறையில்

அரபிக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 14 பேரை பாகிஸ்தான் கடல் பாதுகாப்புப் படையினர் கைதுசெய்து கராச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அவர்களை 14 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிவான் குலாம் யாசின் கொலாச்சி உத்தரவிட்டார்.

இதுபற்றி பாகிஸ்தான் கடல் பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் கூறும்போது, ''இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக்கொண்டு இருந்தனர். பலமுறை எச்சரித்தும் அவர்கள் திரும்பிச் செல்லவில்லை. அதனால் அவர்களைக் கைது செய்தோம். அவர்கள் வந்த 4 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன'' என்றார்.

தற்போது பாகிஸ்தான் சிறைகளில் 510 மீனவர்கள் உட்பட 570 இந்தியர்கள் உள்ளனர். அதேபோல இந்திய சிறைகளில் 745 மீனவர்கள் உட்பட 848 பாகிஸ்தானியர் உள்ளனர். இருதரப்பிலும் இதுபோன்று கைதுசெய்வது வாடிக்கையாக நடக்கிறது. கைதிகள் விடுதலை பற்றி ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழு மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் கூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# குண்டாக இருப்பவர்களுக்கு இரட்டை விமானக் கட்டணம்

## எயார் பிரான்ஸ் நிறுவனம் முடிவு

பரிஸ், ஜன. 26

குண்டாக இருப்பவர்களுக்கு எயார் பிரான்ஸ் விமான நிறுவனம் இரண்டு மடங்கு கட்டணம் வசூலிக்க முடிவு செய்துள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஏயார் பிரான்ஸ் விமானத்தில் பயணித்த குண்டு மனிதருக்கு அந்த விமான நிறுவனம் இரண்டு மடங்கு கட்டணம் வசூலித்தது. இது அந்தப் பயணியின் மனதைப் பாதிக்கும் செயல் என்பதால், ஏயார் பிரான்ஸ் நிறுவனத்துக்கு நீதிமன்றம் அபராதம் விதித்தது.

இருப்பினும், இந்த நடைமுறையை கட்டாயமாக்க எயார் பிரான்ஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து எயார் பிரான்ஸ் அதிகாரி மோனிக் மேட் குறிப்பிடுகையில், ''பயணிகளின் பாதுகாப்பைக் கருதித்தான் குண்டுப் பயணிகளுக்கு இரட்டைக் கட்டணம் வசூலிக்க முடிவு செய்துள்ளோம். குண்டுப் பயணிகள் ஒரே இருக்கையில் கஷ்டப்பட்டு அமர்ந்தாலும் பாதுகாப்பு பெல்ட் அவர்களின் இடுப்பில் பொருத்த முடியாது'' என்றார்.

''எனவே, குண்டான பயணிகளுக்கு ஒரு இருக்கைக்கு முழுக் கட்டணமும், அடுத்த இருக் கைக்கு 15 சதவீதக் கட்டணமும் வசூலிக்கப் படும். விமானத்தில் பயணிகள் அதிகமாக இருக்கும்போது மட்டுமே இந்தக் கட்டணம். விமானம் பயணிகள் குறைவாக செல்லும் போது இந்தக் கட்டணம் இல்லை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''அடுத்த மாதம் முதல் விமானத்தில் பயணம் செய்யப் பதிவு செய்பவர்களிடம் இந்த இரட்டைக் கட்டணம் வசூலிக்கப் படும். ஏப்ரல் மாதம் முதல் இந்தக் கட்டணம் அமுலுக்கு வருகிறது.'' என்றும் மோனிக் கூறினார்.

உலக அரங்கில்

# அமெரிக்காவுக்கு உளவு பார்த்த எழு பேர் சுட்டுக்கொலை

பெஷாவர், ஜன. 26

அமெரிக்காவுக்காக உளவு பார்த்தனர் என்ற குற்றச்சாட்டின்பேரில், தலிபான்களால் 7 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் மீரான்ஷா நகர் அருகே உள்ளகும் சரோபி என்ற இடத்தில் தலிபான் தீவிரவாதிகளால் இந்த ஏழு பேரும் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளனர்.

அவர்களில் 5 பேரின் சடலங்கள் கும் சரோபி என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட் டுள்ளன. 6 ஆவது நபரின் சடலம் குதாப் கேல் பகுதியிலும், 7 ஆவது நபரின் சடலம் ஹாய்சோர் என்ற கிராமத்திலும் கண்டெடுக்கப்பட்டன.

இந்தச் சடலங்களின் அருகில் அமெரிக்க உளவாளிகள் என்று எழுதப்பட்ட காகிதத் துண்டுகளும் கண்டெடுக்கப்பட்டன.

# நேபாள நிலப்பகுதியை இந்தியா ஆக்கிரமிப்பு

## பிரசண்டா குற்றச்சாட்டு

காத்மண்டு, ஜன. 26

''நேபாளத்துக்குச் சொந்தமான நிலப் பகுதிகளை இந்தியா ஆக்கிரமிப்பு செய்து வருகிறது'' என மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டா குற்றஞ்சாட்டியுள்ளார்.

''இந்தியத் தலைவர்களில் சிலர் பிரிட்டிஷ் அரசின் காலனி ஆதிக்க மனநிலையிலேயே செயற்பட்டு வருகிறார்கள். இதனால்தான் நேபாளப் பிரச்சினைகளில் தலையிடுவதற்கு ஆர்வம் காட்டுகிறார்கள்'' என்றும் அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

''எங்கள் கட்சி நாட்டின் சுதந்திரத்தைக் கட்டிக்காக்க உறுதியாகப் போராடி வருகிறது. அயல்நாடுகளின் ஆக்கிரமிப்புகளை எதிர்த்தும் போராடுகிறது. இந்திய-நேபாள எல்லையில் உள்ள கலாபனி, சுஸ்தா பகுதிகளில் நிலங்களை இந்தியா ஆக்கிரமித்துள்ளது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இந்தியா மீது சண்டையிடும் நோக்கம் எமக்கில்லை. ஆனால் அதற்காக எங்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாது. அதேபோல எந்த ஓர் அயல் நாட்டு சக்திக்கும் நாங்கள் தலைவணங்கவும் மாட்டோம்'' என்றும் பிரசண்டா கூறியுள்ளார்.

# பல தாக்குதல்களை வரிசையாக அமெரிக்கா மீது தொடுப்போம்

## புதிய ஒளிநாடா மூலம் ஒஸாமா பின்லேடன் எச்சரிக்கை

கெய்ரோ, ஜன. 26

அமெரிக்கா மீது மேலும் பல தாக்குதல்களை வரிசையாகத் தொடுப்போம் என அல்-குவைதா தலைவர் ஒஸாமா பின்லேடன் புதிய ஒளிநாடாவொன்றின் வாயிலாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''அமெரிக்கர்களாகிய நீங்கள், தாங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் எனக் கனவில் கூட நினைத்துப் பார்க்கக்கூடாது. பலஸ்தீன மண்ணில் நாங்கள் அமைதியைக் காணும்வரை - பலஸ்தீனத்துக்கு எதிரான தாக்குதலில் இஸ்ரேலுக்கு நீங்கள் உறுதுணையாக இருக் கும்வரை உங்களை நிம்மதியாக இருக்கவிடமாட்டோம். உங்களுக்கு எதிராகத் தொடர்ந்து தாக்குதலை நடத்திக்கொண்டிருப்போம்'' என்றும் பின்லேடன் உறுதிபட அதில் தெரிவித்துள்ளார்.

கட்டாரிலிருந்து செயற்படும் அல்-ஜஸீரா தொலைக்காட்சி அலைவரிசை பின்லேடனின் பேச்சு அடங்கிய புதிய ஒளி நாடாவை வெளியிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று அமெரிக்காவில் டெட்ராய்ட் நகருக்குச் சென்ற விமானத்தை குண்டு வெடிக்கச்செய்து தகர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நைஜீரியாவைச் சேர்ந்த அப்துல் முத்தலிப் என்ற தீவிரவாதி தன் தொடையில் மறைத்து வைத்திருந்த வெடிமருந்தை ஊசிமூலம் எடுத்து கலக்க செய்து அதன் மூலம் வெடிக்க வைக்க முயற்சி செய்தார்.

இந்த முயற்சி தோல்வியடைந்ததால், குண்டு வெடிக்கவில்லை. அதனால் விமானம் தப்பியது. அதில் பயணம் செய்த 300 பயணிகளும் தப்பினார்கள்.

விமானத்தைத் தகர்க்க முயன்ற அப்துல் முத்தலீப் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் நடந்த விசாரணையில் தான் அல்-குவைதா இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும், ஏமனில் தீவிரவாத பயிற்சி பெற்றார் என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்தத் தகர்ப்பு முயற்சிக்கு அல்-குவைதா தலைவர் ஒஸாமா பின்லேடன் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

ஒஸாமாவிடமிருந்து (அமெரிக்க ஜனாதிபதி) ஒபாமாவுக்கு என்ற தலைப்பில் ஒலிபரப்பான அந்த ஒளிநாடாவில் பின்லேடன், ''வீரஞ்செறிந்த போர்வீரன் அப்துல் முத்தலிப் பயணம் செய்த விமானம் மூலமாக தங்களுக்கு (ஒபாமா) செய்தி அனுப்பியது நான்தான். அது, ஏற்கனவே 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்கா மீது விமான தாக்குதல் நடத்திய மாவீரர்கள் கொடுத்த செய்தி போன்றது தான்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''வார்த்தைகள் மூலமாக எங்களது செய்தியை தங்களிடம் சேர்க்க முடிந்திருந்தால், அதை விமானம் மூலமாக அனுப்பி இருக்கமாட்டோம். பலஸ்தீனத்தில் நாங்கள் அமைதியாக வாழும் நிலை ஏற்படும் வரை, அமெரிக்கா தனது பாதுகாப்பைப் பற்றி கனவில்கூட நினைக்க முடியாது. காஸா பகுதியில் எங்கள் சகோதரர் கள் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும்போது, அமெரிக்கர்கள் அமைதியாக வாழ்வது சரியல்ல. எனவே, இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் ஆதரவு நீடிக்கும்வரை, அமெரிக்காவில் இதுபோல மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படும். இதுவே கடவுளின் விருப்பம்'' என்றும் பின்லேடன் கூறியுள்ளார்.

# ஐரோப்பிய நாடுகளில் தாக்குதல் நடத்த பெண் தீவிரவாதிகளுக்கு ஏமனில் பயிற்சி

## அமெரிக்க உளவு நிறுவனங்கள் எச்சரிக்கை

லண்டன், ஜன. 26

ஐரோப்பிய நாடுகளில் தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்காக பெண்களுக்கு ஏமனில் அல்-குவைதா பயிற்சி அளித்து வருகிறது என அமெரிக்க உளவு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அல்-குவைதா தீவிரவாதிகளும், தலிபான் தீவிரவாதிகளும் இதுவரை தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கு ஆண்களை மட்டுமே பயன்படுத்தி வந்தனர். இனி அவர்கள் பெண்களையும் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர் என்றும் இந்நிறுவனங்கள் விவரித்துள்ளன.

இதற்காக அரபுநாட்டினர் போல் தோற்றம் இல்லாத பெண்களை இந்தத் தீவிரவாதிகள் தேர்ந்தெடுத்துள்ளனர். தெரிவான பெண்களுக்கு ஏமனில் தற்கொலைத் தாக்குதல் நடத்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்றும் அவை குறிப்பிட்டுள்ளன.

இவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஐரோப்பிய கடவுச்சீட்டுகளில் பயணம் செய்து, ஐரோப்பிய நாடுகளின் விமானங்கள், மின்சார நிலையங்கள் ஆகியவற்றில் தாக்குதல் நடத்த விருக்கிறார்கள். இது தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் அமெரிக்க உளவு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அல்-குவைதா தீவிரவாதிகள் பிரிட்டனைத் தான் குறிவைத்திருக்கிறார்கள். அவர்கள் அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்த விருக்கிறார்கள். இதுபற்றிய தகவல் கிடைத்ததும் அரசு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

## நிதி ஒதுக்கீடு இல்லை: ஆப். தேர்தல் ஒத்திவைப்பு

இவ்வருட மே 22 ஆம் திகதி நடைபெற விருந்த ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் செப்ரெம்பர் 18 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதில் கர்சாய் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தல் நடைபெற்ற 5 மாதங்களுக்குப் பின்னர் மே மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர் தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட் டிருந்தது.

எனினும், இப்போது அது மேலும் 4 மாதங்களுக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை இந்தத் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையாளர் பாசில் அகமது மனாவி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு நிதி ஒதுக்கப்படாததாலும், பாதுகாப்பு அமையாததாலும் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் காரணம் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாட்டில் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை அண்மைக்காலமாக அதிகரிப்பு

## கவலை தெரிவிக்கிறார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜன.26

இயற்கை சூழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் யாழ்.குடாநாட்டில் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களை விட தற்போது பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை அதிகரித்திருக்கிறது. இந்த அதிகரிப்பானது கிராமம், நகரம் என்ற வேறுபாடின்றி உள்ளது.

யுத்தம் நிறைவடைந்த நிலையில் ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னரே பிளாஸ்ரிக் பாவனை அதிகரித்துள்ளது. பிறமாவட்டங்களிலிருந்து வரும் வியாபாரிகளால் அதிகளவில் பிளாஸ்ரிக் பொருள்களும் இங்கு கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகிறது.

அதுமட்டுமன்றி தேவைக்குப் பயன்படுத்துவதற்கென பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு அப்பால் அவை மலிவான விலையில் கிடைப்பதால் அவற்றைக் கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

உக்கும் தன்மையற்ற இந்த பிளாஸ்ரிக் பொருள்களால் இயற்கை சமநிலை பாதிக்கப்பட்டு அதன் விளைவை மக்கள் விரைவாக எதிர் கொள்ள வேண்டி ஏற்படும்.

எனவே, பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையைக் குறைத்து அதற்கு மாற்றீடான பாவனைப் பொருள்களைப் பயன்படுத்தி மக்கள் சமூக பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும் என்றார். (50-14)

# தேர்தல் கடமைகளுக்காக பஸ்கள்; பொதுமக்களின் போக்குவரத்துப் பாதிப்பு!

ஜனாதிபதி தேர்தல் பணிக்காக பஸ்கள் சேவைக்கமர்த்தப்பட்டதால் குடாநாட்டில் வழமையான போக்குவரத்துச் சேவைகள் நேற்று பாதிப்புக்குள்ளாயின .

இதனால் பொது மக்கள் நேற்றுப் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற, இந்தத் தேர்தல் பணிகளுக்காக நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் மினி பஸ்களும், இலங்கை போக்குவரத்துக்குச் சபைக்குச் சொந்தமான பஸ்களும் சேவைக்காக அமர்த்தப்பட்டன.

இதனால் குடாநாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை வழமையை விடக் குறைவாகக் காணப்பட்டன.

இதனால் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது. (50-9)

# யாழ்ப்பாணச் செய்திகள்

## தென்மராட்சியில் வெவ்வேறு விபத்துகளில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.26

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கன்ரர் வாகனத்துடன் மிதிவண்டியில் வந்தவர் மோதியதில் ஒருவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. இச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 5 மணிக்கு கல்வயலில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த த.செல்வராஜா (வயது-48) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (04-204-201)

## சனசமூக நிலையம் மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜன.26

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் மீண்டும் மக்கள் பாவனைக்காக இயங்கத்தொடங்கியுள்ளது.

அதனைவிட சனசமூகநிலையத்தில் நாளாந்தம் செய்திப் பத்திரிகைகளும் வாசிப்பிற்காக இடப்பட்டு வருகின்றன. நிலையத்தின் பாலர் நிலையமும் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (04-224)

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுப் பதிவாளர் கிளையில் ஆயிரத்து 543 விண்ணப்பங்கள் கடந்த வருடம் ஏற்பு

கோப்பாய், ஜன.26

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பதிவாளர் கிளையில் கடந்த வருடம் 9 ஆயிரத்து 543 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவற்றுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் கடந்த வருடம் புதிய பிறப்பு பத்திரங்கள் 266, காலங் கடந்த பிறப்பு பதிவுப் பத்திரங்கள் 372, பதிவுசெய்யப்பட்ட இறப்பு பதிவுப் பத்திரங்கள் 278, காலங் கடந்த இறப்புப் பதிவுப் பத்திரங்கள் 37, விவாகப் பதிவுப் பத்திரங்கள் 581, பிறப்புச் சான்றிதழ் திருத்தங்கள் 247 மற்றும் உத்தேச வயதுச் சான்றிதழ் பிறப்புச் சான்றிதழ் பிரதிகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மனித நேயக் கட்டமைப்பு அமைப்பின் உதவியுடன் நடமாடும் செயலக சேவை மூலம் காலங் கடந்த பதிவுகள் மூலம் பிறப்பு, இறப்பு பதிவுப் பத்திரங்கள் வருட இறுதிப் பகுதியில் வழங்கப்பட்டுள்ளன. (04-72)

# தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்புக் குழு பார்வை

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்.மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் எடுத்துச்செல்லும் பணியினைத் தேர்தல் கண்காணிப்புக்குழுவினர் நேற்று பார்வையிட்டனர்.

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பெட்டிகள் யாழ்.செயலகத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் பொலிஸாரின் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான பிரதம மேற்பார்வையாளர் தலைமையில் வாக்குப் பெட்டிகள் எடுத்துச்செல்லப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் 3 மணிவரை இந்த வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

வாக்குப்பெட்டிகள் எடுத்துச்செல்லும் பணிகளை ஆசிய கண்காணிப்பாளர் சங்கம், பொதுநலவாய கொமன் வெல்த் கண்காணிப்பாளர் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளே பார்வையிட்டனர். (04-09-14)

# தேர்தல் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளால் களைகட்டிய யாழ்ப்பாண செயலகம்

யாழ் ஜன 26

வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்கெடுப்புப் பெட்டிகள் எடுத்துச் செல்லும் நடவடிக்கைகள் காரணமாக யாழ்.மாவட்ட செயலக வளாகம் நேற்று களைகட்டியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

பொலிஸாரின் பாதுகாப்புடன் அரச அலுவலகங்கள் வாக்கெடுப்பு பெட்டிகளை பொறுப்பேற்று வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் சென்றனர். குழறுபடிகள் இடம்பெறாதிருப்பதற்காக பெருமளவு பொலிஸார் யாழ். செயலகத்தில் குவிக்கப்பட்டிருந்தனர்.

தேர்தல் கண்காணிப்புக் குழுவின் சர்வதேச மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தேர்தல் கடைமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை ஏற்றியிறக்கும் செயற்பாட்டில் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்களும் தனியார் மினிபஸ்களும் ஈடுபட்டிருந்தன.

தேர்தல் தினமான இன்று வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருக்கும் எனும் எதிர்பார்ப்பில் நேற்றைய தினம் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கென அதிகளவு மக்கள் யாழ் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு திரண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. (04-14-9)

# சிதைந்துபோன சிறுவீதிகளைப் புனரமைத்துத் தாருங்கள் மாநகரமுதல்வரிடம் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ். மாநகரசபையின் 22ஆம் வட்டாரத்தில் லோட்டஸ் வீதியில் உள்ள சிறு வீதிகள் பலகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதால் அதனைப்புனரமைத்துத் தருமாறு அப்பகுதி குடியிருப்பாளர்கள் யாழ். மாநகரசபையின் முதல்வரிடம் கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக குடியிருப்பாளர்கள் மாநகரசபை முதல்வரிடம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.மாநகரசபையின் 22 ஆம் வட்டாரமாகிய எங்கள் கிராமத்தில் லோட்டஸ் வீதியில் உள்ளசிறு வீதிகள் பலகாலமாகச் செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் வெள்ள நீர் ஓடாமல் தடைப்பட்டு வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளது. இவ்வீதியில் மழைநீர் ஓடாமல் தேங்கி நின்று கழிவு நீருடன் கலந்து சுகாதாரத்துக்கும் கேடு விளைவிக்கின்றது.

முன்னர் 10ஆம் வட்டாரமாக இருக்கும் பொழுது வட்டார அங்கத்தவரும் யாழ். மாநகர முன்னாள் மேயருமாகிய எஸ். துரைராசாவினால் இவ்வீதி கடந்த 40 வருடங்களுக்கு முன்பு கல்வீதியாகப் போடப்பட்டு தார் ஊற்றப்பட்டது. அதன் பின்னர் வந்தவர்கள் எவராலும் எங்கள் கிராமம்



கவனிக்கப்படவில்லை. இதனால் தண்ணீர் ஓடுவதற்கான மதகுகள் அடைபட்டு இருந்த இடமே இல்லாமல் போயுள்ளது. காணிக்காரர்களும் தங்கள் காணிகளை உயர்த்திமேட்டுநிலமாக்கியுள்ளதால் வீதிகள் கீழேயும் காணிகள் மேலேயும் இருக்கின்ற படியால் தண்ணீர் ஓட முடியாமல் தேங்கி நிற்கின்றது. இதனால் இங்கு வசிக்கும் மாணவர்களும், குடியிருப்பாளர்களும் இந்தக் கழிவு நீரில் அலசி அடித்துத்தான் போக்குவரத்துச் செய்ய வேண்டியுள்ளது. ஆகையினால் பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு வீதியைப் புனரமைத்துத்தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (04-9)

# பள்ளிவாசல் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.26

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த சாவகச்சேரி மொஹிதீன் ஜூம்மா பள்ளிவாசல் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

கண்டியில் உள்ள முஸ்லிம் பிரமுகர்கள் சேதமடைந்த கட்டடத்தினைப் பார்வையிட்டு புனரமைப்பு பணியினை விரைவில் ஆரம்பிக்க உறுதியளித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்களின் நிதி உதவியுடன் கொடிகாமம் ஜூம்மா பள்ளிவசாசலும் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (04-207)

# மாணவன் காயம்

யாழ்ப்பாணம், ஜன.26

அளவுக்கதிமான சுமையினை ஏற்றிச் சென்ற மிதிவண்டியின் சில்லுபள்ளத்தில் இறங்கிய போது சமநிலைதளம்பி தூக்கி வீசப்பட்டதால் பாடசாலை மாணவன் ஒருவன் காயமடைந்தார்.

இச் சம்பவம் அண்மையில் அல்லாரையில் இடம் பெற்றது

த.கொன்லென்ரா (வயது 15) என்னும் மாணவரே இதன்போது தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (04-207)



தென்மராட்சியில் மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் நிலைகொண்டுள்ள படையதிகாரிகளால் அண்மையில் கொண்டாடப்பட்ட தைப்பொங்கல் விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் தென்னிலங்கை நடனக் குழுவினரின் நடன நிகழ்வை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு தொகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள் அருணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மையோடு தூசுகளும் படிந்திருக்கும் யாழ். அருங்காட்சியகம்

ஒரு இனத்தின் இருப்பினை ஆதார பூர்வமாக உலகிற்கு கோடிட்டுக் காட்டுவது தொல்லியற் பொருள்கள். இவ் அரிய பொருள்களைக் கருவறை போலப் பேணிப் பாதுகாத்து வருவது அருங்காட்சியகங்கள் ஆகும். அந்த வகையில் அருங்காட்சியகங்கள் அன்றும், இன்றும் , என்றென்றும் வரலாற்றிற்கு உயிரூட்டிக்கொண்டு இருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

அருங்காட்சியகத்தினை ஆங்கிலத்தில் "Musuam" என்பார்கள். இச்சொல் முதல் முதலில் 1981 ஆம் ஆண்டு Oxford ஆங்கில அகராதியில் இடம்பெற்றது. "எட்வார்ரூ பிலிப்ஸ்" பதிப்பித்த 6வது சொல் அகராதியில் "Musuam" என்பதற்குக் கல்விக் கூடம், நூலகம், கல்லூரி, பொது இடம் , கல்வியாளர் கூடம் என்று கூறப்பட்டது. ஆனால் இதனைத் தமிழிலே அருங்காட்சியகம், கண்காட்சியகம், நூதனசாலை, கலைக்கூடம், காட்சிச்சாலை, அகழ் வைப்பகம் என்று அழைக்கப்பட்டது. ஆனாலும் பெருமளவில் பொதுமக்கள் காணவருவதால் பொதுவழக்கில் அருங்காட்சியகம் என அழைக்கப்படுகின்றது.

இக் காட்சியகத்திற்கு நீண்ட வரலாறு இல்லாமற் போனாலும் இங்கு சேமிக்கப்பட்டுள்ள தொல்லியற் பொருள்களுக்கு மிகவும் நீண்டகால வரலாறு உள்ளது. இவற்றின் மூலம் கடந்த கால வரலாற்றில், மக்களின் சமூக , சமய, பொருளாதார, அரசியல், தொழில் நுட்ப மற்றும் கலாசாரம் என்ற எல்லா விடயங்கள் பற்றியும் தகவல் பெறும் தகவற் களஞ்சியமாக இவ் அருங்காட்சியகங்கள் விளங்குகின்றன.

12ஆம் நூற்றாண்டளவில் தொல்பொருள் சின்னங்கள் வீடுகளை அழகுபடுத்தும் அலங்காரப் பொருள்களாகப் பார்கப்பட்டது. அப்பொழுதிலிருந்தே அருங்காட்சியகம் தோன்றுவதற்கு அடித்தளம் இடப்பட்டுள்ளது எனலாம். இதன் பின்னர் ஏற்பட்ட பிரான்சியப் புரட்சி, தொழிப்புரட்சி, மறும லர்ச்சி என்பவற்றின் காரணமாக தொல்லியற் பொருள்கள், தொல்லியற் சாலைகளின் முக் கியத்துவமும் படிப்படியாக அதிகரித்தது.

அந்த வகையில் நம் இலங்கையில் தொல்லியல் ஆய்வு முதன் முதலில் பிருத்தானியராலேயே மேற்கொள்ளப்பட்டது. 1818 ஆம் ஆண்டில் பிரித்தானிய தரைப் படை அதிகாரியான லெப்டினட் M.H. பாகன் அவர்கள் கலகக் காரர்களைப் பிடிக்கப் பொலநறுவையில் தேடுதல் நடத்தினார். அப்போது ஏதேச்சையாக பொலநறுவையின் பண்டைய நினைவுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக் காலம் பிரித்தானியர் பொலநறுவையை "தொபாறே" என்றே அழைத்தனர். இக்கண்டுபிடிப்பின் பின்னர் 1820 ஆம் ஆண்டு "பொலநறுவையில் பாகன் கண்ட இடங்கள்" என்ற நூல்வெளியானது. இதன் பின்னர் ஆர்வமுள்ள மக்கள் கூட்டாகச் சேர்ந்து அகழ்வுகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து 1868 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரச அதிபரான H.S.றசல் அவர்கள் "சிங்கள மக்களின் தொல்லியற் சின்னங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்" என்ற கோரிக்கையை முன் வைத்தார். இதன் விளைவாக மசோதாக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1869ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது தொல்லியற்சாலை அமையப்பெற்றது.

மேலும் இலங்கையின் தொல்லியற் சட்டத்திற்கு அமைவாக 100 வருடங்களுக்கு முன்னர் நாம் பாவித்த அனைத்துப் பாவனைப் பொருள்கள், நினைவுச் சின்னங்கள், மரபுகள் என்பன தொல்லியற் பொருள்களாகக் கணிக்கப்பட்டு அருங்காட்சியகங்களை அலங்கரித்தன. அந்தவகையில் வட இலங்கையில் இரண்டு அருங்காட்சியகங்கள் திறக்கப்பட்டன. அவை யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைமையமாகக்கொண்டிருந்தன. 1942 ஆம் ஆண்டு தேசிய அருங்காட்சியகச் சட்டத்திற்கு அமைவாகக் கொழும்பு அருங்காட்சியகம் தேசிய அருங்காட்சியகமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. சில ஆண்டுகளின் பின்னர் கண்டி, யாழ்ப்பாணம், இரத்தினபுரி என்பன தேசிய அருங்காட்சியகங்களாக ஸ்தாபிக்கப்பட்டன.


(படம்: உமா)

இவ்வாறு 1956 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அருங்காட்சியகம் 2 ஆம் குறுக்குத் தெருவில் அமைக்கப் பட்டது. பின்னர் 1965 ஆம் ஆண்டு மந்திரி சபைத் தீர்மானத்தின்படி யாழ். அருங்காட்சியகம் புதைபொருள் ஆராய்ச்சித் திணைக் களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் ஆங்கிலேயர் பாணியில் அமைந்த தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவந்தது. அக் காலம் பெரும்பாலான செயற்பாடுகள், கோட்டையை அண்டிய பிரதேசங்களிலேயே காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கண்டுபிடித்த பொருள்கள் இதனை அலங்கரித்தன. இங்கு நாளுக்கு நாள் பொருள்களும் அதிகரித்தன. எனவே பொருள்களைக் காட்சிப்படுத்துவதில் உள்ள சிரமம் காரணமாகவும் நகரமயமாக்கல் போன்றவற்றாலும் இவ் அருங்காட்சியகத்திற்கு என ஒரு சொந்தமான கட்டடம் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் காரணமாக 1956-1984 ஆம் ஆண்டுவரை 2ஆம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த அருங்காட்சியகம் 1985 ஆம் ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்டது.

அந்த வகையில் 1972 ஆம் ஆண்டு மார்கழி 18 ஆம் திகதி கௌரவ "S.S. குணதிலக" அவர்களால் நாவலர் வீதியில் உள்ள இந்து கலாசார மண்டபத்திற்குப் பின்புறமான நிலப்பகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டது. இது 11 கூடங்களைக் கொண்டு கண்டிக் காலக் கலைப்பாணியல் கட்டி முடிக்கப்பட்டது. கட்டி முடித்த அதே ஆண்டே மக்களின் பார்வைக்காகவும் திறக்கப்பட்டது. இவ் அருங்காட்சியகத்தில் பொருள்கள் 8 கூடங்களில் காணப்படுகின்றன. வரலாற்று உதய காலம் தொடக்கம் ஆங்கிலேயர் காலம்வரையிலான பொருள்களும், மாதிரிப் பொருள்களும் திமிங்கிலத்தின் எலும்பு போன்றனவும் தொல்பொருள்ச் சின்னங்களாக உள்ளன.

அதாவது கருங்கல்லிலான நாவலர் சிலை, நீர்த்தடாகம், பலிபீடம், வள்ளி தெய்வானை முருகன் சிலை, நந்தி, பாண்டியப் பெண்கள் அணிந்த வளையல்கள் மற்றும் பல்வகை ஆபரணங்கள், பாக்குவெட்டி, போன்ற பாவனைப் பொருள்கள், மாப்பாண முதலியாரின் பல்லக்குச் சிதைவுகள், சுடுமண் சிற்பங்கள், யானைத் தந்தத்தில் செய்த அலங்காரப் பொருள்கள், பன்றிமுள்ளில் செய்யப் பட்ட நகைப் பெட்டி, டச்சுக்காலச் சூரியக் கடிகாரம், விக்டோரியா மகாராணியின் ஓவியம், மரச் செதுக்கல்கள் மற்றும் அல்லைப்பிட்டியில் கண்டெடுக்கப்பட்ட சீனக்கூசாக்கள் என்பனவும் காணப்படுகின்றன.

இவற்றில் சிறப்பாகத் தமிழர்களிடம் வழக்கொழிந்து போயுள்ள "வசந்தன் கூத்தின் மாதிரியும்" காணப்படுகின்றது. மேலும் இங்கு காணப்படும் வாள், அம்பு, ஈட்டி என்பவற்றின் பிரமாண்டம் மற்றும் கலை நுட்பத்தை நோக்கும்போது எமது மூதாதையரின் வீரம், கலைத்திறனை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. ஆனாலும் இவற்றில் பெரும்பாலான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. அதாவது 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள போது பெறுமதியான இரண்டு யானைத் தந்தங்களும், வெண்கலப் பீரங்கியும் களவாடப்பட்டுள்ளன. மேலும் தங்க ஆபரணங் கள் மற்றும் துப்பாக்கிகள் என்பன காவல் நிலையங்களில் பாதுகாப்புக்காகக் கொடுக்கப்பட்ட போதும் அவை இன்று வரை அருங்காட்சியகத்திற்கு மீளக்கொடுக்கப்படவில்லை. மேலும் இது தவிரப் பல அரிய தொல் பொருள்ச் சின்னங்களும் காணாமற் போயுள்ளன. யுத்தத்தின் காரணமாக நாணயங்கள் சேதத்திற்கு உள்ளாகி விட்டன. இப்பொழுது 100 நாணயங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. யாழ். அருங்காட்சியகத்தின் கீழ் பின்வரும் பழமை வாய்ந்த 3 கட்டடத் தொகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவையாவன.

1. கந்தரோடைத்தூபி
2. சங்கானையில் உள்ள கோட்டைக் கட்டடம்
3. நெடுந்தீவில் உள்ள கோட்டைக் கட்டடம்

இவற்றுடன் யாழ்.அருங்காட்சியக வளாகத்தினுள் நாவலர் வாழ்ந்தாகக் கருதப்படும் வீட்டின் ஒரு பகுதிச் சுவர் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு எழுத்துருவில் சாதாரண அருங்காட்சியம் போலத் தோன்றினாலும் நேரில் தரிசிப்பவர்களுக்கு இதன் தோற்றம் ஏமாற்றத்தையே பரிசாக வழங்குகின்றது. ஏனெனில் தூசினுள் ஒரு தூசாகவே இங்குள்ள பொருள்கள் காணப்படுகின்றன. இது தமிழரையும் தமிழர் தம் பண்பாட்டை நேசிக்கும் நெஞ்சங்களுக்கும் மிகுந்த மனவ ருத்தமாக அமைகின்றது. அங்கு சிறந்த பராமரிப்பு இல்லை, மின்குழிழ்கள் போதுமானவையாகக் காணப்படவில்லை. ஆனால் ஏனைய அருங்காட்சியகங்கள் அவ்வாறு இல்லை. மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டுச் சிறந்த பராமரிப்புடன் சகல வசதிகளுடனும் காணப்படுகின்றன. சாதாரணமாகஒரு தொல்யியல் சின்னத்தின் பெயர் கூடத் தெளிவாக எழுதப்படவில்லை. இதற்கான காரணம் என்ன? அருங்காட்சியகப் பணியாளர்களின் ஆலட்சியப் போக்கா அல்லது பேரினவாதத்தின் நிர்ப்பந்தமா? இதற்கு விடையாகப் புத்திஜீவிகளிடம் இருந்து கிடைத்தது வெறும் மௌன மொழிதான்.

எனவே ஒரு நாட்டின் எதிர்கால அபிவித்திக்குத் தேவையான கடந்த காலச் சம்பவங்களை அளித்துதவி வழி நடத்தும் பங்கை அருங்காட்சியகங்கள் கொண்டுள்ளன. அது மட்டுமல்லாமல் எமக்கு ஒரு கல்வி நிலையமாகவும் உள்ளது. இவ்வாறான ஒரு உயரிய பண்பாட்டுச் சின்னங்களை ஒரு இனத்தின் பெயரில் நசுக்க முற்படுமாயின் அவ் இனத்தின் எதிர்காலம் இருப்பேகேள்விக் குறியாகி விடும். அந்த வகையில் தமிழர்களான எமது பாரம்பரியம், இயற்கைவளம், தேசிய வரலாறு, எமது முன்னோர்களின் வாழ்க்கை முறை பற்றிய இத் தொல் பொருள் சின்னங்களைக் கொண்டிருக்கும் நம் யாழ். அருங்காட்சியகத்தை நம் கண்ணெனப்பேண வேண்டியது தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரதும் கடமையாகும்.

ஆ.பிரியந்தினி

## பாடசாலைகளின் அபிவிருத்திக்கு மாகாண அமைச்சு நடவடிக்கை!

ஏறாவூர், ஜன. 26

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆரம்பப் பிரிவு பாடசாலைகளைத் தெரிவு செய்து அவற்றை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டமொன்றைக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்படும் பாடசாலைகள் மாதிரி ஆரம்பப் பிரிவு பாடசாலையாக அபிவிருத்தி செய்யப்பட வுள்ளன. இத்தகவலைக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச் சின் செயலாளர் உபுல் வீரவர்த்தன வழங்கினார்.

கிழக்கு மாகாணத்தின் 15 கல்வி வலயப் பிரிவுகளில் உள்ள 24 பாடசாலைகள் இவ்வேலைத் திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளன.

தரம் -01 தொடக்கம் 05 வரையான வகுப் புக்களைக் கொண்டு இயங்கி வரும் இப்பாடசாலைகளில் முறையான முகாமைத்துவ மாற்றங்களை மேற் கொள்கின்றமையே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு விசேடத் துவப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

(09-157)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 . 03 . 1977



மறைவு 19 . 01 . 2009

அமரர் சற்குணநாதன் குலதாசன் (குலன்)

உப அஞ்சல் அதிபர், விடத்தற்பளை

ஆண்டு ஒன்று ஓடிச் சென்றாலும்
உன் மரணச் செய்தி அறிந்து ஒரு மாதமே!
இதனை அறிந்தும் உன் உடலை
கண்ணால் பார்க்க முடியவில்லை
இதனால் ஆறவில்லை எம் துயரம்
அன்புடன் எமைக் காத்து
அறிவுரைகள் பல கூறி
பண்புடன் எமை வளர்த்து
பாரினில் உயர வைத்தீர்
மணக்கோலம் காண நாமிருக்க
எமைப் பிரிந்து சென்றீர்
ஆயிரம் உறவு இருந்து என்ன
உன் அன்பைப் போல் வருமா?
எந்நாளும் உன் நினைவை
இதயத்தில் சுமந்திருப்போம்.

விடத்தற்பளை
மிருசுவில்.

குடும்பத்தினர்.

## பாலன் மில்

தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய் } ஆலை

கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித் தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெயாக உடன் ஊற்றித்தரப்படும். நாடவேண்டிய ஒரே இடம் [illegible]

தொ.பே: [illegible]




செலான் வங்கி நெல்லியடிக் கிளையினால் முதல் தடவையாக செலான் லீசிங் அடிப்படையில் வழங்கப்பட்ட வாகனத்தை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் கலாநிதி பத்மநாதன் நிரஞ்சன் வாடிக்கையாளருக்கு வழங்குவதையும் அருகில் நெல்லியடிக் கிளை முகாமையாளர் இ.ரவிராஜ், உதவி முகாமையாளர் க.மகிந்தன், கடன் மீளப்பெறும் அதிகாரி சிராந்த சில்வா, அதிகாரி டேமியன் ஞானப்பிரகாசம், அதிகாரி ப.பரமேஸ்வரன் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.


## மரண அறிவித்தல்

### இராமசாமி தில்லைநாதன்

நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி தில்லைநாதன் நேற்று (25.01.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை-சிவகாமி தம்பதியினரின் அன்பு மருமகனும் பகவதியம்மாவின் அருமைக்கணவரும், விஜயரூபன், சிவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வள்ளிநிதியின் மாமனாரும் வைஷ்ணவி, சைந்தவி ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
8 ஆம் வட்டாரம்,நயினாதீவு. (94700) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு ஏற்பட்ட பரிதாபநிலை




-சுந்தா-

வதிரி ஆலங்கட்டை மயானம் மூன்று கிராமசேவகர் பிரிவினைக் (ஜே/375,376,377) கொண்டது. இம்மயானம் ஒரே புற்காடாகவும் கிணறு இருந்தும் நீர் இன்றி மக்கள் அச்சப்படும் காடாகவும் மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யாத நிலையிலும் காணப்படுகின்றது.

சுமார் 18 வருடங்களுக்கு மேலாக மேற்படி மயானத்தின் அந்திம சேவைகளுக்கான தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இம் மயானத்திற்காக அதன் எல்லைக்குள் வெட்டப்பட்ட இரண்டாவது கிணறு இதுவாகும். இக்கிணறு 35 அடிக்கு மேலாக தோண்டப்பட்டபோதும் அதனுள் நீர் இன்றி கால்நடைகளின் கழிவுப் பொருள்களும் குப்பை கூழங்களும் போடப்படும் குப்பைத் தொட்டியாகவும் உள்ளது.

மேலும் தற்போது பெருகிவரும் நுளம்பினால் மக்களைக் கொன்று குவிக்கும் காய்ச்சல்கள் வந்தபோதும் கூட மயானம் விடயமாக அதற்கு உரிமையாளராக இருக்கும் கரவெட்டிப் பிரதேசசபையினரின் பாராமையால் மக்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

# எழுச்சி கண்டு தலை நிமிர்ந்து நிற்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

இலங்கை மண் தந்த 54 மத்தியமகாவித்தியாலயங்களில் உயர்ந்த பெருமைகளையும் புகழையும் தனக்குள்ளே கொண்டு தன்னிகரற்று தலைநிமிர்ந்து நிற்கிறது நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம். வடமராட்சியில் உள்ள நான்கு மத்திய மகா வித்தியாலயங்களில் இதுவே பாரிய கட்டுமானங்களையும் வளங்களையும் உடைய பிரமாண்டமான பாடசாலை ஆகும். வடமராட்சி மண்ணின் மத்தியிலே நெல்லியடி மண்ணிலே புவியியல் ரீதியாக வடமராட்சியின் இருதயப்பகுதியிலே இயங்கி வருகின்ற பாடசாலை இதுவாகும். வரலாற்றில் பல புத்திஜீவிகளையும் சான்றோர்களையும் தந்த, தந்துகொண்டு இருக்கின்ற இப்பாடசாலை 1921 ஆம் ஆண்டு சில சமூகப் பற்றாளர்களாலும் கடமையுணர்வும் சமூக உணர்வும் கொண்ட அரச அதிகாரிகளால் இப்பாடசாலை ஒரு மாதிரிப் பாடசாலையாக நிறுவப்பட்டது. குறைந்தளவு வளங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1940 ஆம் ஆண்டு இலங்கைக் கல்வி வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்த மத்திய மகாவித்தியாலயங்களின் உருவாக்கம் இக்கல்லூரியின் வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்தது. அக்காலகட்டத்தில் இலங்கை கல்வியமைச்சராய் இருந்தவரும் இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்படுபவருமாகிய சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களின் திறமையான நடவடிக்கையால் இலங்கையில் 54 மத்திய மகாவித்தியாலயங்கள் துளிர்விட்டன. அந்த வரிசையில் அக்காலகட்டத்தில் தனக்கென தனித்துவம் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கின்ற மத்திய மகாவித்தியாலயம் இதுவென கூறுதல் சாலப் பொருத்தமானதாக அமையும். அந்தவகையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்டு கல்வி கற்றனர். அனைத்துக் கல்வி வளங்களையும் உடைய இப்பாடசாலைஅன்றைய கால கட்டத்தில் தேசிய பாடசாலைகளுக்கு சரிநிகர் சமனாக வளர்ச்சி கண்டு வந்தது. அக்காலத்தில் உயர் நிலை மற்றும் சிரேஷ்ட பிரிவுகளில் விஞ்ஞானபிரிவை கொண்டிருந்த பாடசாலையாக இருந்தது. இப்பாடசாலையில் கல்வி கற்ற பல மாணவர்கள் இன்று விஞ்ஞானிகளாகவும் பொறியியலாளர்களாகவும் ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் உயர்பதவிகளையும் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.புறக்கிருத்தியச் செயற்பாடுகளை பொறுத்தவரையில் இப்பாடசாலை மாணவர்கள் கடேற் தொண்டர் படையணி, சாரணர் படையணி, கால் பந்து, கிரிக்கெட் மற்றும் தடகள விளையாட்டுக்களில் அகில இலங்கை ரீதியில் முன்னணி வகித்தனர். இவ்வாறு இப்பாடசாலையை வளர்த்து எடுக்க பக்கத்துணையாக நின்று உழைத்தவர்களில் புகழ்பூத்த நாடாளுமன்ற உறுப்பினரும் சிறந்த சமூக நீதிக் கொள்கையாளருமாகிய பொன். கந்தையா குறிப்பிடத்தக்கவர். 1959 காலப்பகுதியில் இப்பாடசாலையை அனைத்து வளங்களும் உடைய பாடசாலையாகமாற்ற இக்கல்லூரியோடு தோளோடு தோள் நின்று உழைத்தார். ஏனைய பாடசாலைகளைவிட முன்னேற்ற கரமான செயற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டிருந்த இப்பாடசாலை விடுதி வசதிகள் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டிருந்தது. 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.த.இராசலிங்கம் தனது அரச நிதி ஒதுக்கீட்டின்மூலம் பாரிய ஒரு மண்டபத்தைக் கட்டிக்கொடுத்தார்.இதுவே அக்காலத்தில் வடமராட்சியில் உள்ள பாரிய மண்டபமாக விளங்கியது. இம் மண்டபத்தில் பல நிகழ்வுகள், விழாக்கள் கோலாகலமாக நடந்தன.

இவ்வாறு எழுச்சி பெற்றுவந்த பாடசாலை பிற்பட்ட காலத்தில் பாரிய சவால்களை அடுத்தடுத்துச் சந்தித்தது. 1987 காலப்பகுதியில் வடமராட்சி மண்ணிலே விஸ்வரூபமெடுத்த யுத்த அனர்த்தம் இப்பாடசாலையை வலுவாகப் பாதித்தது. இதனால் இப் பாடசாலை இருந்து வந்த நிர்வாக கட்டடம் இராசலிங்கம்ஆராதனை மண்டபம், நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடங்கள் போன்ற பெரும்பாலான அனைத்து வளங்களும் முற்றாகச் சின்னாபின்னமாகிச் சிதைந்து போயின.இதன் பின்னர் கல்வி இணைப்பாட விதானச் செயற்பாடுகள் வலுவாகப் பாதிப்படைந்தது. இக்காலகட்டத்தில் யாழ் மாவட்டத்தில் முன்னணி நிலையில் இருந்த கடேற் அணியின் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன. நாட்டில் நிலவிய அரசியல் குழப்ப நிலைகளின் காரணமாக பாரிய மாணவர் தொகை வீழ்ச்சியைச் சந்தித்தது. இவ்வாறு பாரிய அதிர்ச்சிகளை சந்தித்து வந்த இப்பாடசாலைக்கு அடுத்த பாரிய அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது 1991 ஆம் ஆண்டு சமூக மட்டத்தில் இருந்த சில சமூக நோக்கற்ற தீர்க்க தரிசனமற்றவர்களின் செயற்பாடுகள் காரணமாக இப்பாடசாலை பெண்கள் பிரிவு பிரிந்து செல்லவேண்டிய பாரிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் இப் பாடசாலைக்குக் கிடைக்கவிருந்த தேசிய பாடசாலை என்னும் உயரிய மகத்துவம் கிடைக்காமல் போயிற்று.

இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள் இப்பாடசாலைக்கு மகத்தான பங்களிப்பை வழங்கினர். இந்தவகையில் திரு.சிவசிதம்பரம், திரு.வி.கே. நல்லையா, திரு.கே.குணரட்ணம்,திரு.எஸ். றோய்காந்தராஜா,வி.அருளானந்தம்,திரு. எஸ்.சிற்றம்பலம், திரு.எஸ். சேதுராஜா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அக்காலகட்டத்தில் குறிப்பாக 1991 காலப்பகுதியில் நெருக்கடியை சந்தித்த இப்பாடசாலை திரு. சிற்றம்பலம் அவர்கள் பொறுப்பேற்றார்.அவரின் செயற்பாடுகள் பாடசாலையின் அபிவிருத்திக்கு அடித்தளமிட்டன. 2001 ஆம் ஆண்டு இக் கல்லூரியை பொறுப்பேற்ற எஸ்.சேதுராஜா பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினையும் பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தையும் ஒருங்கிணைத்து பாடசாலையை அபிவிருத்திப் பாதையில் நகர்த்தி வருகின்றார். இவரின் நிர்வாகத் திறமையும் முகாமைத்துவத்திறன் காரணமாக இன்று பாடசாலை தேசிய பாடசாலைகளுக்கு நிகரான பாடசாலையாக மிளிர்ந்து வருகின்றது.

அந்தவகையில் இப்பாடசாலைக் கட்டுமானங்கள் புத்தெழுச்சி பெற்று வருகின்றன. பாரிய கட்டுமானமுடைய பாடசாலையாக இது எழுச்சி கண்டு வருகின்றது. பாடவிதான அடைவுகளில் ஜீ.சி.ஈ. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளில் இப்பாடசாலை மாணவர்கள் சாதனை நிலைநாட்டிவருகின்றனர். கணனித் துறையில் ஜூனியஸ் 2008 இல் இப்பாடசாலை மாணவர்கள் தேசிய ரீதியில் வெற்றி பெற்றனர். தமிழ்தின மற்றும் ஏனைய தமிழ் அறிவுப் போட்டிகளான விவாதம் ,கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகம் போன்ற துறைகளில் இப்பாடசாலை மாணவர்கள் தேசிய ரீதியில்அடைவுகளைப் பெற்று வருகின்றனர். சாரணர் அமைப்பும் இப்பாடசாலையில் எழுச்சி பெற்று பெண் மாணவிகளும் உள்வாங்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. அந்த வகையில் 2006 ஆம் ஆண்டு நுவரெலியாவில் இடம் பெற்ற தேசிய ஜம்போறியில் இப்பாடசாலை ஆண் சாரணர் அணியினர் வெற்றி பெற்றது சிறந்த சான்றாகும். விளையாட்டைப் பொறுத்தவரையில் இப்பாடசாலை மாணவ, மாணவிகள் தேசிய ரீதியில் சாதனை படைத்துவருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆகவே,இவ்வாறு ஒரு தேசிய பாடசாலைக்குரிய அனைத்து வளங்களுடன் இயங்கி வரும் இப்பாடசாலை மேலும் உதவிகளும் வளங்களும் கிடைக்கப் பெறும் பட்சத்தில் ஒரு பாரிய தேசிய பாடசாலையாக மாற்றமடையும் என்பதில் இருவேறு கருத்திற்கிடமேயில்லை.

ஹரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பிள்ளைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். வாகன பயணங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவு செய்ய லாம். மறதியால் அவதியுண்டு.

### இடபம்



மதிப்பு, கௌரவம் மேம்படும். உறவினர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிறிய பிரச்சினை ஒன்றுக் காகப் பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். கொடுக்கல் வாங் கல்களில் கவனம் அவசியம்.

### மிதுனம்



கடனாக வாங்கிய பணத்தை, திருப்பிக் கொடுக்கலாம். பழைய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். முக்கிய வேலையாக சிலர் வெளியூர் பயணம் செல்லலாம். விருந்தினர் வருகையால் செலவுகள் கூடும். தொழில் ரீதியான விடயங்களில் சிலரிடம் கண்டிப்பாக நடந்து கொள்ளலாம். அனுகூலமான நாள்.

### கடகம்



பெண்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். வாக னங்கள் பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள். உறவினருக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். மற்றவர்க ளுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். நண்பர்கள் வட்டம் விரி வடையும்.

### சிங்கம்



வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் அதிகரிக்கும். வெளியூர்களில் இருக்கும் சிலர் மூலம் நீங்கள் முக்கிய செய்திகளைக் கேட்கலாம். மாமன், மைத்துனர்கள் உங்களின் முயற்சிகளுக்கு ஆதரவு தருவர். ஓய்வாக இருக்க நினைத்தாலும், முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். நினைத்தது நடக்கும் நாள்.

### கன்னி



இரண்டு நாட்களுக்கு முன் நின்ற வேலை ஒன்றை, இன்று வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும். இடமாற்ற விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு. உறவினர் ஒருவருக்காக நீங்கள் மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். கனவுத் தொல் லையுண்டு.

### துலாம்



திட்டமிட்ட காரியங்கள் நடப்பதில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். உங்களுக்கு வேண் டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட் டலாம். நீண்ட தூர பயணங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். சபலங்களால் சங்கடங்களுக்கு ஆட்படலாம். பேச்சில் நிதானம் அவசியம்.

### விருச்சிகம்



கணவன் மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். நீண்ட நாள் முயற்சி ஒன்றுக்குப் பலன் கிடைக்கும். எதிர்பாராத பண வரவுகளைப் பெறலாம். மாணவர்கள் ஆசிரியர்களின் பாராட் டுக்களைப் பெறுவர். உங்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றைப் பற்றி நண்பர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

### தனுசு



அயலாரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். உறவினர்கள் வகையில் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். சுயநலமின்றி மற்றவர்களுக்காகச் சில காரியங்களைச் செய்து கொடுப்பீர்கள். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். மற்றவர்கள் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறலாம்.

### மகரம்



திட்டமிட்ட வேலைகளில் சில மாற்றங்களைச் செய்யலாம். மற்றவர்கள் புரிந்து கொள்ளாத வகையில் சில விடயங்களில் செயல்படுவீர்கள். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர் களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

### கும்பம்



எந்த வேலையையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். போக்குவரத்துகளால் அனுகூலம் உண்டு.

வர்த்தர்களுக்கு கொடுக்கல் வாங்கலில் சுமூகமான நிலைமை காணப்படும். சகோதரர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய் வீர்கள்.

உறவினர் ஒருவர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம்.

### மீனம்



கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள்., நண்பர்கள் மூலம் நல்ல வாய்ப்புகள் தேடி வரலாம். விடா முயற்சி ஒன்றுக்கு வெற்றி கிடைக்கும். பெண்கள், சகோதரிகள் வழிகளில் உதவிகள் கிடைக்கும். சக ஊழியர்கள் சிலருக்கு நல்ல ஆலோசனைகள் சொல்வீர்கள். மனதில் உற்சாகம் குடிகொள்ளும்.


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

05.04.1940 தோற்றம் 08.07.1942
04.02.2009 மறைவு 18.01.2009







இராசா இன்பமணி

செல்லையா கோபாலபிள்ளை

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் மனம்
உங்கள் அன்பும் அரவணைப்பும் எங்களை ஆறுதல்படுத்தட்டும்.

எம் இல்வாழ்வின் நல்முத்தாய்
வந்துதித்த குலக்கொழுந்தே!
புன்னகைக்கும் புதுமலராய்
மடிதவழ்ந்து மகிழ்வித்தாய்
சிறு காற்றும் உனைத்தீண்டா
சிறகிடுக்கில் காத்து வந்தோம்
மூவுடலும் ஒருயிராய்
ஓர் கூட்டில் மகிழ்ந்திருந்தோம்
எங்கு சென்றாய் மரகதமே?
துள்ளி ஓடும் புள்ளி மானாய்
பள்ளி செல்லும் உன்னழகு
பொறுக்காமல் பறித்தானோ கொடுங்காலன்?
உனைச் சுமந்த என்வயிற்றில்
பெருநெருப்பு எரியுதையா
கண்முன்னே விழுந்தாயே கண்மணியே!
அறிவின் சிகரமாய் நீ உயர அகமகிழ்ந்தோம்
ஏகனே நீயே அனைத்துமாய் என்றிருந்தோம்
கந்தக இரும்புகள் உயிர் குடிக்கப் பார்த்திருந்தோம்
எல்லாம் கனவாகி வானுறைந்தாய் தெய்வமாய்
மறு ஜென்மம் என்றிருந்தால்
மகனாக வா மகனே
உனக்காகக் காத்திருக்கும் என் கருவறை



தோற்றம்:
22.04.1992

மறைவு:
26.01.2009

## தவச்செல்வம் திலீபன்

(யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனும் பின்னர் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவனும் O/L 2008)

கோப்பாய் தெற்கு.

விந்தன் மாமா குடும்பம் (கனடா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.06.1987

* யாழ். குடாநாட்டு மக்களுக்கு இந்தியா வழங்கும் நிவாரணப்பொருள்களை படகுகளில் காங்கேசன்துறை துறைமுகத்தில் கொண்டு வந்து ஒப்படைப்பதற்கான உடன்பாட்டில் இரு நாட்டு அரசுகளும் கைச்சாத்து.

* அவசரமாக பாகிஸ்தானுக்குச் சென்ற தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் மந்திராலோசனை.

* இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா எவ்வாறு தலையிட இயலும்? என பிரதமர் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

17.06.1987

* இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்ல விரும்பித் தமது சொந்த இடங்களை விட்டுப் புறப்பட்ட யாழ். குடா நாட்டு மக்கள் பலர் தீவுப் பகுதியில் தரித்து நின்று திண்டாட்டம்.

* இனியாவது உண்மை, நியாயத்தை உணர்ந்து இந்தியா நடந்து கொள்ளும் எனத் தாம் நம்புவதாக பிரதமர் பிரேமதாஸ தெரிவிப்பு.

* இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் மத்தியஸ்தம் இல்லாமல் தீர்வு காணவே முடியாதுஎன நீதியமைச்சர் றொனி டிமெல் தெரிவிப்பு.

18.06.1987

* இந்தியா அனுப்பும் நிவாரண உதவிகளை ஏற்றுக்கொள்ளும் முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுமாறு சிங்கள அமைப்புக்கள் சமேளனம் இலங்கை அரசிடம் கோரிக்கை.

* இந்தியா தலையீடு செய்யக்கூடிய மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாதெனவடபகுதிக்கடலில் ரோந்துபுரியும் இலங்கைக் கடற்படையினருக்கு இலங்கை அரசு உத்தரவு.

* ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் ''காணாமல் போனவர்கள்' என அறிவிக்கப்பட்டவர்கள் குறித்து கொழும்பு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு இலங்கை அரசு, சர்வதேச மன்னிப்புச் சபைக்கு ஆலோசனை.

19.06.1987

* ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கான ஒரு ஒப்பந்தம் இன்று அவசியமாகும் என புதுடில்லியில் நடந்த சார்க் அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் வெளிநாட்டு அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீட் வலியுறுத்தல்.

* யாழ்ப்பாணத்தில் விமானமூலம் உணவுப் பொட்டலங்களைப் போட்ட இந்தியாவின் செயல் குறித்து 'சார்க்' வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பூட்டான், நேபாளம், பங்களாதேஷ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஒரு வார்த்தை தானும் பேசவில்லை.

20.06.1987

* இந்திய மத்தியஸ்தத்தை இலங்கை அரசு இப்போதும் ஏற்கத்தயார். யாழ். மக்களுக்கு உணவுப் பொதிபோட்ட சம்பவம் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளைப் பாதிக்கவில்லை என வெளிநாட்டமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீட் புதுடில்லியில் தெரிவிப்பு.

* இலங்கை அரசின் பொறுப்பற்ற போக்குக் காரணமாகவே இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்துள்ளதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி விமர்சிப்பு.

21.06.1987

* இரண்டு வாரகால இடைவெளியின் பின் யாழ். நகரில் விமானக்குண்டுவீச்சு மீண்டும் ஆரம்பம். ஒருவர் மரணம். வீடுகள், கட்டடங்கள் தரைமட்டம்.

* இந்திய நிவாரண உதவிகளை ஏற்றிக்கொண்டு முதலாவது கப்பல் சென்னைத் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்குப் புறப்படுவதாக இலங்கை வானொலி அறிவிப்பு.

22.06.1987

* இலங்கை அரசுக்கான அமெரிக்க உதவிகளை நிறுத்தக்கோரி அமெரிக்காவில் வாழும் இலங்கைத் தமிழர்கள் வெள்ளை மாளிகை முன் ஆர்ப்பாட்டம்.

* டிசெம்பர் 19 யோசனைகளில் இருந்து இலங்கை அரசு பின்வாங்கிவிட்டதா? என்பதை பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து பரீட்சிக்க வேண்டும் என காணி அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவிப்பு.

* தமிழர் பிரச்சினை தற்போது பிராந்தியத்துக்கே உரியபிரச்சினை ஆகிவிட்டபடியால் அதில் தலையிட இந்தியாவுக்கு உரிமை உண்டு என ஈரோஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத்தலைவர் தெரிவிப்பு.

23.06.1987

* இலங்கைக்குள் இந்தியா இன்னொரு அத்துமீறல் நடத்தினால் அதனை எம்மால் முடிந்த வரையில் திறமையாகத் தடுத்து நிறுத்துவோம் என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி தெரிவிப்பு.

* இலங்கை விவகாரம் பற்றிய பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா- உல்-ஹக்கின் ஆலோசனையை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி நிராகரிப்பு.

* அரச படைகளின் மனித உரிமை மீறல்களை அரசு நியாயப்படுத்தமுடியாது. தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதை-காணாமல் போகச் செய்யப்படுவதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுக்கு அவசர வேண்டுகோள்.

24.06.1987

* இந்தியா யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கும் நிவாரணப் பொருள்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு முடியும் வரை விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் அறிவிப்பு.

* சென்னைத் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறைக்கு நிவாரண உதவிப்பொருள்களை எடுத்துச் செல்லும் மூன்று கப்பல்களில் பொருள்கள் ஏற்றப்படுவதை சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதுவர் நேரில் பார்வையிட்டு திருப்தி தெரிவிப்பு.

* இந்திய உணவுப்பொருள்கள் யாழ். மக்களுக்கு விநியோகிக்கப்படுவதற்காக இலங்கை அரசும் இராணுவத் தாக்குதலை நிறுத்தி வைக்கும் எனத் தாம் நம்புவதாக தமிழ்நாடு உணவு அமைச்சர் தெரிவிப்பு.

25.06.1987

* சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ இரகசியப் பொலிஸாரினால் ஒன்றரை மணி நேரம் விசாரிக்கப்பட்டார்.

* இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக லண்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒழுங்கு செய்யும் விவாதமொன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரமும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலியும் பங்கேற்பு.

* நாட்டைப் பிரிப்பதற்கு ஜனாதிபதி ஜே.ஆரும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டிருப்பதாக ஜே.வி.பி. குற்றச்சாட்டு.

26.06.1987

* நிவாரணப் பொருள்களை ஏற்றி வந்த கப்பல்களில் வந்த இந்திய உயர் அதிகாரிகளுக்கும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் திரண்டு வரவேற்பு.

* விமானம் மூலம் இந்தியா உணவுப் பொதிகளை யாழ்ப்பாணத்தில் போடக்கூடிய நிலையை உருவாக்கியத்தற்கான பொறுப்பை இலங்கை அரசே ஏற்ற வேண்டும் என சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

27.06.1987

* தமிழீழ விடுதலை இயக்கங்களை தமிழ் மக்களின் சமூகப் பாதுக்காப்பு படைகளாக இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என ஈழவர் முன்னணி கோரிக்கை.

* ஈழத்தமிழர்கள் இலங்கை அரச படைகளால் படு கொலை செய்யப்படுவதைக் கண்டித்து மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்.

* தமிழ் அகதிகளின் நிலை விரைவில் மாறும் எனவும் இந்தியா அதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளும் எனவும் இந்தியத் தூதரக முதலாவது செயலாளர் பூரி யாழ்ப்பாணத்தில் வைத்துக் கருத்துத் தெரிவிப்பு.

28.06.1987

* இந்திய அரசின்நிவாரணஉணவுப்பொருள்கள் யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்கு விநியோகம்.

* தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிவரும் இந்தியக் கப்பல்கள் காங்கேசன் துறைமுகத்தில் தரித்துநிற்பது வட பகுதியில்உள்ள இலங்கை ஆயுதப்படையினருக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதாகஇலங்கை ஆயுதப்படை உயர்அதிகாரிகள் அதிருப்தி தெரிவிப்பு.

* எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தியாவுக்கு எரிச்சல் ஊட்டும் நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

29.06.1987

* சந்தர்ப்பம் ஏற்பட்டால் இந்தியாவின் உதவிக்குப் பிரதி உபகாரமாக தமிழ் நாட்டில் பட்டினியால் வாடும் மக்களுக்கு நிவாரணமாக நாம் உணவுப்பொருள்கள் வழங்குவோம் என வெளியுறவு அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீட் தெரிவிப்பு.

* அடுத்த மாதக் கடைசியில் இந்து சமுத்திரத்தில் அமெரிக்க யுத்தக்கப்பல்கள் நிலை கொள்ளுமென அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவிப்பு.

* கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் இந்திய அரசு நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் இந்திய செஞ்சிலுவைச்சங்கத்திடம் கோரிக்கை.

30.06.1987

* பாதுகாப்புச் சுதந்திரமும் தமக்கு இல்லாததால் தம்மைக் கப்பலில் இந்தியாவுக்கு கூட்டிச் செல்லுமாறு வடமராட்சிக்கு நிவாரண உணவுப் பொருள்களை விநியோகிக்கச் சென்ற இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் வடமராட்சிப் பொதுமக்கள் வேண்டுகோள்.

* இலங்கை இன[illegible] மாற்று நடவடிக்கை[illegible] தீர்மானித்துள்ளதாக இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவிப்பு.

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.

## தர்சினி கருணாநிதி

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

புள்ளிகள்- 148



எனது அப்பாவும் அம்மாவும் ஆசிரியர்கள், நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நோக்கிலேயே படித்து வந்தேன். எனது அக்காவும் அண்ணாவும் முன்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார்கள்.

அப்பா, அம்மா, அக்கா, அண்ணா எல்லோரும் மிகவும் ஒத்துழைப்பாக இருந்தார்கள். அத்துடன் எனது வகுப்பாசிரியர் திருமதி ஜெ.முருகதாசன் அவர்கள் மிகவும் கரிசனையுடன் எமக்கு வகுப்பிலும், பின்னர் பாடசாலை முடிந்தவுடன் மாலை வகுப்பும் எடுத்துக் கற்பித்தார். அத்துடன் எமது அதிபர் சீ.சண்முகநாதன் மிகவும் ஊக்கமளித்தார். தனியார் கல்விநிறுவன ஆசிரியர்கள், எமது பாடசாலையின் ஏனைய ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். நான் எதிர்காலத்தில் மிகவும் சிறந்த கல்வி நிலையை அடைந்து பொறியியலாளராக வர எல்லாம்வல்ல புற்றளை சித்திவிநாயகர் அருள் கிடைக்க வேண்டுகிறேன்.

## ஜெயசீலன் துவாரகா

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

புள்ளிகள்- 147



எனது அப்பா வெதுப்பகத்தில் பணி புரிகின்றார். அம்மா வீட்டுப் பணி செய்பவர். அப்பாவின் சிறு வருமானத்தைக் கொண்டு எனது குடும்பம் வாழ்கின்றது. எனது பெற்றோரின் அரவணைப்பும் அதிபரின் அயராத உழைப்பும் ஆசிரியர்களின் அக்கறையும் வழிகாட்டலும் நான் சித்தியடைவதற்கு வழிவகுத்தன. மேலும் எனது வெற்றிக்கு உதவிய காரணிகள் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் ஆகும்.

நான் தினமும் வகுப்பில் தரும் பயிற்சிகளை அன்றே கற்று சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வேன். எனது கல்விக்குத் துணையாக இருந்த அதிபருக்கும், வகுப்பாசிரியருக்கும் தரம் 1-4 வரை கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பாடசாலை மட்டத்தில் ஏழாம் இடத்தைப் பெற்றுள்ளேன். இதே எனக்கு மனமகிழ்ச்சியைக் கொடுத்தது. நான் முயற்சி திருவினையாக்கும் என்பதற்கிணங்க இனிவரும் பரீட்சைகளிலும் வெற்றி பெற்று வாழ்வில் முன்னேறுவேன் . எனது எதிர்கால இலட்சியம் ஆசிரியராக வரவேண்டும் என்பதாகும்.

## தவநிலவின்தாசன் துளசிராம்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

புள்ளிகள்- 146



நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய உறுதியுடன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கற்று 146 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றுள்ளேன். எனது அப்பா, அம்மா, சகோதரர்கள் அத்துடன் கூடவே எனது வகுப்பாசிரியர், அதிபர் மற்றும் சக ஆசிரியர்கள் உறுதுணையாக இருந்தனர்.

பாடசாலைச் சமூகத்தினரும் எனக்கு ஊக்கமளித்தனர். எனவே அனைவருக்கும் இந்நேரத்தில் நன்றி கூற விரும்புகிறேன். அவர்களுடன் கூடவே எனக்குத் துணையாக இருந்த இறைவனுக்கும் நன்றி கூறுகிறேன். அத்துடன் எனது இளைய சமூகத்தினரும் இப்பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்பதே எனது விருப்பம்.

## டினேசிகா

வவுனியா நலன்புரி நிலையம் (சுமதிபுரம்)

பெற்ற புள்ளிகள் -111



எனது அப்பா வவுனியாவில் உள்ளார். அம்மா வீட்டுப்பணி செய்பவர். எனக்கு இரண்டு சகோதரர்கள் உள்ளனர்.நான் இளையவள். காலை 5 மணி தொடக்கம் 6.30 மணி வரை படிப்பேன்.

நான் கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுத் தற்பேது இடம்பெயர்ந்து வட. இந்து மகளிர் கல்லூரியில் படித்து வருகின்றேன்.

என்னை எப்படியாவது படிப்பித்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பது எனது பெற்றோர் ஆசை.

நான் அவர்களின் ஆசையை நிறைவேற்றுவதாக திடசங்கற்பம் கொண்டுள்ளேன். எங்களது முகாமில் படிப்பதற்குக் கஷ்டமாக இருந்தது.

எனது அண்ணன்மார்களும் படித்து வருகின்றனர். அவர்களும் எனது வீட்டில் எனக்குப் பாடம் சொல்லித்தருவார்கள்.பாடசாலைப் போட்டிகள்,கலை நிகழ்வுகள் போன்றவற்றில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றுள்ளேன். பாடசாலைமட்டப் பரீட்சைகளில் மூன்றாம் பிள்ளையாக வருவேன். நான் பரீட்சை எழுதும்போது மண்டபத்தில் மழை ஒழுக்குகள் மத்தியில் மிகவும் சிரமப்பட்டேன். நன்றாகப் படித்து ஆசிரியராக வரவேண்டும் என்பது எனது அவா.

எனது கல்விக்கு உழைத்த பெற்றோருக்கும், எனது ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சந்திப்பு : மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டுகள் ஆறில் ஆறாத் துயரில்...

ஆசையாய் அவனியில்
30 ★ 10 ★ 1975



அவலமாய் அக்கினியில்
17 ★ 01 ★ 2004

*திதி: ஏகாதசி (26.01.2010)*

### சின்னத்துரை ரஜனன்


**அவசரமாய் அனலில் அகப்பட்டு**
**ஆண்டுகள் ஆறில் - ஆறாத் துயரில்**
**இன்றும் உன் நினைவில் தவிக்கும்**
**ஈன்ற நெஞ்சங்களும்**
**உன் உடன் பிறப்புக்களும்**
**ஆறாய் பெருகும் விழிகளுடன்**
**ஆறாத்துயரில் தவிக்கும்.....**

பெற்றோர்:
திரு.திருமதி லோகேஸ்வரி சின்னத்துரை (கனடா),
சகோதரர்கள்:
ரமணன் குடும்பம் (கனடா), ரமணி குடும்பம் (பிரான்ஸ்),
ரஜனி குடும்பம் (கனடா).

"லோகஸ்தான்",
பிரதான வீதி,
சுன்னாகம்.
(94683)

---

## நீங்கா நினைவுடன் 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
05.06.1956

இறப்பு:
26.01.1985

### அமரர் இராசதுரை ராசகுமார்

விதி செய்த சதியோ அத்தான்!
விழி எல்லாம் நீரே அத்தான்!
சதி பதியாய் வாழ அத்தான்
கதி இல்லாமல் போனோம் அத்தான்
எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வமே!
கார் வடிவில் காலன் வந்து
கால் நூற்றாண்டு ஆகியதோ?
பதுளை நகரில் கால் வைத்திர்
பாப்புவின் ஆசி பெற்றிர்
இக்காலியில் இறைபதம் அடைந்திர்
யாழ் மண்ணில் கல்லறை ஆனீர்
காத்திருக்கின்றேன் கல்லறையில் ஒன்றுசேர.

பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உனை மறவாமை வேண்டும்

உமது பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி மேரியம்மா
மகள்-மருமகன், பேரன்

21/3, மத்திய கிழக்கு வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2223514, 0213219921

---



## அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு:
20.05.2001

உதிர்வு:
25.12.2009

செல்வன்

### தர்மகுலசிங்கம் சுஜிந்தன்

கடந்த 25.12.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது செல்வன் தர்மகுலசிங்கம் சுஜிந்தனின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து சுன்னாகம் சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தர்மகுலசிங்கம் (அப்பா)
[illegible]
திருநெல்வேலி.

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். (சி/584289)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு நாட்டின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையோ அல்லது பாதுகாப்புச் சபையோ இன்றுவரை சிறிலங்காவில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் தொடர்பில் அந்நாட்டின் மீது எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பது மிக கவலைக்குரிய விடயம் என தமிழர் மனித உரிமை மையத்தின் பொதுச் செயலாளர் ச. வி. கிருபாகரன் தெரிவித்துள்ளார்.**

**சிறீலங்காவில் தமிழ் மக்கள் தற்போது சந்தித்துள்ள அரசியல் மற்றும் மனிதாபிமான பிரச்சினைகள், அவை தொடர்பில் அனைத்துலக மட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவை குறித்து 'ஈழம் நியூஸ்' இற்கு தமிழர் மனித உரிமை மையத்தின் பொதுச் செயலாளர் ச. வி. கிருபாகரன் வழங்கிய நேர்காணல் இது.**

# இலங்கை தொடர்பில் ஐ.நா. நடவடிக்கை எடுக்காமல் பின்னடிப்பது ஏன்....?

கேள்வி : சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பான வலுவான நடவடிக்கைகளை அனைத்துலக சமூகம் மேற்கொள்ளத் தொடங்கியிருப்பது போன்று

மக்களுக்கு எதிராக சிறிலங்காவின் அரச படைகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை, சர்வதேச ரீதியாக - குறிப்பாக ஐ. நா.வின் மனித உரிமை பிரிவு உட்பட பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் - நீண்ட காலமாக அவதானித்து வந்தன.

உரிமை பிரிவுகளுக்கும் விநியோகித்து வந்துள்ளோம்.

நாம் தமிழ் மக்களுக்காக வேலை செய்யும் அமைப்பாக இருந்த போதிலும், எமது இருபது வருட காலத் தொடர்புகளும் செயற் திட்டங்களும் சர்வதேச ரீதியானவை. ஐ. நா. அதிகாரிகளிலிருந்து, நாட்டின் தலைவர்கள், உலகின் முக்கிய பிரதிநிதிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள், சர்வதேச சட்டத் தரணிகள், சர்வதேச ஊடகவியாலாளர்கள் என எமது உறவுகள் பரந்தவை. எமது செயற்பாடுகள் குறித்து மேலும் விவரமாக கூறுவது மிகவும் ஆபத்தான விடயம். காரணம் சிறிலங்கா அரசும் அதன் கையாட்களும் மட்டுமல்லாது, நம்மவர் சிலரும் எமது அமைப்பு மீதும், அதன் பிரநிதிகள் மீதும்

உண்மையான, நேர்மையான தகவல் இருப்பின், அவற்றை இவ் அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளலாம். மூன்றவதாக பணம் படைத்த அமைப்புக்கள், சர்வதேச அமைப்புகளுக்கு நன்கொடைகளை கொடுத்து அவர்களது வேலைத் திட்டங்களை ஊக்குவிக்கலாம்.

### தொடர்ந்தும் அதீத மௌனம் ஐ.நா.காப்பது எதற்காக?

கே: சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனப்படுகொலைகளுக்கான ஆதாரங்கள் பல உள்ளன. அண்மையில் பேராசிரியர் பிலிப் அல்ஸ்ரனும் காணொளி ஆவணத்தை உறுதிப்படுத்தியிருந்தார். இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து மௌனம் காத்து வருவது ஏன்?

ப: ஒரு நாட்டுடைய மனித உரிமை மீறல்களை அல்லது நிலைமையை, அந்த நாட்டுடைய அரசியல், பொருளாதார கொள்கைகளை பொறுத்தே ஐ. நா. அங்கத்துவ நாடுகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கின்றன என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். 'சபை வைப்பவர் நம்மாளாயிருந்தால், நடுச் சபையிலிருந்தால் என்ன, நுனிச் சபையிலிருந்தலென்ன?' என்பது தமிழ் பழமொழி. அதுபோல் ஐ. நாவில் நடவடிக்கை எடுக்குமாறு தூண்டும் நாடுகள்,, எமது நண்பர்களாயிருக்கும் பொழுது, நாம் மனித உரிமையை மீறினாலென்ன, மிக மோசமாக மீறினாலென்ன ஒரு பிரச்சினையும் இல்லை என்பது சிறிலங்காவின் கருத்து.

கே: ஐ. நா செயலாளர் நாயகம்



நவநீதம்பிள்ளை

விசேடமாக கடந்த இரு ஆண்டுகளாக தமிழ் மக்களுடைய மனித உரிமைகள் மிகமோசமாக மீறப்பட்ட காரணத்தினால், ஏற்கனவே அக்கறை காட்டிய அமைப்புக்கள் மீண்டும் பெரியளவில் குரல் கொடுத்ததுடன், சில மேற்கு நாடுகளும் குரல் கொடுத்தன.

ஆனால் ஒரு நாட்டின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையோ அல்லது பாதுகாப்புச் சபையோ இன்றுவரை சிறிலங்கா மீது எந்தவித நடவடிக்கையையும்

கொண்ட எரிச்சல் பொறாமையினால் பல தீய செயல்களை எமக்கு எதிராகச் செய்யுமாறு அவர்கள் பலரைத் தூண்டிவருகின்றனர். நாம் நிலவைக் கண்டு பரதேசம் செல்பவர்களோ, அல்லது அனாதைகளோ அல்லர். இத்துடன் இவ் வினாவுக்கான பதிலை நிறுத்தி கொள்கிறேன்.

கே : தொடர்ந்து சிறீலங்கா அரசின் இனப்படுகொலைகளை அம்பலப்படுத்தி வரும் 'சனல் 4', 'இன்னர் சிற்றி பிரஸ்' என்பவற்றுடன் நீங்கள் தொடர்புகளைப் பேணுகிறீர்களா? இது குறித்து அக்கறைப்படும் வேறு அமைப்புக்கள் குறித்துக் கூற


பிலிப் அல்ஸ்ரன்

மேற்கொள்ளவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயம். காரணம், சிறிலங்காவினுடைய அரசியல், பொருளாதார கொள்கைகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவத்தை கொண்ட சீனா, ராஷ்யாவுடன் பின்னிப் பிணைந்துள்ளது. ஏன், சில வருடங்களுக்கு முன் பிரித்தானியா, அமெரிக்கா கூட சிறிலங்காவுடன் மிக நெருக்கமான உறவை கொண்டிருந்தன.

அடுத்து ஐ. நா பொதுச் சபையில் மிக செல்வாக்கை கொண்டுள்ள சீனா,

முடியுமா? அவற்றுடன் எமது தமிழ் அமைப்புக்கள் எவ்வாறு தொடர்பு கொள்வது அல்லது எப்படி இணைந்து பணியாற்றுவது என்பது குறித்து விளக்கமாகக் கூறமுடியுமா?

ப: மிக நல்ல கேள்வி, இதற்கு பதில் கூறினால் எம் மீது பல பழிகள் சுமத்தப்படும். சர்வதேச ரீதியாக மனித உரிமை விடயத்தில் மிக நீண்ட காலமாக வேலை செய்யும் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்பகம் போன்ற பல அமைப்புகளுடன் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் வேலை செய்ய முடியும்.

பான் கீ மூனின் செயற்பாடுகள் சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றன. இது குறித்து உங்கள் கருத்து என்ன?

ப: ஐ.நா.வில் உள்ள பிரிவுகளின் செயற்பாடுகளை நாம் இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று - அரசியல் மயப்படுத்தப்பட்ட செயற்பாடு, மற்றையது - அரசியல் கலப்பற்ற செயற்பாடு. இந்தவகையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பதவியும் செயற்பாடுகளும் அரசியல் கலப்புக்கொண்டவை. செயலாளர் நாயகம் ஐ. நாவின் அங்கத்துவ நாடுகளின் நட்புறவைப் பேண வேண்டிய முக்கிய கடமையைக் கொண்டுள்ளார். இதன்


பான் - கீ - மூன்

அவற்றின் அண்மைய நடவடிக்கைகள் காணப்படுகின்றன. மனித உரிமையாளராக இவற்றின் சாத்தியப்பாடுகள் குறித்து விளக்க முடியுமா?

### நாடுகள் கடைப்பிடிக்கும் கொள்கைகளை பொறுத்தே அவை மீதான நடவடிக்கை

பதில்: ஒரு நாட்டின் மனித உரிமை மீறல்கள் அல்லது நிலைமை, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பது என்பது அந்த நாட்டின் அரசியல், பொருளாதார கொள்கைகளிலேயே தங்கியுள்ளது. இந்த அடிப்படையில், தமிழ்

ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், கியூபா, வெனிசூலா உட்பட பல தென் அமெரிக்க, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளுடன் சிறிலங்கா நெருங்கிய அரசியல், பொருளாதார உறவை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் சிறிலங்கா மீது ஓர் சர்வதேச அழுத்தத்தை கொண்டுவருவது என்பது அவ்வளவு சுலபமான விடயம் அல்ல.

கே: மேற்படி நடவடிக்கைகளில் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் செயற்பாடுகள் குறித்து கூற முடியுமா?

ப: தமிழர் மனித உரிமைகள் மையம் கடந்த இருபது ஆண்டுகளாக மனித உரிமை விடயத்தில் வேலை செய்து வந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதன் அடிப்படையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய பட்டியல்கள், அறிக்கைகளை தயாரித்து முக்கிய பிரமுகர்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித



முதலாவதாக, அவற்றுடன் அங்கத்தவர்களாக இணைந்து தொண்டர்களாக சேவை செய்யலாம். இரண்டாவதாக, ஒரு குறிப்பிட்ட மனித உரிமை மீறல் சம்பவம் பற்றிய

அடிப்படையில் செயலாளர் நாயகம் அங்கத்துவ நாடுகளின் சில நடவடிக்கைகளைக் கண்டும் காணதவர் போல் நடிப்பது

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத்துறை முத்துமாரி அம்மன் ஆலய வீதி மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம்,ஜன.26

கொழும்புத்துறை கிழக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதி மக்கள் பாவனைக்கு மீளத் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக மூடப்பட்டுக் கிடந்த இந்த வீதிக்குப் பதிலாக மாற்று வீதி ஒன்றைப் பயன்படுத்தியே மக்கள் இது வரை ஆலயத்திற்குச் சென்று வந்தனர்.

துறைமுகச் சந்தியில் இருந்து மணியம் தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதி திறந்து விடப்பட்டதை அடுத்து மேற்படி ஆலய வீதியும் மக்கள் பாவனைக்குத் திறக்கப்பட்டுள்ளது. (50-224)

## உள்ளூர் உருளைக்கிழங்கின் அறுவடை ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.குடாநாட்டில் பயிரிடப்பட்ட உள்ளூர் உருளைக்கிழங்கின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பமாகியதை அடுத்து அவை சந்தைகளில் விற்பனைக்கு வந்துள்ளது.

சில விவசாயிகள் இந்த உருளைக்கிழங்கைக் காலம் முந்தியே அறுவடை செய்து சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த உருளைக்கிழங்கு முற்றாக விளைய முன்னர் அறுவடை செய்யப்படுவதால் அதன் பருமன் குறைந்து காணப்படுகின்றது.

திருநெல்வேலிச் சந்தையில் நுவரெலியா உருளைக்கிழங்கு ஒரு கிலோ 60 ரூபாவாகவும், உள்ளூர்க் கிழங்கு ஒரு கிலோ 50 ரூபாவாகவும் விற்கப்பட்டு வருகின்றன. (50-224)

## வரணி ம.விக்கு நூலக வசதி

சாவகச்சேரி,ஜன.26

வரணி மகா வித்தியாலயத்தில் நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நான்கு மாத காலத்துக்குள் நூலகத்தை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

முதற்கட்டமாக 1000 புத்தகங்கள் அந்த நூலகத்திற்கு வழங்கப்படவுள்ளன. முதலில் சிறுவர்களுக்கான அறிவுசார் புத்தகங்கள் மற்றும் வாசிப்புக்கான புத்தகங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-ரி-131)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 01 ★ 08 ★ 1922 | 05 ★ 02 ★ 2009 |

**பொன்னையா பாக்கியலட்சுமி**

(ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்)

திதி: 26.01.2010

அன்பால் அரவணைத்து அறிவூட்டி எமது வாழ்விற்கு உரமாகி நின்ற அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

(94690)

3 ஆம் கட்டை, கல்வியங்காடு. குடும்பத்தினர்.

## இலங்கை தொடர்பில்.......

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் இராஜதந்திரம். ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் மற்றும் பேராசிரியர் பிலிப் அல்ஸ்ரன் போன்றோரின் செயற்பாடுகள் அரசியல் கலப்பற்றவை. இதன் அடிப்படையில், மனித உரிமை விடயத்தில், ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் (தற்சமயத்தில்) திருமதி நவநீதம்பிள்ளை அவர்கள் கூறும் விடயத்திற்கே முன்னுரிமை உண்டு.

அவர் சிறிலங்காவின் மனித உரிமை விடயத்தில் மிகக் கடுமையாக உள்ளார். அவரைப் பலமுறை சந்தித்து உரையாடியுள்ளேன். அவரின் அணுகுமுறையும் இராஜதந்திரமும் போற்றப்பட வேண்டியவை. முன்பு இப்பதவிகளை வகித்த திருமதி மேரி றோபின்சனும், திருமதி லூயிஸ் ஆபரும் தமது பதவிக் காலங்கள் முடியும் முன்னரே பதவியிலிருந்து விலகிக்கொண்டவர்கள். ஏன் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்களென நம்புகிறேன்.

**கே:** ஐ.நா வின் மௌனத்தைக் கலைப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

**ப:** சீனா, ராஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், கியூபா, வெனிசூலா உட்பட பல செல்வாக்குள்ள தென் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய நாடுகளின் ஆதரவை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### புலம்பெயர் தமிழ் மக்கள் செய்யவேண்டியவை யாது?

**கே:** சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பான வலுவான நடவடிக்கைகளை அனைத்துலக சமூகம் மேற்கொள்ளும் போதுதான் தமிழினம் தான் சந்தித்த இனஅழிப்பு நடவடிக்கைகளை வெளியுலகிற்கு நிரூபிக்க முடியும். இது தொடர்பில் புலம்பெயர் தமிழ் மக்களின் நடவடிக்கைகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

**ப:** முதலில் ஒவ்வொருவரும் தாம் வாழும் நாடுகளின் சட்ட திட்டங்களை மதித்து, செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். அடுத்து, அமைப்புக்களிடையே ஒருங்கிணைக்கப்பட்ட செயற்திட்டம் தேவை. இச்செயற்திட்டங்களை விடயம் விளங்கியவர்கள், மொழித்திறன் கொண்டவர்கள், இராஜதந்திரம் தெரிந்தவர்கள் கையாள வேண்டும். இவை இரண்டும் தற்பொழுது பெரும்பான்மையான தமிழ் அமைப்புகளிடையே இல்லை. அடுத்து விழிப்பு போராட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தும் அமைப்புக்கள் அதனால் ஏற்படும் பலன்களை முன்கூட்டியே மக்களுக்கு எடுத்து கூற வேண்டும். அதனை செய்யத் தவறும் அமைப்புக்கள், தமது சுயநலத்திற்காக மக்களை குளிர், பனி, மழை போன்றவற்றில் அலைக்கழிக்கப்பது ஆக்கபூர்வமான விடயம் அல்ல. மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் முன்பு கூறியது போல, தமிழ் சங்கம், சங்கம் தமிழ் என்ற வகையில் பெயர்கள் சூட்டப்பட்டு நாளுக்கு நாள் தமிழ் அமைப்புக்கள் சர்வதேச ரீதியாக அதிகரிக்கின்றனவே தவிர, அங்கு உருப்படியான செயற் திட்டம் ஒன்றும் நடைபெறுவது இல்லை.

பொதுவுடமையின் தத்துவஞானியும், சமூக விஞ்ஞானியுமான பிறைட்றிச் ஏன்ஞல்ஸ் அவர்கள், ஒரு அவுன்ஸ் செயற்பாடு, பல தொன் தத்துவங்களை விட மேலானது என ஒரு தடவை கூறியிருந்தார். இதைத் தமிழ் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் அறிந்திருக்க வேண்டும். போலியான வேலைகளை செய்பவர்கள் தாமும் ஏதோ வேலைத் திட்டம் செய்கிறோம் என மக்களை ஏமாற்றக்கூடாது.

**கே:** அயர்லாந்தின் தலைநகரான டப்பிளின் நகரில் நடைபெற்றது போன்ற சிறீலங்கா அரசு மீதான போர்க்குற்ற விசாரணைகளை தமிழ் மக்கள் எவ்வாறு செயற்திறன் மிக்கனவாக மாற்றமுடியுமா? அது தொடர்பில் அனைத்துலகிலும் பரந்து வாழும் தமிழ் அமைப்புக்களின் பங்களிப்புக்களின் அவசியத்தை சற்று விளக்க முடியுமா?

**ப:** என்னை பொறுத்த வரையில், சிறீலங்கா அரசு மீதான போர்க்குற்ற விசாரணைகள் எதுவாக இருந்தாலும் எந்தத் தமிழரும் அதில் முன்னிற்பது நிச்சயம் பாதிப்பையே ஏற்படுத்தும். காரணத்தை நான் விளக்க வேண்டிய அவசியமில்லையென நம்புகிறேன்.

டப்பிளின் நகரில் நடைபெற்ற போர்க்குற்ற விசாரணை போன்று வேறு எங்கு நடைபெற்றாலும், எம்மிடம் அதற்கு ஏற்ற உண்மையான, நேர்மை யான சாட்சியங்களிருப்பின் அவற்றை உரியவர்களிடம் கையளிப்பதே எமது கடமை. அதற்கு மேல் அதில் பங்களிக்க நாம் விரும்பினால், அந்த சர்வதேச விசாரணைகளுக்கு தேவையற்ற பெயர்களை சிறிலங்கா அரசு மிகவும் சுலபமாக சூட்டிவிடும். எம்மால் முடியுமானால், இவ் விசாரணைகள் பற்றிய செயற் திட்டங்களை, சர்வதேச ஊடகங்கள் வெளியிட திரைமறைவில் உதவலாம்.

கடந்த வாரம் டப்பிளின் நகரில் நடைபெற்ற போர்க்குற்ற விசாரணை தொடர்பான செய்திகளை, சர்வதேச ஊடகங்கள் வெளியிடாதவாறு, சிறிலங்கா அரசின் தூதரகங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

★

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 26 ★ 04 ★ 1926 | 28 ★ 12 ★ 2009 |

**திருமதி சீவரட்சகம் பாலசுப்பிரமணியம்**

(வல்வெட்டித்துறை)

கடந்த 28.12.2009 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி சீவரட்சகம் பாலசுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.01.2010) புதன்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், உத்தியோகத்தர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் மரணச் செய்தியறிந்து எமது துயரில் நேரில் பங்குகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, தபால்மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நடராசா வீதி,
வல்வெட்டித்துறை. (94693) குடும்பத்தினர்.

## கோப்பாய் மருத்துவமனையில் நாய்கள் தொல்லை

கோப்பாய்,ஜன.26

கோப்பாய் பிரதேச மருத்துவமனை வளாகத்திற்குள் சுற்றித் திரியும் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் எல்லை மீறிப் போவதால் மருத்துவமனை ஊழியர் களும் சிகிச்சைபெறவரும் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவ தாகத் தெரியவந்துள்ளது.

## கொழும்புத்துறை மீன் சந்தை புதிய இடத்தில்

கோப்பாய்,ஜன.26

கொழும்புத்துறை மீன் சந்தை தற்போது துறைமுகச் சந்தியில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இந்த மீன் சந்தை முன்னர் நெடுங்குளம் வீதியில் இயங்கி வந்ததும் குறிப்பிடத் தக்கது. (50-224)

## யாழ்.மத்திய கல்லூரி கட்டடத்துக்கு மறைந்த அதிபரின் பெயர்

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்.மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்துக்கு மறைந்த அதிபர் அமரர் க.இராசதுரையின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டிருந்த இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கான மேற்படி கட்டடத்திற்குப் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மறைந்த அதிபரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. (50-ரி-16)

## இழுவைப் படகுகளால் வலைகள் சேதம்

நல்லூர்,ஜன.26

குருநகர் மற்றும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் தமது மீன்பிடி வலைகளுக்குப் பெரும் சேதம் ஏற்படுவதாக மண்டைதீவுப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (50-ரி-111)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
சித்தாரா பொன்னாங்காணி தைலம்
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்
Manufactured By:
Sithara Products
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567

## மரண அறிவித்தல்

**மார்க்கண்டு அழகேஸ்வரன் (செட்டி)**



அரியாலை, மலர்மகள் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு அழகேஸ்வரன் 24.01.2010 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-யோகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், பவானியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், லுசித்தா (ஜேர்மனி), அனியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, கனகம்மா, மற்றும் லீலாவதி, சரஸ்வதி (நோர்வே), இரத்தினாவதி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, கேதீஸ்வரன், லோகேஸ்வரன், மகேஸ்வரன் மற்றும் சந்திரேஸ்வரன் (ஜேர்மனி), இராஜேஸ்வரி, புஸ்பமாலா (ஜேர்மனி), ரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், நாகேந்திரம், செல்வராணி (ஜேர்மனி), அஜந்தா (புத்தளம்), அல்லிராணி (ஜேர்மனி), இராசையா, சந்திரபோஸ் (ஜேர்மனி), கல்பனா (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
இராசரத்தினம் குடும்பம், திருமதி. லீலாவதி குடும்பம்,
திருமதி. அன்ரா குடும்பம் (அரியாலை),
சந்திரேஸ்வரன் குடும்பம் (ஜேர்மனி).

மலர்மகள் வீதி,
அரியாலை.
0212227067 (94684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திக்கு 35 மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது

## வட மாகாண ஆளுநர் சந்திரசிறி தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜன.26

தென்மராட்சி கிழக்கில் உள்ள வரணி மகாவித்தியாலயத்தில் இசுறு பாடசாலைத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்தின் கல்வி மேம்படுத்தலுடன் கூடிய கட்டுமாணப் பணிகளை முன்னெடுத்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூபா முப்பத்தைந்து மில்லியன் செலவு செய்யப்படவுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி. நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வரணி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இசுறு பாடசாலை அபிவிருத்திக்கான கட்டடத்தின் அடிக்கல்லை நாட்டிவைத்து உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு மகாவித்தியாலய அதிபர் ந.நவரத்தினராஜா தலைமையில் மகாவித்தியாலயத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. ஆளுநர் தொடர்ந்து மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் இந்த பாடசாலையில் பல உட்கட்டுமாணப் பணியுடன் கூடிய அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் இப் பாடசாலையில் அரசாங்கம் பல அபிவிருத்தித் திட்டங்களைச் செய்யவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஐந்து பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இசுறு திட்டத்தின் கீழ் கட்டட உட்கட்டுமாணப் பணிகள் உட்பட ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவிருப்பதோடு மாணவர்களுக்கான மேலதிக தேவைகள், கணனி தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் நூலக தேவையும் வழங்கவுள்ளோம். இந்த நூலகத்தை அமைக்க ஹேவில்ல நிறுவனம் முன்வந்துள்ளது. இந்த நூல் நிலையம் நான்கு மாதங்களுக்குள் அமையவுள்ளது. இதன் செயற்பாடுகளுக்காக முதற்கட்டமாக 4000 புத்தகங்கள் வழங்க எண்ணியுள்ளேன். அதுமட்டுமல்லாமல் 10 நாள்களுக்குள் வழங்கப்படவிருக்கும் சிறுவர்களுக்கான வாசிப்புப் புத்தகங்கள், அறிவுசார் புத்தகங்களும் இதனுள் அடங்கும். ஜனாதிபதியின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அவர் இந்தப் பகுதி மாணவர்கள் நலனில் அக்கறையெடுத்துள்ளார். பல திட்டங்கள் இந்தப் பகுதியில் பூர்த்தி செய்யப்படவுள்ளது எனவும் தெரிவித்த ஆளுநர் அதிபர் உட்பட க.பொ.த சாதாரண தர உயர்தர மாணவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்த நிகழ்வில் வடக்குமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட அரச அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் , அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (50-ரி-131)

# சிறுபோக மரக்கறி விதைகள் திருநெல்வேலியில் உற்பத்தி

யாழ்ப்பாணம், ஜன.26

அடுத்த சிறுபோகத்துக்கான மரக்கறி விதைகள் தற்போது திருநெல்வேலி விவசாய உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மரக்கறிப் பயிர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அறுவடை செய்யப்பட்டு பின்னர் அந்த விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்று திருநெல்வேலி விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புடோல், கத்தரி, பூசனி,பாவல், வெண்டி, தக்காளி, போன்ற மரக்கறி விதைகளே தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மரக்கறி விதைகள் சிறுபோக விவசாய செய்கைக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

சிறுபோக மரக்கறிச் செய்கை எதிர்வரும் மே மாதத்தில் ஆரம்பமாகும். (50-224)

# இலத்திரனியல் ஊடகங்களில் தேர்தல் முடிவுகள் உடனுக்குடன் இம்முறை அறிவிக்கப்படமாட்டா

## தேர்தல் ஆணையர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதித் தேர்தல் இறுதி முடிவை சகல இலத்திரனியல் ஊடகங்களும் ஒரே நேரத்தில் இம்முறை வெளியிடக் கூடிய வகையில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு தேர்தல் ஆணையாளர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த காலங்களில் நடைபெற்ற சகல தேர்தல்களிலும் அதன் முடிவுகள் இலத்தி ரனியல் ஊடகங்கள் மூலமாக உடனுக்கு டன் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட் டன. ஆனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் இந்த நிலை மாற்றப்பட்டுள்ளது என்றும் தேர்தல் ஆணையாளர் கூறினார்.

ஒன்றை ஒன்று முந்திக்கொண்டு போட்டியாக முடிவுகளை அறிவிக்கும் அங்கீகாரம் இந்தமுறை எந்த ஊடகங்களுக்கும் வழங்கப்படமாட்டாது.

இறுதி முடிவு தேர்தல் செயலகத்தில் அறிவிக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல ஊடகங்களுக்கும் அனுமதி வழங்கப்படும். எனினும் சகல ஊடகங்களும் ஒரே நேரத்தில் முடிவுகளை அறிவிக்கவேண்டும் என்ற கடுமையாக கட்டுப்பாடு விதிக்கப்படும். இதற்கு கட்டுப்பட முடியாத ஊடகங்கள் தேர்தல் காரியாலயத்துக்கு வரவேண்டிய தேவை இருக்காது என்றும் அவர் கூறினார். (சி)

# மட்டக்களப்பு வாவியில் இளைஞனின் சடலம்

மட்டக்களப்பு,ஜன. 26

மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு வாவியில் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் வாலிபனின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட் இந்த சடலம் துர்நாற்றம் வீசிய நிலையில் வாவியின் ஆழமான பகுதியில் காணப்பட்டது எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கல்குடா கல்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய சிவஞானம் அரவிந்தராஜ் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார் எனவும் அவர் அணிந்திருந்த உடையில் மீட்கப்பட்ட தேசிய அடையாள அட்டை மூலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த வாலிபர் வாவி ஓரத்தில் வைத்து கழுத்து வெட்டி கொலைசெய்யப்பட்டு பின்னர், சடலம் வாவியில் வீசி எறியப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் நடைபெற்றுள்ள இச்சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இலங்கைத் தமிழர்கள் இருவருக்கு அமெரிக்காவில் சிறைத் தண்டனை

கொழும்பு, ஜன. 25

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்ய முயற்சித்தனர் எனக் கூறப்பட்டு கைது செய்யப்பட்ட இரண்டு கனேடியப் பிரஜைகளான இலங்கைத் தமிழர்களுக்கு அமெரிக்காவில் 26 மற்றும் 14 வருடச் சிறைத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

30 வயதான சதாஜன் சராசந்திரன் மற்றும் 55 வயதான நடராசா யோகராசா ஆகியோருக்கே இந்தத் தண்டனை கடந்த வெள்ளியன்று வழங்கப்பட்டுள்ளது.

2009 ஆண்டு ஜனவரியில் சராசந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளை கொள்வனவு செய்ய முயற்சித்தார் என்றும் அதே காலகட்டத்தில் நடராசா ஆயுத உதவிகளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு செய்து கொடுக்க முயற்சித்தார் என்றும் குற்றம் சுமத்தியே அமெரிக்க மாவட்ட நீதிவான் ரெமொன்ட் டேயரி தமது தீர்ப்பை அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விபத்துக்கள் அதிகம் இடம்பெறும் வீதிகள் இனங்காணப்பட்டனவாம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 26

திடீர் வீதி விபத்துகள் அதிகமாக இடம்பெறும் பல வீதிகள் சுகாதார அமைச்சினால் இனங் காணப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்டிப்படையில் கண்டி - கொழும்பு வீதி, பதுளையிலிருந்து இரத்தினபுரி ஊடான கொழும்பு வீதி, மாத்தறை - கொழும்புவீதி, நீர்கொழும்பு - கொழும்பு வீதி மற்றும் குருநாகல் - கொழும்பு வீதி ஆகிய வீதிகளே அதிக விபத்துகள் இடம்பெறும் வீதிகளாக இனங் காணப்பட்டுள்ளன.

அதேவேளை, நாடளாவிய ரீதியில் கண்டி - கொழும்பு வீதியிலேயே அதிகளவான வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையே இரண்டாவது, மூன்றாவதாக மாத்தறை - கொழும்பு மற்றும் குருநாகல் - கொழும்பு ஆகிய பாதைகளிலேயே அதிகளவு வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன எனச் சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துகள் வெகுவாக அதிகரித்து வருகின்றதோடு வருடத்தில் இரண்டாயிரம் பேர்வரை வீதி விபத்துகளால் உயிரிழக்கின்றனர் எனவும் கூறப்ப டுகின்றது.

இதேவேளை, வருடமொன்றுக்கு 80 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் வரையிலானோர் காயங்களுக்குள்ளாகின்றனர். இதில்2 தொடக்கம் 5 வீதமானோர் நிரந்தர அங்கவீனர்களாகவும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் காயமடையும் ஒவ்வொருவருக்கும் சராசரியாக ஒரு வருடத்திற்கு ஒரு லட்சம் ரூபா வரை அரசு செலவிடுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டுமே விபத்துச் சேவைப் பிரிவுகள் காணப்படுவதாகவும் ஏனைய வைத்தியசாலைகளுக்கும் விபத்துச் சேவைப் பிரிவுகள் விஸ்தரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க)

# தமிழ் மொழி அமுலாக்கத்திற்கு துரித நடவடிக்கை முன்னெடுப்பு

கொழும்பு, ஜன. 25

சகல அரச நிறுவனங்களிலும் தமிழ் மொழியை அமுலாக்குவதற்கு சாத்தியமான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு அரச கருமமொழிகளைச் செயற்படுத்துவதற்குள்ள குறைபாடுகளை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்யவும் ஆவன செய்யப்பட உள்ளது ஏன அரசியல் விவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் திருமதி எம்.எஸ்.விக்கிரமசிங்க தெரித்தார்.

சகல அரச நிறுவனங்களிலும் அரச கருமமொழிக் கொள்கைகளை நடை முறைப்படுத்தும் அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கான பொறுப்புகளும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

அரச கருமமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பொறுப்புக்களைக் கையளிப்பது தொடர்பாக சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும் மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள், மாகாண அரச சேவை ஆணைக் குழுச் செயலாளர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.





கைதடி முதியோர் இல்லத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதனை முதலாவது படத்திலும், முதியோர்களோடு கலந்துரையாடுவதையும் அருகில் கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் ந.இராஜலிங்கம் நிற்பதனையும் இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தயாளன்)

# அரியாலைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.26


அரியாலைப் பிரதேசத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சிரமதானம் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது குடாநாட்டில் வேகமாகப் பரவி மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் வகையில் இப்பிரதேசத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் சிரமதானம் மற்றும் டெங்கு நோய் சம்பந்தமான கருத்தரங்குகளை ஏற்பாடுசெய்து நடத்தி வருகின்றன.

அத்துடன் இப்பகுதியில் உள்ள வடிகால்கள், பொது இடங்கள் என்பனவும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (50-224)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் தைப்பொங்கல் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.
இந்த நிகழ்வில் இடம்பெற்ற முட்டி உடைத்தல், கயிறிழுத்தல் ஆகிய போட்டிகளில் வீரர்கள் ஈடுபட்டிருப்பதை முதல் இரு படங்களிலும் வேகநடைப் போட்டியில் முதலிடம் பெற்ற பெண்ணுக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பரிசில் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: தென்னவன்)*


**சுவசெத**
Suwasetha சுவசெத
லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் **352**
சீட்டிழுப்பு திகதி: **24.01.2010**

வெற்றி எழுத்து: **C** வெற்றி இலக்கங்கள்: **09 17 33 45** போனஸ் இலக்கம் **19**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 12,771,784.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 03 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 115 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 160 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 4575 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 3044 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 58610 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. **1,821,960.00**

அடுத்த சீட்டிழுப்பில் சுப்பர் பரிசு ரூ. **13,046,104.50**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புகளின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631 இணையத்தளம்:www nlb lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.


# வன்முறைகள் குறித்த முறைப்பாடுகளை கோருகின்றது மனித அபிவிருத்தி தாபனம்

கொழும்பு,ஜன. 26

பெருந்தோட்டப் பிரதேசங்களில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகள் குறித்து பொதுமக்கள், மனித அபிவிருத்தித் தாபனத்திற்கு தகவல்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் தாபனம் இது தொடர்பில் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான கண்காணிப்பு நடவடிக்கையில் மனித அபிவிருத்தி தாபனம் ஈடுபட்டுவருகின்றது. தேர்தல் கண்காணிப்பு சம்பந்தமாக தேர்தல் ஆணையாளரின் அனுமதி தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மலையகப் பிரதேசங்களில் தேர்தல் சம்பந்தமாக நடைபெறும் வன்முறைகள் மற்றும் பிரச்சினைகள் சம்பந்தமாக பொதுமக்கள் மனித அபிவிருத்தி தாபனத்திற்கு தகவல்களை அனுப்பமுடியும்.

கடந்த காலங்களில் மலையகப் பிரதேசங்களில் வாக்காளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு மனித அபிவிருத்தித் தாபனம் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டது.

மனித அபிவிருத்தி தாபனம் மலையகப் பிரதேசங்களில் குறிப்பாக கண்டி, நுவரெலியா, பதுளை, கேகாலை, காலி மற்றும் கிழக்குப் பிரதேசத்தில் அம்பாறை மாவட்டம் போன்ற இடங்களில் தனது கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

மேலும் தேர்தலின்போது வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்தல், வாக்காளர் அட்டைகளைப் பறித்தல், தாக்குதல் சம்பவங்கள் போன்ற தேர்தல் சட்டங்களை மீறுகின்ற வன்முறைச் செயற்பாடுகள் இடம்பெறுமாயின் மனித அபிவிருத்தித் தாபன தேர்தல் கண்காணிப்பு குழுவினருக்கு கீழ் கண்ட தொலைபேசி இலக் கங்களுக்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு, தேர்தல் கண்காணிப்பு அனுமதி பெற்ற மனித அபிவிருத்தித் தாபனம் வாக்காளர்களைக் கேட்டுக் கொள்கின்றது.

மனித அபிவிருத்தித் தாபனம் கண்டி, 081 - 5675420, 081 - 2232217 - தொலைநகல் 081- 2232217,

ஹாட்ஸ் - மஸ்கெலியா 077- 8947078, 077- 6309096.

சமூக நல்வழி மன்றம்- நோர்வூட் - 051-2223815, 077-7114327, தொ.ந. 051 - 2223815

இமைகள் சமூக அபிவிருத்தி நிலையம் - பதுளை, 078 - 7582428, 072 - 5774375, 055 - 5688089. தொ.ந. 055 - 2224680.

மனித சக்தி மன்றம் - காலி. 077- 6924020, 075-7047879,

சத்யோதய - நாவலபிட்டி 077- 8716946 ஆகியவற்றுக்குத் தகவல் தெரிவிக்கலாம். (சி)

## மீசாலையில் ஒருவரைப் பாம்பு கடித்தது

யாழ்ப்பாணம், ஜன.26

வளவுத் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட ஒருவர் புடையன் பாம்பினால் கடியுண்டார்.

இச்சம்பவம் நேற்று மீசாலை கிழக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இளையதம்பி செல்வராசா (வயது 45) என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (04-207)

## கால்கோள்விழா

யாழ்ப்பாணம், ஜன.26

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் 1இல் இணையும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ச. ஞானலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான த.ஸ்ரீஸ்கந்தராசா, ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (04-207)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 07 . 07 . 1951



மறைவு 17 . 12 . 2009

### திருமதி நாகலிங்கம் நேசமணி

என் அருமை அம்மாவே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது

38, ஜின்னா லேன்,
மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம். (94283)

உங்கள் நினைவுகளுடன் வாழும்
நாதன் (மகன்).

## மரண அறிவித்தல்



### சுப்பர் குணம்

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கு, அன்னங்கையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பர் குணம் 23.01.2010 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சரோஜினி, ஸ்ரீகாந்தன், பேபி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சுப்பர்-கந்தி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்ப்பிள்ளை, கணபதிப்பிள்ளை மற்றும் கதிரி, அம்மா, பசுபதி, மாணிக்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும். காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து சின்னத்துரை, சின்னம்மா, சிவபாக்கியம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் தர்மலிங்கம், நீதிராசா, பரமேஸ்வரி ஆகியோரின்அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னங்கை,
உரும்பிராய் மேற்கு. (64699)

தகவல்:
ஸ்ரீகாந்தன் (மகன்).

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் நடராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



சாவகச்சேரி, கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் நடராசா 24.01.2010 ஞாயிற்றுக்கிழமை 94 வயதில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புக் கணவரும், சிவகாமசுந்தரி, சிதம்பரநாதன் (பொறியியலாளர், Australia), முருகையா, அமரர் விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகரத்தினம், ஜீவஜோதி (Australia), சந்திரா, திருமகள் ஆகியோரின் மாமனாரும் அமரர் சரவணபவான் கருணா (நில அளவையாளர்), கிருபாசக்தி (நுண்கலைப்பீட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), கேதீஸ்வரன் (Colombo), சிவசக்தி (Colombo), சிந்துஷா (Dr.Australia), வாகீஷன் ( Accountant, Australia), பிரசன்னா, சௌமியா, ஜானுஷா, நயனன், லவன் ஆகியோரின் அன்புப்பேரனும் விதுஷா, பவனுஷா, சாகித்யன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் அமரர் விசாலாட்சி, சுப்பிரமணியம், கோவிந்தசாமி (India), சிவப்பிரகாசம், சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 24.01.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

கல்வயல்,
சாவகச்சேரி. (சி/564431)

தகவல்:
ந.முருகையா
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்று இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலுக்காக யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து வாக்குப்பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும்போது பொலிஸார் அவற்றைப் பதிவு செய்வதனையும் சர்வதேச தேர்தல்கண்காணிப்புக் குழுப்பிரதிநிதிகள் அந்தப் பணிகளைப் பார்வையிடுவதையும், அவற்றைப் பதிவு செய்வதை படங்களில் காணலாம்.

(படங்கள்: உமா, கவிநேசன்)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் தொலைபேசி இணைப்புக்களைப் பொருத்தும் பணிகள் துரிதம்

சாவகச்சேரி,ஜன.26

தொலைபேசி இணைப்புக்கான கேபிள் பொருத்தும் பணிகள் தென்மராட்சிப் பகுதியில் யாழ்-கண்டி வீதியில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ரெலிக்கொம் நிறுவனத்தால் இதற்காகத் தூண்கள் நாட்டப்பட்டு கேபிள்கள் இணைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த இரு வருடங்களுக்கு முன்னதாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒரு நிறுவனம் தூண்களை நட்டு கேபிள் பொருத்தியிருந்தது. இத்திட்டம் தெற்கே அனுராதபுரம்வரை நீடிப்பதாகவும் இருந்தது. எனினும் பின்னர் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் அந்தக் கேபிள்கள் உட்படத் தூண்களும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தன.

தென்மராட்சிப் பகுதிகளில் மீசாலைக்கு அப்பால் கேபிள்கள், தூண்கள் பல இடங்களில் சேதமடைந்திருந்தன.

தற்போது நாட்டில் சுமுக நிலைமை ஏற்பட்டதைத் தொடர்ந்து மீள இத்திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஏ-9 வீதியில் மீசாலைக்கு அப்பால் வீதிகளை அகலமாக்கும் திட்டத்தின் காரணமாக முதலில் நடப்பட்ட தூண்கள் பிடுங்கப்பட்டு வீதியின் மத்தியில் இருந்து சுமார் 60 அடிக்கு அப்பால் நடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தூண்கள் பொது மக்களது குடியிருப்புக்காணிகள்,வெற்றுக் காணிகளுக்குள் நாட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (50-ரி-131)

## வசதிகுறைந்த 50 மாணவருக்கு சைக்கிள்கள் வழங்கப்படும்

சாவகச்சேரி,ஜன.26

வரணிப்பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி கற்கும் வசதி குறைந்த ஐம்பது மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி தெரிவித்தார் .

வரணி மகாவித்தியாலயத்தில் இசுறு பாடசாலைக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரை நிகழ்த்துகையில் இதனைக் குறிப்பிட்டார். (50-131)

## கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் இல்லை

### ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.26

கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் ஒருவரை நியமித்து உதவுமாறு பிரதேச பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இந்த மருத்துவமனை பிரதேச வைத்தியசாலையாகத் தரமுயர்ந்துள்ளதால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இவர்களின் இரத்த, சல , மல , சளிப் பரிசோதனைகள் யாவும் தனியார் மருத்துவ ஆய்வு கூடங்களில் பெரும் செலவில் மேற்கொள்ளவேண்டியிருப்பதாகவும் அல்லது யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் இந்த வைத்தியசாலையில் காசநோயாளர் விடுதியும் இயங்கி வருவதால் அவர்களின் சளிப்பரிசோதனைகளையும் மேற்கொள்ள மேற்படி நியமனம் வசதியேற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது இந்த வைத்தியசாலைக்கு வாரத்தில் ஒரு தடவை நடமாடும் மருந்துவ ஆய்வுகூட வசதி வழங்கப்பட்டு வருகின்றது. குறைந்தபட்சம் இச்சேவையை வாரத்தில் இரண்டு தடவையாவது மேற்கொண்டால் ஓரளவு வசதியாக இருக்கும் எனவும் இவ்விடயத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-1)

## விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜன. 26

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் 'விக்ரம்- ராஜன்- கங்கு' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 29ஆம், 30ஆம், 31ஆம், பெப்ரவரி 6 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி காலை, மாலை ஆட்டங்களாக இடம்பெறவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.(50-23)




## யாழ். லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையேயான ஏழுபேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை சென்றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 14 கழகங்கள் பங்குபற்றவுள்ளதாக யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் செயலளர் மு.பிரான்சிஸ் தெரிவித்தார். (50-23)

# நல்லூர் ஆலயச் சுற்று வீதிகளில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் பிச்சைக்காரர்

யாழ்ப்பாணம், ஜன.26

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் தங்கியிருந்து பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 வீதி திறக்கப்பட்டதனைத் தொடர்ந்து வெளிமாவட்ட மக்களும், குறிப் பாக தென்னிலங்கை மக்களும் நல்லூர் முருகனைத் தரிசிக்க வருகின்றனர். இவர்களிட மிருந்தும் தமக்கு ஏதாவது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு பிச்சை எடுப்பவர் களிடம் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

இதனால் குடாநாட்டில் பல பகுதியில் இருந்தும் தினமும் ஆலயச் சூழலுக்குப் பிச்சைக்காரர்கள் படையெடுத்து வருவதைக் காண முடிகின்றது.

தினமும் நல்லூர் ஆலய வீதிகளில் இந்தப் பிச்சைக்காரர்கள் நீண்ட வரிசையில் அமர்ந்திருந்து பிச்சை கேட்பதில் ஈடு பட்டுள்ளனர். சில சமயங்களில் இவர்கள் நல்லூர் ஆலயச் சூழலுக்கு வரும் வெளி நாட்டவர் மற்றும் தென்னிலங்கை மக்களைப் பின்னால் துரத்திச் சென்று பிச்சை கேட்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (50-14)

## வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்திற்கும் கரம்பொன் பாலக்காட்டுச் சந்திக்கும் இடையில் உள்ள ஒழுவில் வீதி முற்றிலும் சேதமாகி குண்டும் குழியுமாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.

வாகனங்கள் மிகுந்த சிரமங்களின் மத்தியிலேயே இதில் பயணிக்கின்றன. எனவே உரியவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொண்டு இவ்வீதியைத் திருத்துவதற்கு ஆவனசெய்யுமாறு பொதுமக்கள் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(ரி-325)

## வயோதிபரை பன்றி தாக்கியது

யாழ்ப்பாணம், ஜன.26

வீதியில் சென்ற வயோதிபரை வேகமாக ஓடிவந்த பன்றி தாக்கிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சங்கத்தானையில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். சரவணமுத்து (வயது-76) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தோட்டப்பயிர்களைஅழித்துக்கொண்டிருந்த பன்றியைத் துரத்தியபோதே இச்சம்பவம் நடைபெற்றது. (50-204-207)

# புதிய படகு தொடர்பாக நெடுந்தீவு மக்கள் தொடர்ந்து ஏமாற்றம்

நல்லூர், ஜன.26

சுமார் மூன்று வருடங்களுக்கும் மேலாக புதிய படகு தொடர்பாகத் தாங்கள் தொடர்ந்து அதிகாரிகளால் ஏமாற்றப்பட்டு வருவதாக நெடுந்தீவு மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கான அரச படகுச் சேவையில் இணைத்துக் கொள்ளும் பொருட்டு புதிய படகு ஒன்று நெடுந்தீவுக்கு வழங்கப்படவுள்ளதெனவும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதெனவும் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் மட்டத்திலான அறிவிப்புக்கள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. புதிய படகின் கட்டுமானப்பணிகள் நீர்கொழும்பில் இடம் பெற்று வருவதாகவும் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் அது முடிவடைவதற்குள் புதிய படகு சேவையில் ஈடுபடுமெனவும் அடிக்கடி தகவல்கள் வந்த வண்ணமிருந்தன. ஆனால் தற்போது தான் புதிய படகு கட்டுவதற்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதாக முதல் தடவையாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தனது வேலைத்திட்டங்கள் தொடர்பான குறிப்பில் தெரிவித்துள்ளது. மேலும் 100 பயணிகள் செல்லக் கூடிய படகு ஒன்றைக் கட்டுவதற்கான கேள்விப்பத் திரமே தம்மால் கோரப்பட்டுள்ளதாகவும் மேற்படி குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (50-11-1400)

# கோப்பாய் வடக்குப் பகுதிக்கு மின் வழங்குவதற்கு நடவடிக்கை

கோப்பாய் வடக்கு, ஜன.26

கோப்பாய் வடக்கு நாவலடி வீதி, கயட்டை தோட்டப் பகுதி மற்றும் கோப்பாய்- நீர்வேலி விவசாய இணைப்பு வீதி ஆகியவற்றுக்கு புதிய மின்னிணைப்பு வழங்கும் நடவடிக்கைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

விரைவில் இப்பணிகள் பூர்த்தியடையவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து மின் வழங்கும் பணி ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான இந்த விவசாய வீதிக்கு வழங்கப்படும் மின்னிணைப்புக் காரணமாக நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்பட்டது. (50-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்திறன், மொழி அபிவிருத்திக்கான போதனாசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.26

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பயிற்சி நெறிகளைப் போதிப்பதற்குரிய போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களை யாழ்.வலய முறைசாராக் கல்விப் பிரிவு கோரியுள்ளது.

அந்தப் பயிற்சி நெறிகள் வருமாறு:

* கணனி (மென்பொருள், வன்பொருள்).
* வீட்டு மின் இணைப்பு.
* கைத்தொலைபேசி பழுது பார்த்தல்.
* மனை முகாமைத்துவம்.
* தையல்.
* பன்ன வேலை. .
* ஸ்கிறின் பிறிண் டிங்.
* புத்தகம் கட்டுதல்.
* அலங்காரப் பொருள் உற்பத்தி.
* சிங்களம்.
* ஆங்கிலம்

என்பவையாகும்.

இந்தப் பயிற்சி நெறிகளை பயிற்றுவிக்க தகுதியானவர்கள் சுயமாக தயாரித்த விண்ணபத்தை உதவிக்கல்விப் பணிப்பாளர், முறைசாராக்கல்விப்பிரிவு, வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஒ)

**தவறிவிட்டது**

கந்தையா காந்தலிங்கம் (வான்றி) என்பவரது தேசிய அ.அட்டை (661391545 v) கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலயப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0776660533 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சி/564433

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## விவசாயபீடம்
## விரிவுரைகள் ஆரம்பம்

பின்வரும் கல்வியாண்டு விவசாயபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 01.02.2010 திங்கட்கிழமை அன்று ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

* முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு 2008/2009
* இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு 2008/2009
* மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு 2008/2009
* மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு 2007/2008

(சி/564441)

பதிவாளர்
25.01.2010



edexcel INTERNATIONAL
BTEC HND
New Batches start on: 28/01/2010 at 10.00 a.m
HND in Computing
HND in Quantity Surveying
HND in Civil Engineerig
HND in Business Management
உங்கள் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
IIS CITY CAMPUS
200,Sivan pannai Road, Jaffna
T.P:021 222 8060 Fax: 021 222 6933
Web:iiscitycampus.com


## கடலில் விழுந்தவரின் சடலம் மன்னாரில் கரை ஒதுங்கியது

வண்ணை, ஜன.26

நேற்று முன்தினம் சனிக்கிழமை குருநகரில் இருந்து றோலர் இழுவைப் படகில் கடற்றொழிலுக்குச் சென்ற வேளை கடலில் தவறி விழுந்தவரின் சடலம் மன்னார்ப் பகுதியில் கரையொதுங்கி இருப்பதாக உறவினர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

நெஞ்சுவலி ஏற்பட்டு கடலில் விழுந்த காணாமற் போயிருந்தார் எனக் கூறப்பட்ட குருநகர் டேவிட் வீதியைச் சேர்ந்த நல்லையா கிப்ஸன் (வயது - 62) என்பவரின் சடலமே கரையொதுங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பிரதான வீதியில் சைக்கிள் திருத்தும் கடை வைத்துள்ள மேற்படி நபர் கடற்றொழிலுக்கு அன்றே முதல் முதலாக சென்றிருந்தார் என்றும் கூறப்பட்டது. (ஒ-160)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இளையகுட்டி

(தோப்பு, அச்சுவேலி)



தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் இருபாலை பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சின்னத்தம்பி இளையகுட்டி நேற்று (25.01.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், சௌந்தரநாயகம் (லண்டன்), செல்வநாயகம் (கொழும்பு), லோகநாயகம் (யூனியன் சேர்விஸ் ஸ்ரேசன், இருபாலைச் சந்தி), சத்தியபாமா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி (லண்டன்), சாந்தகுமாரி (அமெரிக்கா), சிவகுமாரி, கிருபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்றவர்களான சின்னராசா, சின்னத்தங்கச்சி, பொன்னையா, தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைகளுக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.லோகநாயகம் (நாதன்-மகன், யூனியன் சேர்விஸ் ஸ்ரேசன், இருபாலைச் சந்தி.)
தொ.பேசி:0212229761

பழையதபாற்கந்தோர்வீதி,
இருபாலை, கோப்பாய்.


# ENGLISH & IT AT GATEWAY FOR A PROMISING FUTURE





GATEWAY CfICT

Gateway to tomorrow's world of IT

**International Computer Driving Licence (ICDL)**
*Syllabus 5 incorporating Office 2007*
- Module 1 - Concepts of Information & Communication Technology
- Module 2 - Using the Computer and Managing Files
- Module 3 - Word Processing
- Module 4 - Spreadsheets
- Module 5 - Using Databases
- Module 6 - Presentation
- Module 7 - Web Browsing and Communication

**e-Citizen**
- Block 1 - Foundation Skills
- Block 2 - Information Search
- Block 3 - e-Participation

**Advanced ICDL**
- Advanced Word Processing
- Advanced Spreadsheets
- Advanced Database
- Advanced Presentation

**ICDL CAD**
The leading independent international standard for core skills in 2-D computer aided designing.

**ICDL WebStarter**
A certification that offers candidates the opportunity to acquire the core skills required to design, create and maintain a web site.

**ICDL ImageMaker**
A certificate on Digital designing to give the candidate the fundamentals on using and manipulating digital images.

**e-Type**
A touch typing qualification, aimed at achieving efficiency and accuracy on the keyboard. Certified by the British Computer Society.

**Diploma in ICT**
- Fundamentals of Computer
- Computer Architecture
- System Analysis and Design
- Computer Applications
- Programming Concepts
- .Net Framework
- Personal Skill Development
- Multimedia
- Project

Leading to e-Citizen/ICDL ImageMaker/ICDL WebStater/ ASAP Exams

**Microsoft Courses**
- VB.NET
- ADO.NET
- ASP.NET
- Windows Server 2003
- Windows XP

**Certificate Courses**
- Computer Awareness
- Computer Hardware & Assembly

**Sri Lankan A/L Programme**
From year 2009, the Sri Lanka Advanced Level IT programme has been prepared by the Ministry of Education and will have their first exam in 2011. Gateway has already commenced classes.

**London A/L Applied ICT**
Advanced Level (AS & A2) January/June Examination conducted at Rodney Street, Borella.

**Sri Lankan O/L - IT**
O/L Information Technology (for Grade 10 & 11 students) Classes at all Branches.

**London O/L (IGCSE)**
Conducted at Rodney Street Borella, Kollupitiya, Bambalapitiya, Nugegoda, Panadura, Negombo, Wattala, Gampaha and Kandy.

GATEWAY Language Centre

English for Life

**English for Young Learners**
- Courses at 3 levels:
  - Starters
  - Movers
  - Flyers
- Certification from Cambridge
- Text Books, Audio Cassettes and Multimedia from UK

**English for Teenagers and School Leavers**
- Courses at 5 levels:
  - Foundation
  - Pre Intermediate
  - Intermediate
  - Upper Intermediate
  - Diploma
- Certification from Cambridge, Pearson/Edexcel or Gateway
- Text Books, Audio Cassettes and Multimedia from UK

**English for Adults and Professionals**
- Courses at 3 levels
- Certification from Cambridge or Gateway
- Text Books, Audio Cassettes and Multimedia from UK

**International English Language Testing System (IELTS)**
- Academic and General Modules
- Revision of past papers
- Course books with CD
- Weekday and Weekend classes

Career Skills for Life

**Accelerated Skills Acquisition Program (ASAP)**
- ASAP Comprehensive Curriculum (90 hours)
- ASAP Training for Young Entrepreneurs (30 hours)
- ASAP Young Workers Capacity Development Course (30 hours)

ASAP UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations Authorised Centre bcs NCC BRITISH COUNCIL Microsoft CERTIFIED PEARSON edexcel

Special Programmes for Students after OL's & AL's

ISLANDWIDE GATEWAY CENTERS


Borella (Rodney Street): 2699327, 2670670, 2670631
Borella (Gothami Road): 2670632/3
Bambalapitiya: 2555868, 2502100
Colpetty: 2372692, 2573364
Nugegoda: 2853542, 2829334
Nawala: 2854778
Panadura: 038-2240386/7
Kalutara: 034-2221225
Kandy: 081-2233587, 4475372
Matale: 066-2222323
Kurunegala: 037-2228684, 037-5623623
Negombo: 031-4870013/4
Chilaw: 032-2222168
Wattala: 011-4815771/2
Gampaha: 033-4670135/6
Matara: 041-2222083, 041-5620922
Galle: 091-2233677, 091-4384177
Bandarawela: 057-2231452
Tangalle: 047-2242853
Kegalle: 035-2221040
Batticaloa: 065-2222961
Anuradhapura: 025-2237677
Jaffna: 021 587 5555 / 021 222 7967
Ratnapura: 045-2222555
Trincomalee: 026-3261281
Vavuniya: 024-5672250
Ampara: 063-2223202
Ambalangoda: 091-2258325
Monaragala: 055-2277232
Mannar: 0777-585920

For more details: GATEWAY LANGUAGE & ICT CENTRE
347, Kasthuriyar Road, Jaffna - Phone : 021 567 5555 / 021 222 7967 - Email : gatewayjfn@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலதும் தீதும்

# 'ஜிம்'முக்குப் போகும் குழந்தைகள்.....!



அமெரிக்காவில் 18 மாதக் குழந்தை யைக்கூட ஜிம்முக்கு அழைத்துப் போகலாம். 18 மாதம் முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கலை, இசை, விளையாட்டு போன்ற பல விடயங்களைக் கற்றுத் தர ஜிம்போரீ க்கள் உள்ளன.

கண்ணாடிக் கதவுகளால் மூடப்பட்ட அரங்கம்போல் உள்ள இந்த இடத்தில் குழந்தைகளின் வயதுக்கேற்ப 1 , 2 என்று வகுப்புகளைப் பிரித்து விளையாட்டோடு விளையாட்டாக மழலையர் பாடல்கள், எண்ணிக்கை, ஏபிஸிடி என்று எல்லாமே கற்றுக் கொடுக்கப்படுகிறது.

கூடத்தின் ஒரு பக்கத்தில் குழந்தைகள் கூடைப்பந்து விளையாட வசதி உண்டு. சறுக்கு மரம், பாலன்ஸ் செய்ய வளையங்கள் எல்லாம் உள்ளன. ஒவ்வொரு குழந்தையுடன் அதன் தாய் அல்லது தந்தை வந்து உடன் இருந்து நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

குளிர் காலத்தில் பனிமழை கொட்டும் போது வீட்டுக்கு வெளியே சென்று விளையாட முடியாத நிலையில் குழந்தைகளுக்கு இது ஒரு சிறந்த பொழுதுபோக்குமையமாக அமைகிறது. வாரத்தில் ஒரு கிழமை ஒருமணி நேரம் என்று நேர அட்டவணை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு வகுப்புக்கு 35 டொலர் கட்டணம்.

முப்பது நாடுகளில், 800 இடங்களில், முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இதை நடத்துகிறார்கள்.

பிறந்த நாளை குழந்தைகள் இங்கே வந்து கொண்டாடவும் ஏற்பாடு செய்யலாம். ஜிம்போரீ தயாரிக்கும் விளையாட்டுப் பொம்மைகள் பிரத்தியேகமானவை. விலையும்தான்! . இணையத்தளமும் இவர்களுக்கு இருக்கிறது.

# பெட்ராவின் அற்புதமான குடைவரைகள்

அஜந்தா, எல்லோரா, எலிபென்டா, மாமல்லபுரம் போன்ற குடைவரைக் கோயில்களைப் பற்றி அறிவோம். இவையெல்லாம் சுமார் 1000 ஆண்டுகளுக்கு உட்பட்டனவே ஆனால், பாலஸ்தீனத்தில் உள்ள ஜோர்டானில் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மலையில் குடைவரை இருப்பிடங்கள் உள்ளன என்பதை அறிய வியப்பாகத்தான் உள்ளது.

ஜோர்டானிலுள்ள பெட்ரா என்ற ஊர் மிகவும் புராதனமானது. 2000 சுமார் 2100 ஆண்டுகளுக்கு முன்பிருந்து நெபட்னியர்களின் தலைநகரமாக விளங்கியது. பாதி நகரம் கட்டப்பட்ட கட்டடங்களைக் கொண்டிருந்தாலும் பாதி இருப்பிடங்கள் பாறைகளைக் குடைந்து வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குடைவரைகள் மத்திய கிழக்கு நாடுகள், கிரேக்கர்கள், ரோமானியர்கள் இவர்களின் கட்டிடக் கலையைப் பின்பற்றியவையாகக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன.

ஆண்டுகளுக்கு முன்பே அந்நகரம் மத்திய தரைக்கடல் நாடுகளான எகிப்து, சிரியா, கிரீஸ் மற்றும் ரோம் ஆகியனவற்றிற்கும் இந்தியா, சீனா முதலிய நாடுகளுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக விளங்கி வந்தது.

அரேபிய வம்சத்தில் ஒரு பிரிவான நபடீன் என்ற மக்கள் இங்குள்ள Sandsone என்று அழைக்கப்படும் மலைப்பாறைகளைக் குடைந்து அவர்கள் வசிப்பதற்கு ஏற்ற வீடுகளாகப் பயன்படுத்தி வந்தனர். இந்தப் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட குடியிருப்பு இடங்கள் இன்றைய புதிய உலகத்தினால் மிகவும் அதிசயமானவையாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், இவைகள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

பெட்ரா சரித்திரக் காலத்திற்கு முன்பாகவே ஒரு குடியிருப்பு பிரதேசமாக விளங்கியது. இருப்பினும் வசிப்பிடங்கள் தவிர, பெரிய அரங்கம், சமாதிகள் போன்றவைகளும் பாறைகளைச் செதுக்கியே அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசம் எப்போதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட நாடுதான். ஆயினும் இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே தண்ணீரை எவ்வளவு நல்ல முறையில் சேமித்து, சிக்கனமாகப் பயன்படுத்த முடியும் என்பதை அறிந்து அதை நடைமுறைப்படுத்தி இருப்பதைக் காணும் போது ஆச்சரியம் மேலிடுகிறது.

திடீரென்று வெள்ளம் வரும்போது அந்நீரை வீணாக்காமல், பூமிக்கடியில் சேமித்து வைக்கத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள். தண்ணீர்ப் பஞ்சம் தலை காட்டும் சமயம் தங்கள் தேவைக்குப் போக மிஞ்சிய நீரைப் பிற பாலைவன நகரங்களுக்கு விலைக்கு விற்கவும் செய்தார்கள். இதனாலேயே இவர்களின் செல்வச் செழிப்பும் வளர்ந்தது.

கி.பி. 363 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒரு பூகம்பத்தினால் பெட்ரா நகரம் மிகவும் பாதிப்புற்றது. அவர்கள் தண்ணீரைச் சேமிக்கச் செய்திருந்த வழிமுறைகளும் அழிவுற்றன. இந்த எதிர்பாராத நாசத்தால் இந்நகரின் வியாபார முக்கியத்துவம் குறைய ஆரம்பத்தது. படிப்படியாக அதன் பெருமையை இழந்தது.

1812 ஆம் ஆண்டு ஜோஹன் லுட்விக் பர்க்ஹார்ட் என்ற சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த புதிய பிரதேசங்களைக் கண்டுபடிக்கும் ஆராய்ச்சியாளரால் இந்தப் பழம்பெருமை வாய்ந்த பெட்ரா எனும் மலைக்குகை இருப்பிடங்கள் இருந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது.

# தண்ணீர் குடித்தால் காது வலி வருமா?

கடந்த சில ஆண்டுகளாக, வெள்ளக் காடாகச் சூழ்ந்து விடுகின்ற மழைத் தண்ணீர் சலிப்பை உண்டாக்கியிருந் தாலும், உடல் ஆரோக்கியத்திற்குத் தண்ணீர் அன்றாடம் இரண்டு லீற்றர் குடிக்க வேண்டும் என்பது அவசியம். அதைப் பருகும் விதம் எப்படி என்பது இதோ இங்கே கூறப்படுவது சரிதானோ என்று யோசிக்க வைக்கின்றது.

குவளைக் கணக்கில் தண்ணீர் குடியுங் கள் என்று கூறப்படுகிறது. எப்படிக் குடிக்க வேண்டும் ?

தண்ணீரை, குவளையில் நன்றாக வாய் வைத்துக் குடிக்கவேண்டும். அவசரமின்றி மெதுவாகக் குடிக்க வேண்டும். வாய் நிறைய தண்ணீரை வைத்திருந்து கொஞ்சம், கொஞ்சமாக வயிற்றுக்குள் இறக்குதல் வேண்டும். அப்பொழுது எச்சிலுடன் குதப்பி தண்ணீரை வயிற்றில் இறக்குவதால் உண்ட உணவு ஜீரணிக்கும்.

குவளையில் வாய்வைத்துக் குடித்தால், காதில் வருகிற நோய்கள் தள்ளிப் போகும். தண்ணீரைத் தலை அண்ணாந்திச் சாப்பிடுவது காது நோய்களுக்கு வழிவகுக்கும். தண்ணீரை அண்ணாத்திக் குடித்ததால் ஏற்பட்ட பாதிப்பால் சிலருக்கு விரைந்து காது நோய்கள் தோன்றுகின்றன. நமது உடம்பில் காது,மூக்கு,தொண்டை வழிகள் ஒரே பாதையில் அடுத்தடுத்து உள்ளன. ஒருபோதும் தண்ணீரை அண்ணாத்திக் குடிக்கவேண்டாம். ஒருவர் குடித்த குவளையில் மற்றொருவர் குடிப்பது சுகாதாரக் கேடு என நீங்கள் கூறலாம். இதற்கும் மாற்று வழி உண்டு. ஒவ்வொருவருக்கும் பல்தூரிகை இருப்பதுபோல தனித்தனியே டம்ளர் வைத்துக் கொள்ள வேண்டும்.விருந்தினருக்கு கொடுக்கப்பட்ட டம்ளரை உடனுக்குடன் அலசிக் கழுவி வைத்துக் கொள்ளலாமே!

# திருடும் நண்டுகள்



தென்னந்தோப்பு போன்றவற்றில், ஆள் இல்லாத நேரங்களில் மனிதர்கள் தான் இளநீர், தேங்காய் களை திருடுவர் என கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் மனிதர்களுக்குப் போட்டியாக, தற்போது நண்டுகளும் களத்தில் இறங்கியுள்ளன.

நண்டு வகைகளில் இவை சுபர்சஸ் லாட்ரோ என்ற வகையைச் சார்ந்ததாகும். இந்த நண்டுகளின் உணவு தேங்காயாகும். மனிதர்கள் நடமாட்டம் இல்லாத, இரவு நேரங்களில் இந்த நண்டுகள் மரம் ஏறுகின்றன. சுமார் 30 கிலோ எடை வரை இழுத்துச் செல்லும் திறனையும், சுமார் 28 கிலோ எடை வரை தூக்கிச் செல்லும் திறனையும் இவை பெற்றுள்ளன. இந்த நண்டுகள் நீலநிறம் உடையனவாக உள்ளன. ராட்சத நண்டு போல் இருப்பதால், உணவு வகைக்கான நண்டுகளில் இவை இடம் பெறவில்லை. இந்த நண்டுகளுக்குப் பயிற்சி கொடுத்து, யானை மற்றும் கழுதைகளைப் போல, மனிதர்களுக்கு உதவி செய்பவையாக மாற்றலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# சேவல் கூவியதால் அபராதம்



அலாரம் இல்லாமல், அதிகாலை 4-30 மணிக்குச் சேவல் கூவியதும் எழுவது தமிழ்ப்பண்பாடு, அதுவும் மார்கழி மாதம் என்றாலே ஆனந்தம்தான்!

ஆனால் அமெரிக்கக் கிராமம் ஒன்றில் அதிகாலை 4.30க்குச் சேவல் கூவுவதால், அபராதம் இரண்டு லட்சம் ரூபா வி[illegible] என்று எச்சரிக்க[illegible] அதனை வளர்ப்பவர்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் தொழிலாளி பால்லில்டன் என்பவர் ஐம்பது கோழிகளையும் ராக்கி என்ற பெயருள்ள சேவலையம் வளத்து வந்தார்.

ஐம்பது கோழிகள் புடை சூழ மாண்புமிகு அமைச்சர் போலத் துள்ளித் திரிந்து ராஜநடையுடன் [illegible] என்பதாலோ என்னவோ, அதிகாலையில் ஆனந்தமாகக் கூவத் தொடங்கிவிடுகின்றது. இதனால் எரிச்சலுற்ற கிராம மக்கள் தூக்கம் கெடுவதாகக் கிராமசபையில் புகார் மனு கொடுத்தனர்.சேவல் கூவுவதைப் பதினான்கு நாள்களுக்குள் நிறுத்த வேண்டும். அல்லது இரண்டு லட்சம் ரூபாய் அபராதமும் அதன்பின் நாளொன்றுக்கு இருபத்தைந்தாயிரம் அபராதமும் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பு வரவே பால்வில்டன் அந்தச் சேவலைத் தீர்த்துக்கட்டிவிட்டார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசத்துடன் சேர்ந்தோடி....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினா-விடை, கோத்தபாய போர்க்குற்றம் இழைத்தார் என அவர் கொடுத்த செவ்வி, அவரை ஆதரிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுத்த முடிவு, சிறிலங்காவுடன் இனி மென் அணுகுமுறை என அமெரிக்க செனற் வெளியுறவுக் குழுசெய்த பரிந்துரை, பிலிப் அல்ஸ்ரனின் போர்க்குற்ற அறிக்கை, பான் கீ மூனின் மறுப்பு அறிக்கை, சுற்றுலாவுக்கு ஏற்றதென சிறிலங்காவுக்கு 'நியூயோர்க் ரைம்ஸ்' கொடுத்த முதலிடம், டப்ளினில் நடைபெற்ற போர்குற்ற விசாரணை, ஜி. எஸ்.பி. பிளஸ் ஏற்றுமதி வரிச்சலுகையை ஆறு மாதங்களுக்கு மட்டும் ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தியது - இப்படியான எல்லாமே ஒன்றுக்கு ஒன்று தொடர்பான தனித்தனி நிகழ்வுகள். ஆனால் - தமிழ் மக்களைச் சுற்றி நிகழும் இந்த நிகழ்வுகள் எதுவுமே, இன அழிவுக்கு உள்ளாகி, இப்போது நியாயம் வேண்டி நிற்கும் அந்த மக்களின் நன்மையை நோக்கமாகக் கொண்டவை அல்ல. இவை எல்லாமே - பெரிய சக்திகள் தமது நலன் சார்ந்து அரக்கும் காய்களின் அடிப்படையில் நிகழ்ந்தவை. நிகழ்ந்து வருபவை.

### தமிழரின் பரிதாப நிலை

2009 ஆம் ஆண்டின் பேரழிவுகளை விடவும் மிகப் பெரிய பரிதாபம் என்னவென்றால் - தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பது பற்றிய அறியாமையில் தமிழினத்தில் பெரும் பகுதி இன்னமும் இருப்பதுதான். தமது உண்மை நிலை என்ன என்பதை அறிவது தான் தமிழர்கள் முன்னால் இன்று உள்ள கடமை. அதில் தெளிவு இருந்தால்தான் இனி என்ன செய்ய முடியும் என்பதையும் தெளிவாகச் சிந்திக்க முடியும்.

21 ஆம் நூற்றாண்டின் வல்லரசுப் போட்டியில் - உலக உச்ச நாட்டுக்கான அளவு கோல் பொருளாதாரப் பலம். போர்ப் பலம் அல்ல. பொருளாதார மேன்மையை அடிப்படையாகக் கொண்ட இந்த வல்லரசுப் போட்டியின் உயிர் வழியான கப்பல் பாதைகளைத் தன்னூடு கொண்டுள்ளதால் - இந்து சமுத்திரம் இந்தப் போட்டியின் பிரதான ஆடு களமாக உள்ளது. இந்த ஆடு களத்தின் நடு மையத்தில் சிறிலங்கா இருப்பதால் - உலக வல்லரசுகளின் மூலோபாயக் குவி மையமாக இலங்கைத் தீவு ஆகிவிட்டது.

இலங்கைத் தீவில் வாழும் எந்த ஒரு மக்கள் இனத்தினது உரிமைகள் பற்றியும் இந்த வல்லரசு நாடுகளுக்கு எந்த அக்கறையும் எப்போதும் இருந்தது இல்லை; இருக்கப்போவதும் இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் அங்கு அமைதியும், உறுதிப்பாடும் இருந்தால் போதுமானது. அப்போது தான் அவர்களது நலன்கள் காக்கப்படும். ஆகவே - அந்த அமைதியும் உறுதிப்பாடும் எப்படி உருவாக்கப்பட்டாலும் அவர்களுக்குப் பிரச்சினைகள் இல்லை. அது ஒரு போர் மூலம்தான் உருவாக்கப்பட முடியும் எனில் அத்தகைய ஒரு போரையும் அவர்கள் செய்வார்கள்; செய்விப்பார்கள்; அதையே செய்வித்தார்கள். இலங்கைத் தீவில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவது தொடர்பில் இந்த வல்லரசு நாடுகளுக்குப் பல பிரச்சினைகள் இருந்தன: முதலாவது பிரச்சினை - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். அதிலும் குறிப்பான பெரும் பிரச்சினை பிரபாகரன் என்ற மனிதர். குழப்பக்காரர், நம்பகத்தன்மை அற்றவர், சமாதானம் பேசிக்கொண்டு போருக்குத் தூண்டுபவர் - என்றவாறாக இலங்கைத் தீவில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் பேணுவதற்கு அவர்களுக்கு அவர் ஒரு பிரச்சினைக்காரராக இருந்தார். அவரைக் கொல்ல வேண்டும் என்பதோ, அவரது இயக்கத்தை அழிக்க வேண்டும் என்பதோ அவர்களுக்கு ஒரு தேவையாக இருக்கவில்லை. ஆனால், இலங்கைத் தீவில் அமைதியைப் பேணுவதற்கு ஏற்றவாறாக அவருடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்குத் தாம் எடுக்கும் முயற்சிகளுக்கு அவர் ஒத்துழைக்கவில்லை என்பதே அவர்களுடைய பிரச்சினை. அடுத்த பக்கத்தில் - ராஜீவ் காந்தி கொலைக்குப் பழிவாங்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு; 'பயங்கரவாத' நடவடிக்கைகளுக்கான ஒரு முன்னுதாரணத்தை அழிக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு; சீனாவிற்கு எதிரான தனது மூலோபாயப் பங்காளியான இந்தியாவின் விருப்பிற்கு ஏற்ப இயங்க வேண்டிய தேவையும் அமெரிக்காவுக்கு; விடுதலைப் புலிகளை அழிக்க சிறிலங்காவுக்குத் துணை செய்தால் இலங்கைத் தீவில் வேரோடி இந்து சமுத்திரத்தில் விழுது பரப்பலாம் என்ற எண்ணம் சீனாவுக்கு. வாய்ப்புத் தேடிக் காத்திருந்தார்கள் எல்லோரும். ராஜபக்ஷவை ஆட்சியில் அமர்த்தி, சிங்களப் படைகளைச் சீண்டிப் பிரபாகரன் தொடக்கிய போர் - கடைசியில் அவரது விருப்பத்தை நிறைவேற்றாமல் - அவரை அழிக்க நினைத்தவர்களின் விருப்பங்களை ஈடேற்றி, அவர்களது நலன்கள் சார்ந்தே முடிவுற்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டதன் பின்னரான சிறிலங்காவைக் கையாள்வது தொடர்பில் இந்த வல்லரசுகள் தமது தலையைப் பிய்த்துக்கொண்டு இருந்தபோதுதான் - தேர்தல் பற்றிய அறிவிப்பைச் செய்தார் ராஜபக்ஷ. திடீரெனப் பிறந்த இந்தப் புதிய சூழலைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயன்ற இந்த வல்லரசுகள் இப்போது தமது புதிய விளையாட்டைத் தொடங்கியுள்ளன.

பொன்சேகா போட்டியில் இறங்கியதன் பின்னணியிலோ, அல்லது இப்போது அவருக்குப் பின்னாலோ அமெரிக்காவின் ஆசீர்வாதம் இருக்கலாம். ஆனால் - அதற்காக, ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறும் ஒரு சூழலை அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை என்று அர்த்தம் இல்லை. அதனால், தான் நடுநிலைமை வகிப்பதாக அது சொல்லுகிறது; ஏனென்றால் - ராஜபக்ஷ மீண்டும் ஆட்சியில் ஏறினால் அவரோடு ஒத்துப் போவதற்கும் ஒரு வழி தேவை.

இந்தியாவுக்கும் பொன்சேகா ஆட்சி ஏற வேண்டும் என்பதே ஆவல்; சீனாவோடு கை கோத்துவிட்ட ராஜபக்ஷவை அகற்ற வேண்டும். ஆனால், பொன்சேகாவும் நாளைக்கு சீனாவின் பங்காளி ஆகமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அல்லது - பொன்சேகா தோற்று ராஜபக்ஷவே மீண்டும் ஆட்சி ஏறிவிட்டால் என்ன செய்வது? அதனால் - பின்னாலே பொன்சேகாவுக்கு முண்டுகொடுத்தபடி, முன்னாலே நடு நிலமை என்கிறது இந்தியா.

இந்தத் தேர்தல் சில்லெடுப்புகளுக்குள் எல்லாம் தலையிடாமல் - மறுபக்கத்தில் - தனது காரியத்தில் கண்ணாயிருக்கின்றது சீனா. துறைமுகம் கட்டுதல், விமான நிலையம் அமைத்தல், நெடுஞ்சாலைகள் இடுதல், குறுந்தெருக்கள் போடுதல் என டொலர்களை மில்லியன்களிலும், சீனர்களை ஆயிரங்களிலும் கொட்டுகின்றது சீனா. யார் ஆட்சிக்கு வந்தாலும் பிடுங்கி எறியமுடியாத அளவுக்கு இலங்கைத்தீவில் வேரூன்றுவதே சீனாவின் இலக்கு.

நாமறிந்த பொது விதி என்னவென்றால் - ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். இலங்கைத் தீவோ மூன்றாகிக் கிடக்கின்றது - கூத்தாடிகளுக்கோ திருவிழா. ஜனவரி 27 ஆம் நாள் இலங்கையில் எப்படி விடிந்தாலும் அதற்கு ஏற்றவிதத்தில் தம்மை தயார்ப்படுத்திக்கொள்ள இந்த மூன்று பெரும் பிரிவுகளையும் வைத்துக் காய்களை அரக்கத் தொடங்கிவிட்டனர் அவர்கள்.

அண்மைக் கால நிகழ்வுகள் எல்லாம் அந்தக் காய் நகர்த்தல்கள்தான். இந்த நிகழ்வுகள் எல்லாம் தனித் தனிப் புள்ளிகள் போன்றவை. அவற்றை இணைத்து ஓர் அழகான இராஜதந்திரக் கோலத்தைப் போட முடியுமா என்று பாருங்கள்.

### நடந்தது இது!

பசுபிக் பிராந்தியப் படைத் தளபதிகளின் மாநாடு ஒன்றுக்கு பொன்சேகாவுக்கு அமெரிக்கா அழைப்பு அனுப்பியது. அவர் பெட்டி படுக்கைகளை அடுக்கிய சமயத்தில் அமெரிக்க வெளியுறவுத் துறை விடுத்த ஓர் அறிக்கையில் - வெள்ளைக் கொடிகளோடு சரணடைய வந்தவர்களைப் போர் தர்மங்களை மீறித் தாம் சுட்டுக் கொன்றார் என குருநாகலவில் பொன்சேகா ஆற்றிய ஓர் உரை குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது பசுபிக் படைத் தளபதிகள் மாநாட்டுக்கான அழைப்பு இரத்துச் செய்யப்பட்டது. இலங்கைப் போரில் இழைக்கப்பட்ட குற்றங்களில் அவருக்கு இருக்கக்கூடிய பங்கு காரணமாகவே அந்த அழைப்பு இரத்துச் செய்யப்பட்டதாக அப்போது கதைகள் அடிபட்டன. மாநாட்டுக்குச் செல்வதற்கு அழைப்பு மறுக்கப்பட்ட பொன்சேகா, அமெரிக்காவில் மகள் வீட்டுக்குப் போக அனுமதிக்கப்பட்டார். அமெரிக்கா வந்த பொன்சேகாவை அதிகாரிகள் 'வினா-விடை' செய்யவிருக்கின்றனர் எனச் செய்திகள் வந்தன, ஆனால், வினாக்களுக்கு விடை அளிக்க முன்னதாகவே அமெரிக்காவிலிருந்து அவர் வெளியேறிவிட்டார் என்று சொல்லப்பட்டது.

கொழும்பில் வந்து இறங்கியவரை தேசப் பற்று மிக்கவர், நாட்டை காட்டிக்கொடுக்காதவர், அமெரிக்க அச்சுறுத்தலுக்குப் பணியாதவர் என்று சிங்கள தேசம் போற்றியது. தம்மை ஆளும் அருகதை அவருக்கே உண்டு என்று புகழ்ந்தது. இந்தப் போற்றுதலுக்கும் புகழ்ச்சிக்கும் பின்னால் மேற்கின் கைப்பாவையான ஐ.தே.க. இருந்தது. அரசுத் தலைவர் தேர்தலில் இறங்கி ராஜபக்ஷவை எதிர்க்கும் எண்ணத்தை வெளியிட்டார் பொன்சேகா.

அதே நேரத்தில் - நாடு போகிற போக்கைப் பார்த்தால் பொன்சேகா மண்ணைக் கவ்வி, ராஜபக்ஷவே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் நிலை வந்துவிடுமோ என்ற சந்தேகம் இந்த வெளியாள்களுக்குத் திடீரென வந்துவிட்டது. திடீரென - கோத்தபாய போர்க் குற்றம் இழைத்ததார் எனச் செவ்வி கொடுத்தார் பொன்சேகா. போர்க்குற்றக் காரணங்களுக்காக அமெரிக்க மாநாட்டுக்கு அழைப்பு மறுக்கப்பட்ட அவர், அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த பின்பு, அதே போர் குற்றங்களை இன்னொருவர் மீது சாட்டினார். அவரது அந்தச் செவ்வியோடு போர்க் குற்றங்கள் பற்றிய கதைகள் திடீரென உலகில் அடிபடத்தொடங்கின. கைகளும் கண்களும் கட்டப்பட்டுத் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்படும் காணொளிப் பதிவு வெளியாகி, சர்ச்சையைக் கிளப்பி, தமிழர் பொங்கி எழுந்து, சிறிலங்கா அதைப் பொய்யானது என்று நிராகரித்து, எல்லாம் மெல்ல அடங்கிப் போய் நான்கு மாதங்களின் பின்னர் - திடீரென முளைத்த பிலிப் அல்ஸ்ரன் அது உண்மையானதுதான் என்று அறிக்கை விட்டார்; நடுவிலே பாய்ந்த பான் கீ மூன் அது அல்ஸ்ரனின் சொந்தக் கருத்து என்றார்.

இங்கே கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில் - அல்ஸ்ரன் யாரை இலக்கு வைக்கிறார் என்பதுவோ, பான் கீ மூன் யாரைப் பாதுகாக்க முயல்கின்றார் என்பதுவோ. அவர்களுக்கே இன்னும் முடிவாகவில்லை: ஜனவரி 27 ஆம் நாள் விடிவதற்காகக் காத்திருக்கின்றார்கள். போர் குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, டப்ளினில் நீதிமன்றம் கூடி விசாரணைகள் எல்லாம் தடல்புடலாக நடக்கின்றன. ஆனால், குற்றவாளிக் கூண்டில் போருக்கு உத்தரவிட்டவரையா, அல்லது போரை நடத்தியவரையா நிறுத்துவது என்பதில் அவர்களுக்கே இன்னும் முடிவாகவில்லை: ஜனவரி 27 ஆம் நாள் விடிவதற்காகக் காத்திருக்கின்றார்கள். இது இப்படி இருக்க - முரண்பாடுகளைக் குறைத்து சிறிலங்காவுடன் இனிமேல் நல்லுறவை வளர்க்க வேண்டும் எனத் தனது அரசாங்கத்திற்கு அமெரிக்க செனற் வெளியறவுக் குழு பரிந்துரை செய்தது. இப்போது ஆட்சியில் இருப்பவருடன் நல்லுறவா, அல்லது புதிதாய் ஆட்சியில் ஏறுபவருடன் நல்லுறவா என்பது அவர்களுக்கே இன்னும் முடிவாகவில்லை: ஜனவரி 27 ஆம் நாள் விடிவதற்காகக் காத்திருக்கின்றார்கள்.

### நடப்பது இது தான்!

போர் குற்றச்சாட்டுகள் பொதுவானவை; சிறிலங்காவின் ஆட்சியில் ஏறுபவரை வழிக்குக் கொண்டுவர எடுக்கப்படும் முயற்சி அது. குறிப்பிட்ட எவரையும் நோக்கி அவை முன்வைக்கப்படவில்லை. இங்கே வசதி என்னவென்றால் - ஆட்சியில் ஏறும் வாய்ப்பில் உள்ள இருவரையுமே போர் குற்றம் சாட்டக்கூடிய வசதி உள்ளது; ஏனெனில், இருவருமே போரின் பங்காளிகள். ராஜபக்ஷக்கள் மட்டுமே குற்றம் சாட்டப்படுவர் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஆட்சியில் ஏறிய பின்பு பொன்சேகா சீனாவுடனும் ஈரானுடனும் சல்லாபித்தால் - போர் குற்றச்சாட்டுகளை அவரை நோக்கியும் நீட்டலாம். அப்படியான ஒரு நகர்வின் மூலமாக - பொன்கோவை அலரி மாளிகையில் இருந்து அகற்றிவிட, அவர்களது செல்லப்பிள்ளை ரணில் விக்கிரமசிங்க தன்பாட்டில் அந்த இடத்திற்கு வந்துவிடுவார். சிறிலங்காவுடன் நல்லுறவு, அல்லது முரண்பாடுகளைக் குறைத்தல் என்பதுவும் பொதுவானது. அதுவும், சிறிலங்காவின் ஆட்சியில் ஏறுபவரை வழிக்குக் கொண்டு வருவதற்கு எடுக்கப்படும் முயற்சி. பொன்சேகா மட்டும் தான் என்று அல்ல, ராஜபக்ஷவே மீண்டும் ஆட்சியில் ஏறிவிட்டாலும் அவருடன் சமாளித்துப் போவதற்கான ஒரு வழி. அல்லது - ஆட்சி பீடம் ஏறிய பின்பு பொன்சேகா பிரச்சினை கொடுத்தால், போர்க் குற்றம் சாட்டி அவரை அகற்றிவிட்டு, ரணிலிடம் நாட்டை ஒப்படைப்பதற்கான ஓர் எற்பாடு. 2010 ஆம் ஆண்டில் சுற்றுலா செல்வதற்கான மிகச் சிறந்த 32 நாடுகளில் முதலாவது இடத்தை நியூயோர்க் ரைம்ஸ் சிறிலங்காவிற்கு கொடுத்ததும் இதன் ஓர் அங்கம் தான். இது எல்லாமே கண்டிப்பும் கருணையும் காட்டுவது போன்றதான - சமாந்தரமாக நகர்த்தப்படும் ஒரே நடவடிக்கையின் இரு முனைகள். போர் குற்றச் சாட்டுக்களையும் தயார்ப்படுத்தி வைத்துக்கொண்டு, அன்புக் கரங்ளையும் நீட்டுவது, ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை நிறுத்துவது. ஆனால் அது ஆறு மாதங்களுக்கு மட்டும் தான் என முன்கூட்டியே சொல்லிவிடுவது.

இங்கே - நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், இதில் எந்த இடத்திலுமே தமிழர் நலன் சம்பந்தப்படவில்லை என்பது தான். தமது நலன்களைக் காப்பதற்காக அவர்கள் எமது பிரச்சினையைப் பயன்படுத்துகின்றார்கள் அவ்வளவு தான். அவர்களது நலனைக் காப்பதன் ஊடாக எமது பிரச்சினையை நாம் எப்படித் தீர்க்கப் போகின்றோம் என்பதில் தான் எமது விவேகம் தங்கியுள்ளது.

தென்னாசியாவில் இந்தியாவே முதன்மை ஆட்டக்காரன். இந்தியாவுக்குத் தெரியாமல் எதுவும் நடக்கவில்லை, நடக்கவும் முடியாது, நடக்கவும் மாட்டாது.

இந்தியாவும் இங்கே தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டிய விடயம் ஒன்று உண்டு. உலக ஒழுங்கு மாறி மாறி வந்த ஒவ்வொரு காலத்திலுமே ஆட்சியிலிருக்கும் சிங்களவர்கள் இந்தியாவுக்கு எதிரானவர்களுடனேயே கைகோத்து இருந்தனர். தமிழர்கள் மட்டுமே இந்தியாவின் பக்கம் எப்போதும் இருந்தனர்.

சிங்களவர்கள் இந்தியாவுடன் கைகோர்த்த ஒரே ஒரு சந்தர்ப்பம் பிரபாகரனைக் கொல்லுவதற்காகவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்காகவும் நடத்தப்பட்ட போர் மட்டுமே. அது இரண்டுமே இப்போது நடந்து முடிந்துவிட்டது. நாளை ஆட்சியில் ஏறும் சிங்களவர் என்ன செய்வார் என்பதை இந்தியா சிந்திக்க வேண்டும். தமிழர்களைப் பொறுத்தவரையில், நான் மேலே எழுதியதைப் போல, எமக்கு நன்மையோ தீமையோ, அது இந்தியாவிலிருந்து தான் வர வேண்டும்.

2005 இல் அப்போது தலைமைப் பொறுப்பில் இருந்த விடுதலைப் புலிகள் எடுத்த முடிவும், அந்த முடிவின் விளைவைக் கண்ட பின் அவர்கள் நடந்து கொண்ட முறைகளும் தமிழ் தேசிய இனத்திற்கு எதைக் கொண்டு வந்தன என்பது இப்போது வரலாறு. 2010 இல் இப்போது தலைமைப் பொறுப்பில் இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவும், அந்த முடிவின் விளைவைக் கண்ட பின்பு அது நடந்துகொள்ளவுள்ள முறைகளுமே எமது இனத்தின் நாளைய வரலாறு.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
A/L 2012
கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள்
தமிழ்- S. சிவா
நாடகம் - N. கஜீதரன்
அரசியல்-S.ஸ்ரனிஸ்லாஸ்
அளவை-S.றொகேஷியன்
கிறீஸ்.நாக-Mrs.மல்லிகா
இந்து நாக - S.கார்த்திக்
புவி- A.ராஜா
ENG - G. ரஞ்சித்
B.st - B.S.பசில்
Acc - S.தவா
EC.- NBகஜீதரன்
G.I.T - D.ஷெல்ரன்

ஈசன் திருமண சேவை
(அரச பதிவு) வட்டு.வடக்கு, புளியடிச்சந்தி, வட்டுக்கோட்டை
ஆண் பெண் உள்நாடு வெளிநாடு உட்பட டாக்டர், எஞ்சினியர் உட்பட்ட அனைத்து சாதகங்களும் உண்டு. தொடர்பு: அருள் ஈசன்.
T.P. 0712124350, 0773618507

Engineering Drawing & AutoCAD
New batch starts on:
06.02.2010
(10.00 a.m)
IIS
Institute of Informatics Studies
T.P 021 222 2831

கண்ணீர் அஞ்சலி
எமது அலுவலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றும்
திரு. நா.ஜெயவீந்தன்
அவர்களின் அன்பு தந்தையார் அமரர்
கதிரன் நாகமுத்து
அவர்கள் 2010.01.25 ஆம் திகதி அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
பிரதேச செயலாளரும்,
நலன்புரிசங்க சகல அங்கத்தவர்களும்,
நலன்புரிசங்கம், பிரதேசசெயலகம், தெல்லிப்பழை.
(584440)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் குடியரசு தினம் இன்று; உச்சநிலைப் பாதுகாப்பு ஏற்பாடுகள்

புதுடில்லி, ஜன.26

60ஆவது குடியரசு தின விழா, இன்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.இதையொட்டி, வழக்கம் போல், டில்லியில் ஜனாதிபதி தேசிய கொடி ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார்.

டில்லியில், விஜய் சவுக்கில் இருந்து செங்கோட்டைவரை 8 கிலோமீற்றர் தூரத்துக்கு பிரமாண்ட அணிவகுப்பு நடைபெறுகிறது. ராஜபாதையில், ஜனாதிபதி பிரதீபா பட்டீல் தேசிய கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார்.

இந்த ஆண்டு கௌரவ விருந்தினராக தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங் பாக் கலந்துகொள்கிறார். பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர்கள், பல்வேறு நாட்டு தூதர்கள், முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், எம்.பி.க்கள் உள்பட லட்சக்கணக்கானோர் கலந்து கொள்கிறார்கள்.

குடியரசு தினத்தையொட்டி, ஜனாதிபதி ஆற்றும் உரை, இன்று இரவு 7 மணிக்கு தூர்தர்ஷன் மற்றும் வானொலியில் ஒளி, ஒலிபரப்பாகிறது.

இந்த குடியரசு தின கொண்டாட்டத்தை சீர்குலைக்கும் வகையில், பாகிஸ்தான் தீவிரவாதிகள் வான்வழியாக வந்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதற்காக 50 பாரா கிளைடர்களை தீவிரவாதிகள் வாங்கி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும், இந்திய விமானத்தை கடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, இந்த ஆண்டு வழக்கத்தை விட அதிகமான பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஜனாதிபதி கொடியேற்றும் ராஜ பாதையில் பல அடுக்கு பாதுகாப்பு போடப்படுகிறது. டில்லி காவல்துறையின் 71 ஆயிரம் பொலிஸார் நகரம் முழுவதும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள்.

இதுதவிர, ஆயுதம் தாங்கிய துணை இராணுவப்படையினர் நகரின் முக்கிய சந்திப்புகள், வணிக வளாகங்கள், மெட்ரோ ரயில் நிலையங்கள் ஆகியவற்றில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், 192 நிறுவன பாதுகாப்பு படையினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், டில்லியில் குடியரசு தின அணிவகுப்பு பாதையிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். இன்று அதிகாலையில் இருந்து பிற்பகல் 1.30 மணிவரை, இவர்கள் இப்பணியைச் செய்வார்கள்.

தீவிரவாதிகள் வான்வழியாக வந்து தாக்குதல் நடத்துவதை முறியடிப்பதற்காக, விமான எதிர்ப்பு பீரங்கிகளும், போர் விமானங்களும் தயார்நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பு படையைச் சேர்ந்த, குறிபார்த்து சுடும் வீரர்கள், உயரமான கட்டடங்களின் உச்சியில் நிறுத்தப்படுவார்கள். நடமாடும் அதிரடிப் படைகளும் ரோந்து சுற்றி வருவர்.

அணிவகுப்பு பாதைக்கு மேலே ஹெலிகாப்டர்கள் பறந்தபடி கண்காணிப்பில் ஈடுபடும். அணிவகுப்பை பார்வையிட வரும் பொதுமக்களை கண்காணிக்க நூற்றுக்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

டில்லி நகர எல்லைகள் மூடி 'சீல்' வைக்கப்படும். டில்லிக்குள் நுழையும் வாகனங்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படும். மெட்ரோ ரயில் போக்குவரத்துக்கு இ[illegible] விதிக்கப்படும். பகல் 12 ம[illegible], குறிப்பிட்ட ரயில் நிலையம்வரை மட்டுமே மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

விமான நிலையங்கள், துறைமுகங்கள் போன்றவற்றிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

காஷ்மீரில், குடியரசு தின கொண்டாட்டத்தை சீர்குலைக்க, தற்கொலைப்படை தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாக கூறப்படுகிறது. வடகிழக்கு மாநிலங்களிலும் தீவிரவாதிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். எனவே, அங்கெல்லாம் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்தில், தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று உளவுத் துறை தகவல்கள் கூறுகின்றன. எனவே, அங்கு 'உஷார்'நிலை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அயோத்தி, தாஜ்மகால், மதுரா, காசி போன்ற பதற்றமான இடங்களில் விசேஷ பாதுகாப்பு போடப்பட்டு இருக்கிறது.

# அரசியல் வாழ்க்கையிலிருந்து ஒதுங்குகின்றார் அத்வானி



அரசியலில் இருந்து அத்வானி ஒதுங்குகிறார். இப்போது தனக்குப் பிடித்த புத்தகங்களைப் படிப்பதிலும், தன் மகளுடன் திரைப் படங்கள் பார்ப்பதிலும், பொழுதைக் கழித்து வருகிறார்.

பா.ஜ,வின் மூத்த தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமாக இருந்தவருமான எல்.கே.அத்வானி, சுஷ்மா சுவராஜை, எதிர்க்கட்சித் தலைவராக நியமித்து விட்டு, நாடாளுமன்ற அரசியலிலிருந்து கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

பரபரப்பான அரசியலில் இருந்தபோது நேரம் கிடைக்காத அவருக்கு, இப்போது நிறைய நேரம் கிடைக்கிறது. ''இப்போதெல்லாம் புத்தகங்கள் படிப்பதில் எனது நேரத்தை செலவிடுகிறேன். மிச் ஆல்பம் என்பவரின் 'ஹேவ் எ லிட்டில் பெயித்' என்ற புத்தகத்தை வாசித்தேன். ஏற்கனவே அவருடைய 'ட்யூஸ்டேஸ் வித் மோரி' என்ற புத்தகத்தை நான் வாசித்திருக்கிறேன்' என்கிறார் அத்வானி.

புத்தகம் படிப்பது போக, சமீபத்தில் வந்துள்ள திரைப்படங்களையும் தன் மகள் பிரதிபாவுடன் காணத் தவறுவதில்லை.

அவர் சிறந்த பத்திரிகையாளர் மற்றும் சினிமாவிமர்சகர் என்பதால், இதை விரும்புகிறார். சமீபத்தில் அவர் '3 இடியட்ஸ்' படத்தைப் பார்த்துள்ளார்.'3 இடியட்ஸ்' படம் நன்றாக இருக்கிறது. இதுபோன்ற படங்கள், சிறந்த கருத்துக்களோடு நல்ல பொழுதுபோக்கு அம்சத்துடனும் இருக்கின்றன-என்றார் அத்வானி.

அவருக்காக 'ஜெயில்' படம் சிறப்புக் காட்சியாக போட்டுக் காட்டப்பட்டது.சுஷ்மா சுவராஜுடன் அரசியல் நிலைவரத்தையும் கேட்டுத் தெரிந்து கொள்கிறார்.

'என் ரதயாத்திரை (அரசியல் வாழ்க்கை) 14 வயதில் ஆர்.எஸ். எஸ்.இல் சேர்ந்த போது ஆரம்பித்தது. அப்போது எங்கள் கனவு நாடு சுதந்திரம் அடைவதுதான். அதன்பிறகு, நாடு வளர்ந்த நாடாக முன்னேற வேண்டும் என்பது தான், கனவாக இருந்து வருகிறது. அந்தக் கனவு நிறைவேறும் வரையில், என் யாத்திரை முடிவடையப் போவதில்லை' என்று நெகிழ்கிறார் அத்வானி.

# ஆளுநராக நாராயணன் நியமனம்; மேற்கு வங்க ஆளும் கட்சி அதிருப்தி



புதுடில்லி,ஜன.26

மேற்கு வங்க மாநில புதிய ஆளுநர் நியமனம் தொடர்பாக, அம்மாநிலத்தில் ஆளும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதிருப்தியில் இருப்பதாக, தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேற்கு வங்க மாநில புதிய ஆளுநராக, முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த, எம்.கே.நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது, நியமனம் தொடர்பாக மாநிலத்தில் ஆளும் மார்க்சிஸ்ட் கட்சியினர் இடையே அதிருப்தி நிலவுகிறது.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரங்கள் கூறியவை வருமாறு:-

மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, மாநில ஆளுநர் நியமனம் தொடர்பாக, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திடம், சில பெயர்களை பரிந்துரை செய்திருந்தார். அவரும், முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவை கலந்தாலோசிக்கமல், எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாது என, உறுதியளித்திருந்தார்.

ஆனால், மத்திய அரசு, மேற்கு வங்க முதல்வருக்கு அளித்த உறுதி மொழியை மீறிவிட்டது. ஆளுநரை அறிவிக்கும் முன்னர், மாநில அரசை கலந்தாலோசிக்கவில்லை- என்றனர்.

தேர்தல் நேரத்தில், ஆளுநரின் பங்கு மிக முக்கியமானது. வரும் 2011 ஆம் ஆண்டு, மாநிலத்தில் சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், நாராயணன் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இது, காங்கிரஸின் கூட்டணி கட்சியான திரிணமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி, நீண்ட காலமாக கோரி வருவதை போல, மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த நாராயணனை பயன்படுத்தும் திட்டமாக இருக்கலாம்என, இடதுசாரித் தலைவர்கள் அஞ்சு கின்றனர்.

## இந்தியச் செய்திகள்

# கேரளா புதிய அணையைக் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ளது மத்திய அரசு!

## கண்டிக்கிறார் கம்யூனிஸ்ட் பாண்டியன்

மதுரை,ஜன.26

கேரளஅரசு புதிய அணைகட்ட, மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிகிறது. மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க., இதை எப்படி அனுமதித்தது'' என்று, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலர் தா.பாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மதுரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மத்திய அரசின் செயல்படாத திட்டங்களால், உள்நாட்டு தொழில் நசிந்து வருகிறது. வெளிநாட்டு முதலீடு பெறும் தொழில், சலுகைகளை அனுபவித்து லாபம் அடைகிறது.இதை கண்டித்து, அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து, மார்ச் 5 இல் தமிழகத்தில் சிறை நிரப்பு போராட்டம் நடத்தும். விலைவாசி உயர்வை கண்டித்து, மார்ச் 12 இல் நாடாளுமன்றத்தை, இடதுசாரி கட்சிகள் முற்றுகையிடும்.கேரளா புதிய அணை கட்ட, மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிகிறது. மத்திய அரசில் அங்கம் வகிக்கும், தி.மு.க., இதை எப்படி அனுமதித்தது?

தமிழகத்திற்கு ஒரு சொட்டு நீர்கூட வீணாகாமல் கிடைக்க, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நிகர்நிலைப் பல்கலைகளின் அங்கீகாரம் ரத்து செய்யும் விவகாரத்தில், முதலில் அனுமதி வழங்கி, தற்போது குறை சொல்லும் மத்திய அரசும் குற்றவாளிதான். நாடு முழுவதும் ஒரே சீரான கல்விக் கொள்கையின் கீழ் இவற்றை கொண்டு வரவேண்டும்.

தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்க, தேர்தல் கமிஷனுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க வேண்டும். மாநில அரசையும், பொலிஸாரையும் அப்புறப்படுத்திவிட்டு, தேர்தல் நடத்த வேண்டும்- என்றார்.

# காஷ்மீரில் 72 மணி நேரத்தில் வெடிக்க இருந்த குண்டுகள் மீட்பு!

ஸ்ரீநகர், ஜன.26

காஷ்மீரில் குடியரசு தினத்தன்று பல்வேறு இடங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்வதற்காகத் தயார் நிலையில் இருந்த 30 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

மேலும் 10 கிலோ ஆர்.டி.எக்ஸ் வெடி மருந்து உள்பட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. தலைநகர் அருகே நாடு முழுவதும் இன்று குடியரசு தினம் கொண்டாடப்பட உள்ளது. காஷ்மீர் மாநிலத்தில் குடியரசு தின விழாவை சீர்குலைக்க பாகிஸ்தான் தீவிரவாதிகள் சதி செய்துள்ளனர். அதற்காக, எல்லை வழியாக ஊடுருவ முயற்சித்து வருகின்றனர். இந்த சூழ்நிலையில், காஷ்மீரின் வடக்கு பகுதியில் உள்ள பாரமுல்லா மாவட்டத்தில் ஏராளமான வெடிபொருட்கள் இருக்கின்றன எனப் பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, தலை நகர் ஸ்ரீநகரில் இருந்து 32 கிலோமீற்றர் தொலை வில் உள்ள சீக்-இ-ம மூசா என்ற இடத்தில் அதி ரடி சோதனை மேற் கொண்டனர். அப்போது நிலத்துக்கடியில் புதைத்து வைக்கப்பட்டு இருந்த ஏராளமான வெடி பொருள்கள் சிக்கின. ஸ்ரீநகரில், குடியரசு தின விழாவில் தாக்குதல் நடத்த கொண்டு செல்வதற்காக அவை பதுக்கி வைக்கப்பட்டு இருந்தன.



72 மணி நேரத்துக் [illegible] குண்டுகளை தீவிரவாதிகள் தயார் செய்து வைத்திருந்தனர். நேற்று முன்தினம் தொடங்கி 72 மணி நேரத்துக் குள் பல்வேறு இடங்களில் வெடிக்கும் வகையில் அந்த குண்டுகள் இயக்கி வைக்கப்பட்டு இருந்தன. அவற்றை வெடி குண்டு நிபுணர்கள் செயலிழக்க செய்தனர். குடியரசு தினவிழாவை சீர்குலைப் பதற்கா கவே, அந்த குண்டுகளை தீவிரவாதிகள் தயார் செய்துள்ளனர் எனத் தெரிகிறது.

10 கிலோ ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்து, 100 கைக் குண்டுகள், 51 தானியங்கி கையெறி குண்டு வீசும் கருவிகள், 30 டெட்டனேட்டர்கள், ஒரு எந்திர துப் பாக்கி, 4 வயர்லெஸ் கருவிகள், 32 வெடி குண்டு சர்க்ட், ஏ.கே. ரக துப்பாக்கிகளில் 2ஆயிரத்து 100 ரவுண்டு சுடக்கூடிய குண்டுகள், பைகா எந்திர துப்பாக்கியில் 400 ரவுண்டு சுடக்கூடிய குண்டுகள், பீரங்கிகளை தகர்க்கும் கண்ணிவெடிகள், 600 எம்.எம். மோட்டார் குண்டுகள் என ஏராளமான ஆயுதங்களும், துப்பாக்கிகளும் அந்த இடத்தில் இருந்து கைப்பற்றப் பட்டன.

மாநில பொலிஸார், துணை இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு படையினர் நடத்திய இந்த தேடுதல் வேட்டையின் [illegible] தீவிரவாதிகள் யாரும் கைது செய்யப்படவில்லை.

# விபசார அழகிகளை திருமணம் செய்ய ஆயிரத்து 400 இளைஞர்கள் முடிவு!

புதுடெல்லி,ஜன.26

விபசார தொழிலில் தள்ளப்பட்டு, அதில் இருந்து வெளியேற விரும்பும் அழகிகளை திருமணம் செய்ய 1,400 இளைஞர்கள் முடிவெடுத்துள்ளனர்.

இவர்கள் தேரா சச்சா சவுதா என்ற சீக்கிய அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆவர். பஞ்சாப் மாநிலம் சிர்சாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர்கள் இதுதொடர்பாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், முதற்கட்டமாக 3 இளைஞர்கள் மட்டும் விபசார அழகிகளை திருமணம் செய்து கொண்டனர். மற்றவர்கள், ஓராண்டுக்குள், கொல்கத்தா மற்றும் டில்லியைச் சேர்ந்த அழகிகளை திருமணம் செய்துகொள்ளுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் இந்துவை இன்னிங்ஸால் வீழ்த்தியது யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்.மத்தியகல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் 19வயதுப் பிரிவு அணிகளிற்கிடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் இனிங்ஸால் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

கடந்த வாரம் யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 30.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி வீரர்களான பிரபாகரன், அஜித், நிக்சன் ஆகியோர் முறையே 22, 12, 08 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி வீரர்களான ஜெரிந்துஷன் 13 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கெட்டுக்களையும், வதுஷணன் 10ஓவர்கள் பந்து வீசி 17ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும், தனுஷன் 3.2ஓவர்கள் பந்து வீசி 8ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 79.5ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 346ஓட்டங்களை மட்டும் பெற்றது.

ரதீசன், எட்வேட் எடின், ஜெனேசன், ஜெரிந்துஷன், தர்சன், கோகுலன் ஆகியோர் முறையே 65, 52, 45, 39, 22, 34 ஓட்டங்களையும் திவகரன் ஆட்டமிழக்காமல் 18ஓட்டங்களையும் பெற்றனர். மானிப்பாய் இந்துக்கல்லூரி இரண்டா வது இனிங்சில் 16.1ஓவர்களில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 57ஓட்டங்களைப் பெற்றது.

லகுதன், நிக்சன் ஆகியோர் 19.14 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ஜெரிந்துஷன் 4 ஓவர்கள் பந்து வீசி 8ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3விக்கெட்டுக்களையும் றதீசன் 4ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களையும், தனுசன் ஒரு ஓவர் பந்துவீசி 2ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டினையும், தர்சன் ஒரு பந்து வீசி ஒரு விக்கெட்டையும் விதுஷனன் நான்கு ஓவர்வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கட்டையும் வீழ்த்தினர்.

யாழ்.மத்திய கல்லூரி இனிங்ஸாலும் 215ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது. (1-23)

## ஊர்காவற்றுறையில் பெரு விளையாட்டுக்கள்

ஊர்காவற்றுறை, ஜன.26

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க பணிமனை பிரதேசத்தில் வருடாந்த பெருவிளையாட்டுக்கள் ஆரம்பமாகவுள்ளன. இந்தப் போட்டிகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகவும், போட்டிகள் பற்றிய விபரங்களை ஒழுங்குபடுத்துவதற்காகவும் எதிர்வரும் முதலாம் திகதி காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மாநாட்டு மண்டபத்துக்கு வருகைதருமாறு அப் பிரதேசத்துக்குட்பட்ட சகல விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (1-325)

# மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடல் நட்சத்திர வி.க வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், ஜன.26

யங் பைற்றர் விளையாட்டுக்கழகத்தின் 5ஆவது வருட நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் 6 பேர் பங்கு பற்றும் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டமொன்றில் கடல் நட்சத்திர விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

பார்மேல் பாய்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் கடல் நட்சத்திர விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் பாய்ஸ் (ஏ) அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 21ஓட்டங்களைப் பெற்றது.

அசேன், காண்டீபன் ஆகியோர் முறையே 4, 7 ஓட்டங் களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கடல் நட்சத்திர விளையாட்டுக் கழக அணி வீரர்களான பி.மைக்கல் ஒரு ஓவர் பந்து வீசி ஏழு ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கட்டினையும், நிஷன் ஒரு ஓவர் பந்து வீசி மூன்று ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

22ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கடல் நட்சத்திர விளையாட்டுக்கழக அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 24ஓட்டங்களைப் பெற்றது.

பி.மைக்கல் ஒன்பது ஓட்டத்தினையும், நாதன், டிஸ்சன் ஆகியோர் ஆட்டம் இழக்காமல் 13.1 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் கார்மேல் பாய்ஸ் (ஏ) விளையாட்டுக்கழக வீரரான அஜத் ஒரு ஓவர் பந்து வீதி ஐந்து ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். (1-23)

## புங்குடுதீவு மக்களுக்கு உபஉணவுப் பொருள் விநியோகம்

புங்குடுதீவு, ஜன.26

இடம்பெயர்ந்த புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு சேவாலங்கா நிறுவனதினரால் உப உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வோதய வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அங்கத்தவர்களின் அடிப்படையில் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நிறுவன உதவியுடன் மேற்படி புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த பன்னிரண்டு கிராம சேவையாளர்கள் பிரிவுகளைச் சேர்ந்த 464 குடும்பங்களுக்கு இப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக சேவாலங்கா நிறுவன திட்ட முகாமையாளர் க.சபேசன் தெரிவித்தார். (ஒ-16-188)

## ஈழத்துச் சிதம்பரத்தில் ஏகாதச ருத்ரஹோமம்

காரைநகர், ஜன.26

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஏகாதச ருத்திர ஹோமம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகின்றன. (ஒ-16)


## பூபதி காட்சியறையில்......

★ எலக்ரோனிக்தராசு (ஒருவருட உத்தரவாதம்)
★ பேக்கரிக்குத் தேவையான சகலவிதமான உபகரணங்கள்
★ ஹோட்டலுக்குத் தேவையான உணவை சூடாகவும், குளிராகவும் வைத்திருக்கும் உபகரணங்கள்
★ வியாபார நிலையங்களில் பொருள்களை அடுக்கிவைப்பதற்கான அழகிய ராக்கைகள்
★ கைத்தொழிலுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் ஒரே கூரையின் கீழ்

தொடர்பு:-0777427777
(சி/564453)

## பஸ் விற்பனைக்குண்டு

WPNE தொடரிலக்கமுடைய TATA CITY RIDER பஸ் உடன் விற்பனைக்குண்டு.
[illegible]
(C/564452)


# மரண அறிவித்தல்கள்

## சிற்றம்பலம் செல்லம்மா

அந்திரான், கரவெட்டி வடக்கைச் சேர்ந்த சிற்றம்பலம் செல்லம்மா நேற்று (25.01.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வல்லிபுரத்தின் அன்பு மகளும், சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாநாயகம் மற்றும்கந்தசாமி (அதிபர்), வேலாயுதம், விநாயகம் (விநாயகர் சைக்கிள் வேக் சொப்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குகானந்தன் (பொறியியலாளர்), மாதினி (ஆசிரியை-அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), கமலினி (கனடா), நந்தினி, தேவா னந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும், ரோசினியின் (உடுப் பிட்டி- மகளிர் கல்லூரி ஆசிரியை) பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2010) செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அந்திரான்,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.
(C/564450)
தகவல்,
குடும்பத்தினர்.

## செல்லத்துரை ஞானரெத்தினம்



மண்கும்பான் கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஞானரெத்தினம் நேற்று (25.01.2010) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், துரைராசா-தெய்வயானை தம்பதிகளின் மருமகனும், ராஜினியின் பாசமிகு கணவரும், சிவராசா, இராசாத்தியம்மா, குணரட்ணம் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோத ரனும் பரமேஸ்வரி, சிறீகரன் (அமரர்), ரகுராஜ், ரவி, பட்டு ஆகியோரின் மைத்துனரும், கங்காஜினி, மதினகாஜினி, சுகந்தினி ஆகியோரின் சிறிய தகப்பனாரும், பிரதீபா-வர்ணகுலசீலன், பிரசாந்தன், பிரதாபன், பிரகீதா-ரேவதி, றேனுஜன் ஆகியோரின் மாமனாரும், சரண்ஜா, கஜேதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர வதிவிடம்,
4ஆம் வட்டாரம்,
மண்கும்பான் கிழக்கு.

தற்காலிக முகவரி,
தாவடி தெற்கு,
முருகமூர்த்தி கோவிலடி,
கொக்குவில்.

தகவல்,
சகோதரன் - செ.சிவராசா,
(C/564447)

## கனகசபை சபாரத்தினம் (சபா)



(EY 4446 கார் உரிமையாளர்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சபாரத்தினம் நேற்று (25.01.2010) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கனகசபை-பொன்னம்மா தம்பதிகளின் மகனும், புனித வதியின் கணவரும், அமரர்களான சின்னையா- பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதி (வைத்திய அதிகாரி, சித்த ஆயுள்வேதம், பிரதேச சபை, மானிப்பாய்), குகதாஸ், ரவிக்குமார் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2010) செவ்வாய் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தி நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம்.
(94264)
தகவல்,
மனைவி, பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவலைகள்

| இன்புற்றிருக்க வந்தது | | நினைத்திருக்கச் சென்றது |
|---|---|---|
| 23 |  | 27 |
| ★ | | ★ |
| 10 | | 12 |
| ★ | | ★ |
| 1962 | | 2009 |

## அமரர் இராசமணி இரகுநாதன் (மணி திரவியம்)

அகத்தினில் இன்புற்றிருந்தோம் அம்மா
உன் அணைப்பிருந்ததால்
சுகத்தினில் குறைகளின்றி சுந்தரமாய் ஆகிநின்றோம்
அம்மா உன் துணை இருந்ததால்
இகத்தினில் எந்தையை அன்றிழந்தோம் ஏந்தியவளே
இன்று உன்னையும் இழந்தோம்
முகத்தினில் மலர்வும் மூத்து நிற்கும் அன்பும்
எம் முகத்திலம்மா இனிக் காண்போம் ?......

வைரவர் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

அன்னையின் ஆத்ம
சாந்தியை வேண்டி நிற்கும்
பிள்ளைகள்.
(94263)

# மரண அறிவித்தல்

## சபாபதி சீவரத்தினம்



திருநெல்வேலி மேற்கு, தலங்காவற் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத் தினம் நேற்று (25.01.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்பாசாரியார் சபாபதி-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிற்பாசாரியார் கந்தசாமி மற்றும் சிவபாக்கியம், யோகம்மா, பராசக்தி, தங்கப்பொன் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை மற்றும் கார்த்திகேசு, காலஞ்சென்றவர்களான கந்தையா,இராசநாயகம் ஆகியோரின் மைத்துனரும், கேதீஸ்வரன் (அபுதாபி), கமலாதேவி, லிங்கேஸ்வரன் (ஹொலன்ட்), சிவனேஸ்வரன் (ஜேர்மனி), தனபாலசிங்கம் (பிரான்ஸ்), நல்லலிங்கம் (லண் டன்), காலஞ்சென்ற தேவராணி மற்றும் வசந்தகுமார் (லண் டன்), தேவகுலசிங்கம் (பொறியியல் பிரிவு CTB திருகோணமலை), சோதிலிங்கம், சற்குணதேவி (தட்டெ ழுத்தாளர் - கட் டடத் திணைக்களம்), சிவநாதன் ஆகியோரின் அருமை மாம னும் ஆவார்.

அன்னாரின் அந்திமக்கிரியைகள் நாளை (27.01.2010) புதன் கிழமை தலங்காவற் பிள்ளையார் கோவிலடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனம் செய்வதற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலங்காவற் பிள்ளையார்
கோவிலடி, திருநெல்வேலி.
(C/564448)
தகவல்,
செல்வி சபாபதி தங்கப்பொன்
(இளைப்பாறிய ஆசிரியை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல், மனையியல் கண்காட்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நகர் அடைக்கலமாதா தேவாலய வளாகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் :
யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.ஏ.ஜெயராசா மங்கள விளக்கேற்றுவதையும் யாழ்.பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் கண்காட்சியைத் திறந்து வைப்பதையும் காட்சியில் இடம்பெற்ற கைப்பணிப் பொருள்களையும் காணலாம். (படங்கள் : லக்ஸ்மன்)

# அ' அட்டைகள் இல்லாத மலையகத் தொழிலாளர் வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகள்

## தேர்தல் ஆணையாளர் மனோகணேசனிடம் உறுதி

கொழும்பு, ஜன.26

அடையாள அட்டைகள் இல்லாத மலையக வாக்காளர்கள், தமது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருக்கும் பட்சத்தில் இன்றைய தேர்தலில் வாக்களிக்க முடியும். இதற்கான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசனிடம் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

மனோ கணேசன் எம்.பி நேற்றுக்காலை தேர்தல் ஆணையாளரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த உறுதி மொழி தரப்பட்டதென அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மலையகத்தில் கடந்த சில நாள்களாக தேசிய அ' அட்டைகள் திட்டமிட்ட முறையில் பலாத்காரமாக பறிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய அடாவடி நடவடிக்கை கள் காரணமாக தமது தேசிய அ' அட்டைகளை பறிகொடுத் தவர்கள் அனைவரும் தமது பெயர்கள் வாக்காளர் பதிவில் இருக் கும் பட்சத்தில் வாக்களிப்பு நிலையங்க ளுக்குச் சென்று அடையாள அட்டைகள் இன்றியே வாக்களிக்கலாம்.

தேசிய அ' அட்டைகள் இல்லாமல் வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகின்ற வாக்காளர்களை வாக்களிப்பதற்கு அனுமதிப்பது தொடர்பில் விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறை படுத்தப்படும் எனவும்-

இது தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் ஒவ்வொரு வாக்களிப்பு நிலைய பிரதம அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது எனவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் தேசிய அ' அட்டைகளையும், வாக்காளர் அட்டைகளைப் பலவந்தமாக அபகரிக்கும் நடவடிக்கைகள் நுவரெலியா, பதுளை, கண்டி, களுத்துறை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் நடைபெறுகின்றன.

குண்டர்களின் உதவியுடன் அப்பாவித் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறிக்க எத்தனம் மேற்கொள்ளப்படுகின்றது.

இது தொடர்பாக பெருந்தொகையான தொழிலாளர்கள் முறையீடுகள் செய்துள்ளனர். இந்நிலையில் தேர்தல் ஆணையாளருடன் நடத்தப்பட்டுள்ள பேச்சுகள் மூலம் ஆணையாளர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

எனவே, அ' அட்டைகளையும், வாக்காளர் அட்டைகளையும் பறிகொடுத்த - இதுவரை அவை கிட்டாத அனைத்து தொழிலாளர்களும் இன்று 26 ஆம் திகதி காலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை நமது அமைப்பாளர்கள் தோட்டத் தொழிலாளர்களிடம் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும். வாக்காளர் அட்டைகளையும், அ' அட்டைகளையும் காடையர்களிடம் பறிகொடுத்துவிட்ட காரணத்தில் எந்தவொரு தொழிலாளியும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் இருக்கக் கூடாது தேவையில்லை - என்று அதில் உள்ளது. (சி)

# தேர்தலின் போதும் முடிந்த பின்பும் வன்முறை நீக்கி அமைதி காத்திடுங்கள்

## சர்வசமய சம்மேளனம் கோரிக்கை

காரைதீவு, ஜன. 26

''இன்று நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின் போதும் அதன் பின்னரும் வன்முறைக்கு யாரும் இடமளிக்கவேண்டாம். அமைதி காத்து இன நல்லுறவைப் பேண வேண்டும்.''

-இவ்வாறு அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனம் விடுத்துள்ள தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் நிர்வாக சபைக் கூட்டம் சாய்ந்தமருது தலைமையகத்தில் தலைவர் டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் தலைமையில் கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றபோது மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

''நாட்டில் பல தேர்தல்களை நாம் சந்தித்து விட்டோம். அதுபோலவே இன்றைய தேர்தலும் ஒன்று. ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய வாக்குரிமையை பயன்படுத்த உரிமையுண்டு. அதில் யாரும் தலையிடக்கூடாது. அவர்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும். இதில் இடையூறுகளை ஏற்படுத்த எவரும் முயற்சி செய்யக் கூடாது.

தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் எந்தவித வன்முறைக்கோ, இன ஐக்கியத்திற்கு குந்தகமான நடவடிக்கைகளுக்கோ இடமளிக்கக் கூடாது. கருத்து வெளியிடுவது தனிமனித சுதந்திரம் அது ஒரு பொழுதும் வன்முறையைத் தூண்டுவதாக அமைந்து விடக்கூடாது. எனவே, முடிவுகள் எவ்வாறானதாக அமைந்தாலும் அமைதி பேணிய சுமூகமான சூழல் நிலவ அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் - என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டில் பஸ் போக்குவரத்து நேற்று முழுநாளும் சீர் குலைவு

## அரச ஊழியர், பயணிகள் பெரும்பாடு

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ். குடாநாட்டில் நேற்று பஸ் சேவைகள் சீர் குலைந்திருந்ததால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர்.

போக்குவரத்துச்சபை பஸ்கள் மற்றும் மினிபஸ்கள் யாவும் தேர்தல் கடமைக்காக ஒதுக்கப்பட்டு விட்டதால், பயணிகள் சேவைகளில் நேற்று மிகக்குறைந்த பஸ்கள், மினிபஸ்களே ஈடுபட்டிருந்தன.

இதனால் அரச, தனியார், நிறுவனங்களின் ஊழியர்கள் கடமைக்குச் செல்வதற்காக நீண்ட நேரம் பஸ் நிலையங்களிலும் தரிப்பிடங்களிலும் காத்திருந்தனர். அதே போன்று வீடுகளுக்கு திரும்பிச் செல்லவும் பெரும் சிரமப்பட்டனர்.

சில பாதைகளில் போக்குவரத்துச் சபையின் சேவை வழமையிலும் மிகக் குறைந்து காணப்பட்டதால் மினிபஸ்களில் பயணிகள் முண்டியடித்தபடி மிதி பலகைகளில் தாங்கிக் கொண்டு பயணம் செய்ததை அவதானிக்க முடிந்தது. (ஒ-188)

# இருவரில் எவர் ஆறாவது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 லட்சத்து 74 ஆயிரத்து 464 வாக்காளர்களும் அதிகளவாக வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கின்றனர்.

மோதல்களால் பாதிக்கப்பட்ட வன்னியில் 2லட்சத்து 66ஆயிரத்து 975 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 209 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் 624 வாக்களிப்பு நிலையங்களில் 7 லட்சத்து 21 ஆயிரத்து 359 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். அதே சமயம், மட்டக்களப்பில் 362 நிலையங்களில் 3 லட்சத்து 33 ஆயிரத்து 644 பேரும், திருகோணமலையில் 278 நிலையங்களில் இரண்டு லட்சத்து 41 ஆயிரத்து 133 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 430 வாக்களிப்பு நிலையங்களில் 4 லட்சத்து 20 ஆயிரத்து 835 பேர் வாக்களிக்க உள்ளனர்.

தேர்தல் களத்தில் 22 வேட்பாளர்கள் உள்ள போதிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றிக்குத் தலைமை வகித்த தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதியும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா ஆகிய இருவருக்கும் இடையிலேயே நெருக்கமான போட்டி நிலவுகின்றது.

தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையப் போகின்றன என்பது குறித்து நம்பகத் தன்மை மிக்க கருத்துக்கணிப்புகள் எதுவும் வெளிவராத போதிலும் மிக நெருக்கமான கடும் போட்டி நிலவும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக் காணப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசின் இராணுவ நடவடிக்கையின் காரணமாக மிக மோசமான துயரங்களை அனுபவித்த தமிழ் மக்களே ஜனாதிபதித் தேர்தலில் எவர் வெற்றி பெறுவார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றனர் என்ற பரவலான கருத்தும் காணப்படுகின்றது.

இரு பிரதான வேட்பாளர்களும் கடந்த இரு மாதங்களாக நாடளாவிய ரீதியில் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டதுடன் பரஸ்பர குற்றச்சாட்டுகளையும் சுமத்தி வந்துள்ளனர். அத்தோடு வாக்குறுதிகளையும் அள்ளி வீசி வந்துள்ளனர்.

மேலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றிக்கு இருவரும் பரஸ்பரம் உரிமை கோரியுள்ளனர்.

மிகக் கடுமையான மோதல் இடம்பெற்றது. எனினும், இருவரும் தமது கொள்கைகள் தொடர்பாக மோதிக்கொள்ளாமல் மற்றையவரின் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலேயே கவனம் செலுத்தினர்.

சரத் பொன்சேகா அரசியல் அனுபவமற்றவர் எனத் தெரிவித்து வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இராணுவத்தில் பல வருடங்கள் பணியாற்றியவர் என்பதால் பொன்சேகா இறுதியில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவார் என்கிறார்.

இதேவேளை ராஜபக்ஷவின் குடும்ப ஆதிக்கம், தவறான ஆட்சி மற்றும் ஊழல் போன்றவை காரணமாக பொதுமக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது என சரத் பொன்சேகா குற்றஞ்சுமத்தியுள்ளார். மேலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையே இதற்குக் காரணம் என்றும் அதனைத் தான் ஒழிக்கப்போகிறார் எனவும் பொன்சேகா உறுதியளித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றி ஆட்சி மாற்ற மொன்றைக் கொண்டுவருவதற்காக பல எதிர்க் கட்சிகள் தங்களது கொள்கை வேறுபாடுகளை மறந்து சரத் பொன்சேகாவின் பின்னால் அணிதிரண்டுள்ளன.

இதில் பிரதான தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளமை முக்கியமானது.

இதேவேளை, இரு வேட்பாளர்களும் சிறுபான்மைத் தமிழர்களின் ஆதரவைப் பெறுவதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளபோதிலும் - தமிழ்மக் களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வு காண்பதற்கான யோசனை எதனையும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருவருமே முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் வன்முறைகள், வாக்கு மோசடிகள் குறித்த அச்சத்தின் மத்தியில் இன்றைய தேர்தல் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பிரசார காலம் மிக மோசமான வன்முறைகளை சந்தித்ததுடன், ஆறு பேர் கொல்லப்பட்டனர் என்பதும். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் கண்காணிப்புப் பணிகளில்35,000 பேர் வெளிநாடுகளையும் உள்நாட்டையும் சேர்ந்தோர்

கொழும்பு, ஜன. 26

நாடளாவிய ரீதியில் இன்று நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த சுமார் 35 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக சுமார் ஆயிரம் வாகனங்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் பொது நலவாய மற்றும் தெற்காசிய பிராந்தியம் ஆகிய நாடுகளிலிருந்து இலங்கை வந்திருக்கும் 85இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தமது பணிகளை ஆரம்பித்திருக்கின்றனர் எனத் தேர்தல் திணைக்களம் மற்றும் தனியார் கண்காணிப்பு அமைப்புகளின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேர்தல் கண்காணிப்புக்கான வலையமைப்பு, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், தேசிய வாக்களிப்பு கண்காணிப்பு நிலையம், பவ்ரல்,கபே உள்ளிட்ட சில தனியார் தேர்தல் கண்காணிப்பு நிலையங்கள் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்திருக்கின்றன எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

தேர்தல் ஆணையாளர் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு தெற்காசிய பிராந்தியத்திலிருந்து 40 பேரையும் பொது நலவாய நாடுகளிலிருந்து 10 பேரையும் இலங்கைக்கு வரவழைத்திருக்கிறார்.

இதேவேளை, பவ்ரல் அமைப்பு 17 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களையும் சி.எம்.ஈ.வி.18 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களையும் வரவழைத்திருக்கின்றது என அவற்றின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், மியன்மார், தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேஷியா, ஜப்பான், நோர்வே, அமெரிக்கா, சுவீடன், கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து இலங்கை வந்துள்ளனர்.

பவ்ரல் அமைப்பு ஆறாயிரம் உள்நாட்டு மற்றும் 17 வெளிநாட்டவர்களை கண்காணிப்பில் ஈடுபடுத்தவிருக்கிறது என அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

ஆசிய நாடுகளிலிருந்தும் ஜப்பான், நோர்வே, அமெரிக்கா, சுவீடன் ஆகிய நாடுகளிலிருந்து இலங்கை வந்திருக்கும் 17 பேரும் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கண்டி மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பவ்ரல் அமைப்பினால் 352 வாகனங்கள் இம்முறை நடமாடும் சேவைக்கு ஈடுபடுத்தப்படவுள்ளன என ரோஹண கூறினார்.

சி.எம்.ஈ.வி. நிலையம் 3,500 உள்நாட்டவர்களையும் 18 வெளிநாட்டவர்களையும் கண்காணிப்பில் ஈடுபடுத்தியுள்ள அதே நேரம் 80 வாகனங்களை நடமாடும் சேவைக்காக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பியிருக்கிறது எனவும் அதன் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆசிய நாடுகளிலிருந்தும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து 18 பேரை சி.எம்.ஈ.வி. வரவழைத்துள்ளது. இதில் நேபாளத்திலிருந்தே ஆகக் கூடுதலாக 10 கண்காணிப்பாளர்கள் வந்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, புத்தளம், அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தறை, ஆகிய மாவட்டங்களில் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனரெனவும் அவர் கூறினார்.

---

## வாக்களிப்புக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாவட்ட அத்தாட்சி அலுவலகங்களில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் 11 ஆயிரத்து 98 வாக்கு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் உத்தியோகத்தர்கள் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். 888 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படவுள்ளன. (சி)

---

## ரணிலின் வீட்டைச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான், அத்தகைய 'வாரண்ட்' உத்தரவு ஒன்றைப் பிறப்பிப்பதற்கான போதிய ஆதாரங்களையோ, சாட்சியங்களையோ பொலிஸார் சமர்ப்பிக்கத் தவறிவிட்டனர் என்றும் குறிப்பிட்டார்.

'த சண்டே ரைம்ஸ்' வார இதழை வெளியிடும் விஜய குறூப் நிறுவனத்தின் பியகம அச்சகத்தைச் சோதனையிடுவதற்கான 'வாரண்ட்' உத்தரவு கோரி பொலிஸார் விடுத்த விண்ணப்பத்தையும் நீதிவான் இதே காரணத்தின் அடிப்படையில் நிராகரித்தார்.

எனினும், கிருலப்பனையில் உள்ள இரு தொழிற்சாலைகளைச் சோதனையிடுவதற்கான உத்தரவைப் பொலிஸார் நீதிமன்றத்திடம் பெற்றுக்கொண்டனர். (அ-சி)

---

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா பாரிய பங்களிப்பை நல்கி வருகிறது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் துணைத் தூதரகம் ஒன்றை நிறுவுவதற்கும் அது முயற்சி மேற்கொண்டு வருகிறது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கொழும்பில் தூதரகத்தையும், கண்டியில் துணைத்தூதரகத்தையும் கொண்டுள்ள இந்தியா மற்றொரு துணைத் தூதரகத்தை யாழ்பாணத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கான அனுமதியை இலங்கையிடம் புதுடில்லி கோரியுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

---

## படைத்தரப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்பட்டதீ.

தேர்தல் சட்டங்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட முனைந்தனர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என இராணுவ ஊடகப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவர்களிடமிருந்து பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள் என எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

---

## பிரதான வேட்பா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளன.

தேர்தல் பிரசாரப் பணிக்காக பிரதான கட்சிகள் எவ்வாறு நிதி திரட்டின என்பது குறித்த தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை என ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

பாரியளவு பொருட்ச் செலவில் தேர்தல் பிரசார விளம்பரங்கள் மற்றும் பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன எனவும், இதற்கான வருமான மூலங்கள் உரிய முறையில் வெளிப்படுத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் நடைபெறுகிறது என்பதை சகல வழிகளிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் இந்த அமைப்புகள் தெரிவித்துள்ளார். (அ-சி)

---

## அமைதியான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் நடைபெறும் - அனைத்து மக்களும் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய - இந்தத் தேர்தல் வெளிநாடுகளில் குறிப்பிடத்தக்க ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ள மையை அரசு அறிந்துள்ளது.

முப்பது வருட கால பயங்கரவாதத்திற்குப் பின்னர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியுள்ள இலங்கை அரசு, நாட்டில் சுதந்திரமான, நீதியான தேர்தலை நடத்துவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளது.

மோதல் நடைபெறும் சூழலில் இவ்வாறான தேர்தல்களை நடத்த முடியாது என்ற காரணத்தினாலேயே இலங்கை அரசு நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்புகளுக்கு பயங்கரவாதத்தினால் ஏற்படும் ஆபத்தை முடிவிற்குக் கொண்டுவரத் தீர்மானித்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது . (அ-சி)

---

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

வடக்கிலிருந்து இந்தத் தகவல் தமக்குக் கிடைத்தது என ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து இணையத்தளம் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள அப்பாவித் தமிழர்களிடம் பலவந்தமாக அடையாள அட்டைகள் பறிக்கப்படுகின்றன. தெற்கிலிருந்து பெருந்தொகை சிங்களவர்கள் அங்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவத்தின் பலம் அதிகமாக உள்ளதால் அரசின் துஷ்பிரயோகச் செயற்பாடுகளும் அதிகமாக இருக்கும் என நம்புகின்றோம்.

அது தவிர வடக்கு கிழக்கில் இன்னும் பகிர்ந்தளிக்கப்படாமல் ஏராளமான வாக்காளர் அட்டைகள் தபால் நிலையங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

அதற்குப் பதிலாக என்ன செய்ய வேண்டும் என்பதை அரசு இது வரை சொல்லவில்லை. இவ்வாறான சம்பவங்களை நோக்கும்போது நீதியான, சுதந்திரமான தேர்தல் ஒன்று நடைபெறுமா என்பதில் சந்தேகம் தோன்றியுள்ளது என்றோர்.

---

## யாழ்.மாவட்டத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை எடுத்துச்செல்லப்பட்டன.

இத் தேர்தலில் 6இலட்சத்து 30ஆயிரத்து 548பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன் மூவாயிரம் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

*(படங்கள் 17 ஆம் பக்கத்தில்)*

---

## வாக்களிப்பதற்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தகைய வாக்காளர் முதலில் தமது வாக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தைக் கண்டறிந்து உறுதிப்படுத்திக்கொண்டு, உரிய அடையாள அட்டை அல்லது ஆவணத்துடன் அந்த நிலையத்துக்குச் செல்ல வேண்டும்.

அங்குள்ள அதிகாரிகளிடம் தனது பெயர், விலாசம் மற்றும் விவரங்களை வழங்கி, உரிய வாக்குப் பதிவை இனங்கண்டு, தனது அடையாளத்தை உரிய ஆவணம் மூலம் உறுதிப்படுத்திய பின்னர் அவர் வாக்களிக்க முடியும்.

வாக்காளர் பதிவேட்டில் பெயர் பதியப்பட்டுள்ள அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை உள்ளது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு ஆளடையாளத்தை நிரூபிக்க எட்டு வகையான ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும் என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அந்த ஆவணங்களின் விவரம் வருமாறு:-

* தேசிய அடையாள அட்டை
* செல்லுபடியான கால எல்லையைக் கொண்ட கடவுச் சீட்டு
* செல்லுபடியான கால எல்லையைக் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரம்.
* ஓய்வூதிய அடையாள அட்டை
* முதியோர் அடையாள அட்டை
* ஆள்பதிவுத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வணக்கத்துக்குரிய குருமாருக்கான அடையாள அட்டை
* ஆள்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டை
* தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை

மேற்படி எட்டு ஆவணங்களையும் வைத்திராது வாக்காளர்கள் யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலக, உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஊடாக விநியோகிக்கப்பட்ட விசேட அடையாள அட்டையும் பயன்படுத்த முடியும்.

(அ-16)




பாக்யா இசைப்பயிலகம்

மணியர்பதி வீதி கொக்குவில் மேற்கு

தைப்பூசத் தினத்தன்று

இசை, இசைவாத்திய வகுப்புக்கள் ஆரம்பம்

நேரம்: மாலை 4.00 மணி

| மிருதங்கம் | சங்கீதம் | ஓகன் | வயலின் |
|---|---|---|---|
| சனி: 3.00 மணி | செவ்வாய்: 3.00 மணி | செவ்வாய்: 4.00 மணி | புதன்: 4.00 மணி |
| ஞாயிறு: 3.00 மணி | வியாழன்: 3.00 மணி | சனி: 4.00 மணி | ஞாயிறு: 4.00 மணி |

பாக்யா காகிதாதிகள்
121, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

தொலைபேசி
060 221 8382



திருமண வைபவம் ஒத்திவைப்பு

*அன்புடையீர்!*

*நிகழும் சுப மங்களகரமான விரோதி வருடம் தைத்திங்கள் 14ஆம் நாள் (27.01.2010) புதன்கிழமை மு.ப. 9.36 தொடக்கம் 10.58மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்*

திரு. திருமதி சபாரத்தினம் கனகாம்பிகை தம்பதியினரின் புதல்வன்
**கிருஷ்ணச்செல்வன்**
அவர்களுக்கும்



திரு. திருமதி ஸ்ரீதரன் தவமலர் தம்பதியரின் புதல்வி
**மைத்திரிகா**
அவர்களுக்கும்

*வண்ணை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவில், ஸ்ரீ லஷ்மி நாராயணன் திருமண மண்டபத்தில் நடைபெறவிருந்த திருமண வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.*

திரு.திருமதி சபாரத்தினம்,
குடும்பத்தினர்.
கேணியடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
0773824994

திரு.திருமதி ஸ்ரீதரன் குடும்பதினர்,
(திரு. அ.சுந்தரலிங்கம்),
162/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
0212226491 0777747095

(94265)



London A/L and O/L Examinations in Jaffna

**Vacancies for Part Time Teachers**

Gateway, Sri lanka's reputed institution for Academic Excellence at London A/L and O/L examinations intend conducting classes (after school hours and weekends) for those who wish to obtain these internationally recognized qualifications in addition to Sri Lanka A/L and O/L qualifications.

We require teachers with appropriate qualifications and experience (with teaching experience at Senior Secondary or university Level)

**London A/L**
- Physics
- Chemistry
- Biology
- Mathematics

**London (IGCSE) O/L**
- Physics
- Chemistry
- Biology
- Mathematics
- English Language
- ICT

**Classes & Examinations would be conducted at the Gateway Jaffna Branch since Gateway is an Approved Examination Centre.**

Classes commence in March 2010 June 2011 examinations

*If you fulfill the above mentioned requirements, have a strong command of the English Language and wish to further your career with us, Apply with your CV and contact details.*

HR Manager,
6, Rodney Street, Colombo 08.
Tel: 011-2699327 Fax: 011-2681108
E-mail: hrm@gatewayworldwide.com

GATEWAY Institute of Advanced Studies

347, Kasthuriar Road, Jaffna 0215675555, 0212227967


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.01.2010 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org